
கல்கி
குடும்பத்துடன் களிக்க...
KALKI
26.3.2006 ரூ.8.00
80 பக்கங்கள்
அறிந்தும் அறியாமலும்...
உடைபடும் உண்மைகள்!


பெண் மயங்கும் பொன்நகை.!
கல்யாண் ஜுவல்லர்ஸின்
பொன் ஆபரணப் புன்னகை..!
கல்யாண்
ஜுவல்லர்ஸ்
100 அடி ரோடு, கோவை. போன் : 2528883

மரத்துக்கு ஆணி அடிக்கும்போது கூட மனமுருகி மன்னிப்பு கேக்கிறவரு மாதவன். அப்படிபட்டவர், கண் முன்னே நடந்த ஒரு அநியாயத்தைத் தட்டிக் கேக்கறார். அவர் வீடு திரும்பறதுக்குள்ள குடும்பத்தையே போட்டுத் தள்ளிடுது வில்லன் கும்பல். இந்தக் கட்டத்துல வழக்கமான தமிழ் சினிமா ஹீரோ என்ன செய்வாரோ அதைச் செய்யலை நம்ம தம்பி.

மெஸேஜ் சொன்னா ரசிகர்கள் ரசிக்க மாட்டாங்கன்னு சொல்றவங்க ஒருநடை தம்பி போய் பார்க்கறது உத்தமம். இயக்குனர் சீமானோட ஒவ்வொரு வசனத்துக்கும் தியேட்டர்ல விசில் பறக்குது. 'சொன்னா எவன் கேட்கறான். அடிச்சாத்தான் திருந்தறான்'னு மாதவன் அப்பப்போ சொல்றது நச். அட்டூழியத்தால ஏற்படற இழப்புகளை ரௌடிகளுக்குப் புரிய வைக்க மாதவன் கையாளும் யுக்திகள் ரொம்பவே புதுசு.


'அலைபாயுதே'வுக்கு அப்புறம் மாதவனுக்கு அமைஞ்ச சிறந்த கதாபாத்திரம்னு தம்பியைச் சொல்லலாம். ஒரு நொடிகூட இமைக்காமல் கண்களாலேயே மிரட்டறதும், வசன உச்சரிப்பும் அபாரம். 'சட்டத்தை நீ எப்படி கையில எடுத்துக்கலாம்'னு மாதவனுக்கு அட்வைஸ் பண்ற பூஜாவை, இன்னொரு சமயம் ரௌடிகள் அவமானப்படுத்தும்போது 'இப்ப நான் என்ன செய்ய'ன்னு மேடி கர்ஜிக்குற காட்சி அசத்தல். ஆனா காதலையே அறவே வெறுக்குற மாதவனுக்கு பூஜாவோட ரெண்டு காதல் பாடல்கள் (கற்பனைதான்னாலும்) உறுத்துது.

பாலசுப்ரமணியத்தோட ஒளிப்பதிவு முதல் தரம். வித்யாசாகரோட பாடல்கள் ரொம்பவே சுமார். வில்லனான பிஜூ மேனன் கதாபாத்திரம் இன்னும் கூர்மையா செதுக்கப்பட்டிருக்கலாம். வடிவேலு, மணிவண்ணன் இருவரோட பங்களிப்பும் ரொம்பவே குறைவு.

கடைசியில வில்லன்களோட கூர் ஆயுதம் மாதவனைப் பதம் பார்த்துடுது. தன்னைக் காப்பாத்த வர்ற ஒரு கல்லூரி மாணவன்கிட்ட, "போதும்பா, அன்னைக்கு நான் ஒருத்தனா அநியாயத்தைத் தட்டிக் கேட்டு இழந்ததெல்லாம் போதும். என்னை மாதிரி இன்னொருவன் உருவாக வேண்டாம்"னு தடுக்கறாரு மாதவன். ஆனா எதுக்கும் தயங்காம ஒரு மாணவ கும்பலே மாதவனைக் காப்பாத்துது. இந்த ஒரு காட்சியிலேயே தம்பியின் தாக்கத்தால உருவாகிற சமுதாய மாற்றத்தை அழகா படம் பிடிச்சுடறாரு இயக்குநர்.

படம் நெடுக தூவப்பட்டிருக்கிற புரட்சியாளர்களின் கருத்துகளும் அதை இயக்குனர் கையாண்ட விதமும்தான் படத்தை ரொம்பவே வித்தியாசப்படுத்தியிருக்கு. தமிழ் சினிமாவுக்கு மட்டுமல்ல, சமுதாயத்துக்கும் தம்பி மாதிரியான படங்கள் ரொம்பவே தேவை.

- லஜ்ஜாவதி



தம்பி



வட்டமேஜை



இந்திரா சௌந்தர்ராஜனின் நாவல்களில் 'எங்கே என் கண்ணன்' ஒரு கோஹினூர் வைரம். கல்கியில் மட்டுந்தான் இத்தனை சிறப்பான தொடரைப் பார்க்க முடியும்.

மதுரை, வசந்தாமணி

இன்னும் சில வாரங்களுக்கு, பழக்கதோஷத்தில் கல்கியின் பக்கங்களைப் புரட்டி 'எங்கே என் கண்ணனை'த் தேடப் போகிறோம்.

கரூர், ஆர்.ராஜலட்சுமி

'**எ**ங்கே என் கண்ணன்' தொடருக்கான வேதாவின் ஓவியங்கள் அற்புதம்.

மெய்யனூர், கி.சௌந்திரம்

நீர் கார்ட்டூன் போட்ட நேரம் 'ஜெ' தூண்டிலில் பெரியமீனே சிக்கி விட்டது!

சர்க்கார்பதி, பி.ஜெயபிரகாஷ்

ஆரணி யுவராஜின் சிறுகதை நல்ல படிப்பினை!

சென்னை, ஜே.துரைராஜ்

வசந்தம் மேரேஜ் சக்சஸ் ஸ்டோரி மாறுதலாக இருந்தது.

மணவாள நகர், என்.பி.எஸ்.

'**கா**தல்' சந்தியாவால் சிந்திக்க மறந்தேன்!

தூத்துக்குடி, சிவராமசுப்பிரமணியன்

பண்ருட்டியாரின் பேட்டி, தேனில் தோய்த்தெடுத்த பலாச்சுளை!

வேலூர் - 6, கே.கஸ்தூரிகதிர்வேல்


தலைவலி கட்டுரை அபாரம். இப்படிப்பட்ட கட்டுரைகளே கல்கியின் வெற்றி ரகசியம்.

விழுப்புரம், டாக்டர் எஸ்.வெற்றிவேல்

எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சையை மூக்கு நோய்களுக்கு முதன் முதலாக இந்தியாவில் 1990-ம் ஆண்டு ஆரம்பித்த ஆறு டாக்டர்களில் ஒருவர் என்ற

சிந்திக்க

முறையில் இந்த மறுப்புக் கடிதத்தை தாழ்மையுடன் எழுதுகிறேன். மும்பையைச் சார்ந்த டாக்டர் கிர்த்தனே, டாக்டர் பிரபோத், டில்லியைச் சேர்ந்த டாக்டர் ராய், பொள்ளாச்சியைச் சார்ந்த டாக்டர் ஆனந்த், மணிப்பாலில் பணி



'**வி**ஜயகாந்த் பேசுகிறேன்' தொடர் அருமை. பொதுவாழ்வுக்கு வருபவர்கள் மக்கள் வாழ்வை மட்டுமே நினைக்க வேண்டும் என்பதை விஜயகாந்த் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

மெய்யனூர், கி.சௌந்திரம்

சிங்கப்பூருக்கு ஒரு லீக்வான் யூ போல, தமிழகத்துக்கு விஜயகாந்த் கிடைத்திருக்கிறார் என்பதை அவரது தொடர் உணர்த்துகிறது.

பாளையங்கோட்டை, கே.ஜானகி

யாற்றியிருந்த டாக்டர் ராஜம்மா ஆகியோர் மற்ற ஐந்து முன்னோடிகள். டாக்டர் டி.என்.ஜானகிராமன் நிச்சயமாக இந்த லிஸ்டில் இருக்க இடமில்லை.

16 வருடங்களாக பல முன்னோடிகள் (நான் உட்பட) 'ப்ராண்டல் ரீசஸ்' சர்ஜரியை நமது நாட்டில் செய்து வருகின்றனர். பக்கவாட்டில் காட்டும் 30°, 45°, 70°, 90° எண்டோஸ்கோப் கருவிகளை பல வருடங்களாக நாங்கள் உபயோகித்து வருகிறோம். மேலும் ப்ராண்டல் சைனஸுக்கு பலர் செய்யாத Endoscopic Lothrop Operation என்ற கடினமான ஆபரேஷனையும் சில வருடங்களாகச் செய்து வருகிறோம்.



மறந்தேன்!

இது டிஜிட்டல் யுகம். இன்று எல்லா எலக்ட்ரானிக் கருவிகளும் டிஜிட்டல் டெக்னாலஜியை உபயோகப்படுத்துகின்றன. இதுவும் பலரால் பல வருஷங்களாக உபயோகப்படுத்தப் படுகிறது. எனவே மேற்படி கட்டுரையில் டிஜிட்டல் டெக்னாலஜி துல்லியத்துடன் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தாம் இந்த அறுவை சிகிச்சைகளைச் செய்வதாக டாக்டர் டி.என். ஜானகிராமன் கூறியிருப்பது சரியல்ல.

சென்னை, **டாக்டர் பி. துளஸிதாஸ்**

சென்ற இதழ் 'சாகஸம் ஆயிரம்' தொடரில், நோபல் பரிசு விஞ்ஞானி ஃபேய்ன்மன், கலிஃபோர்னியாவில் இயற்பியல் உரை நிகழ்த்திய ஆண்டு 1957 என்று வந்திருக்க வேண்டும். 1057 என்று தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. திருத்தி வாசிக்கவும்.

(ஆர்)

கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் பேழைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
ஆர்.சி. ஜெயந்தன்
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

வைகோ அ.தி.மு.கவில் இணைந்ததைத் தொடர்ந்து எழுந்த சர்ச்சைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் நிலையில், நாம் அவரைச் சந்தித்தோம். உள்ளுக்குள் நடந்த உண்மைகளை ஒளிக்காமல் உடைத்தார். தமது நிலைப்பாட்டை தர்க்கரீதியாக நியாயப்படுத்தினார்.

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக தி.மு.க உங்களை நடத்துகிற முறை, சன் டி.வி இருட்டடிப்பு ஆகியவற்றால் தொண்டர்கள் தி.மு.கவுடன் இணைந்து செயல்படக்கூடிய மனநிலையில்லாமல் இருந்தார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள்! இப்படியிருக்க எடுத்த எடுப்பிலேயே தி.மு.க கூட்டணியை விட்டு விலகி இருக்கலாமே! இரு பக்கமும் ஒரே நேரத்தில் பேசுவது அரசியல் அநாகரிகம் இல்லையா?

"ஒரே நேரத்தில் இரு தரப்பாரோடு பேசும் அரசியல் அநாகரிகத்தில் ஈடுபடவில்லை. நான் இரண்டு மாதத்துக்கு முன்பே அ.தி.மு.க.வுடன் உடன்பாட்டுக்கான பேச்சைத் துவக்கிவிட்டதாகச் சொல்கிறார்கள். அது தவறு. 'இரண்டரை மாதத்துக்கு முன்னரே 90 சதம் தொண்டர்கள் அ.தி.மு.க.வுடன் உடன்பாடு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தார்கள்' என்றுதான் பேசினேன். எங்கள் கழகத்தில் மேலிருந்து கீழ்வரை அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்க வேண்டும் என்ற கருத்தே மேலோங்கி இருந்தது. நான் மற்றும் ஒரு சிலர் மட்டும் தி.மு.க கூட்டணியில் தொடர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். ஜனவரி மாதம் 26-ம் தேதி கலைஞரைச் சந்தித்துப் பேசும் போது, கட்சியின் வலுவான அமைப்பைச் சொல்லி தொகுதிகள் கேட்டது மட்டுமல்லாமல், தொண்டர்கள் அ.தி.மு.கவுடன் உடன்பாடு கொள்வதில் விருப்பமாக இருப்பதையும் சொன்னேன். அதன் பிறகு பிப்ரவரி 27-ம் தேதி ஆற்காடு வீராசாமியைச் சந்தித்தபோதும் இதைச் சொல்லியிருக்கிறேன். '2001-ல் நம்மை ஏமாற்றியதுபோல் இப்போதும் ஏமாற்றுவார்கள்' என்று தொண்டர்கள் மிக உறுதியாகவே சொன்னார்கள். அதுதான் கடைசியில் நடந்தது. இடையில் அ.தி.மு.க.விடமிருந்து நல்லெண்ண சிக்னல்கள் வந்து கொண்டிருந்ததே தவிர, அவர்களோடு பேச்சு நடத்தும் அநாகரிகத்தில் நான் இறங்கவில்லை. கடைசியாக மார்ச் 3-ம் தேதி அன்று '22ஐ பெற்றுக் கொண்டால் இருக்கலாம்'



என்று கலைஞர் பேசியது எங்கள் தன் மானத்துக்கும் சுயமரியாதைக்கும் விடப் பட்ட சவால். அதன் பிறகு பொங்கி யெழுந்தனர் எங்கள் இயக்கத் தோழர்கள். இதுதான் நடந்தது. ஆனால் எங்களை அரசியலில் அநாகரிகம் என்று கேள்வி கேட்பவர்கள், கடந்த காலத்தில் தி.மு.க நடந்துகொண்டதை விமர்சிக்கத் தயங்கு கிறார்களே? 1998-ல் பா.ஜ.கவுக்கு எதிராக வோட்டுப் பெற்று பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க, 1999-ல் அதற்கு ஆதரவாக நம்பிக்கை தீர்மானத் தில் வாக்களித்தது அரசியல் அநாகரிகம் இல்லையா? 2004-ம் ஆண்டு கடைசிவரை பா.ஜ.க அரசில் பதவியில் ஒட்டிக் கொண்டு, அதேசமயம் காங்கிரஸோடு கூட்டணி அமைக்க தி.மு.க பேச்சு வார்த்தை நடத்தியது அநாகரிகம் இல் லையா? இதையெல்லாம் தூக்கிச் சாப் பிடும்விதமாக கடந்த பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகு எங்கள் உறுப்பினர் களையும் சேர்த்துக் காட்டி கூடுதல் அமைச்சர்களைப் பெற்றுக்கொண்டதே தி.மு.க... அது உச்சகட்ட அநாகரிகம். பிரதமரும், சோனியா அம்மையாரும் இதைச் சொன்னபோது திகைத்துப் போனேன். இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இப் போது கல்லடியும் சொல்லடியும் தாங்க வேண்டிய காலகட்டம். எதையும் சமாளிப்போம்."

ஜெயலலிதா இதுபோன்ற கூட்டணி களை அமைக்கும்போது தொகுதி மட்டும் அல்ல; தொகையையும் கொடுப் பார் என்பது தமிழகத்தில் பரவலாக அடிபடும் பேச்சு. அந்த வகையில், அர சியலில் இத்தனை வருட காலம் நீங்கள் கட்டிக் காத்து வந்த நேர்மை நொறுங்கிப் போனதே?

"என் பொது வாழ்வில் எனது நேர்மை மேல் மக்கள் வைத் துள்ள நல்லெண்ணத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் இதுவரை நடந்து வந்திருக் கிறேன். இனிமேலும் நடந்து கொள்வேன். ஆனால் என் மீது இப்போது சேற்றை வாரி இறைக் கிறார்கள். இந்த அவதூறு எங் களைப் பாதிக்காது. சத்தியம் தான் இறுதியில் வெல்லும். நான் ஒன்று கேட்கிறேன், 2001-ல் அ.தி.மு.க.வுடன் கூட்டு சேர்ந்த கட்சிகள் பணத்துக்காக விலை போனார்களா... இல்லையே!"

தி.மு.க கூட்டணியில் நீடித்தால், உங்கள் உழைப்பில் ஸ்டாலின் முக்கியத்துவம் பெற்றுவிடுவார் எனக் கருதித் தானே அந்தக் கூட்டணியில் இருந்து விலகி விட்டீர்கள்?

"தி.மு.க.வில், தங்களது உழைப்பாலும், தியாகத்தாலும் பல ஆண்டுகள் பாடுபட்டவர் கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களைவிட, கலைஞரின் மகனே முன்னிலைப்படுத்தப் பட்டு வருகிறார். நேற்றுவரை தி.மு.க.வுக்கு ஒரு துரும்பைத் தூக்கிப் போடாத ஒருவர்தானே எம்.பியாகி, உடனடியாக மத்திய மந்திரியாகிறார். கலைஞர்

"இது இயற்கையான நேச உறவு!"

- நியாயப்படுத்துகிறார் வைகோ!

முதல்வர் என்று பேசினாலும், தி.மு.கவில் நடப்பது குடும்ப ஏகபோக ஆட்சி தானே. எனவே வாரிசுக்குப் பட்டம் சூட்டும் ரகசியமான திட்டம் இருப்பதை உணர முடியும்.''

மற்றொரு கட்சியில் யார் முன்னிலைப்படுத்தப்பட்டால் உங்களுக்கு என்ன கவலை?

''மற்ற கட்சிகளுக்கு இந்தக் கேள்வி பொருந்தும். ம.தி.மு.க.வுக்குப் பொருந்தாது. 35 ஆண்டுகள் உழைத்த பிறகு எந்தக் குற்றமும் செய்யாத என் மீது கொலைப்பழி சுமத்தி தூக்கி வெளியில் எறிந்தார்கள். 'எந்த நோக்கத்துக்காக அன்று என்னை வெளியேற்றினார்களோ, அதை ஈடேற்றும் வகையில் பல்லக்கு தூக்கும் வேலையில் நாங்கள் ஈடுபட வேண்டுமா' என்ற எண்ணம் எங்கள் தொண்டர்களுக்கு இருக்கிறது. ம.தி.மு.க அப்படிப்பட்ட செயலைச் செய்ய முடியாது. மற்றொன்று... 1972-ல் தி.மு.க.வுக்கு மூலபலமாக விளங்கிய எம்.ஜி.ஆரை வெளியேற்றினார்கள். 1993-ல் என்னை வெளியேற்றினார்கள். எனவே அ.தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் அமைத்திருப்பது சந்தர்ப்பவாத கூட்டணி அல்ல. நாங்கள் கரம் கோப்பது இயற்கையான நேச உறவு ஆகிவிட்டது.''

'ஜனநாயக எண்ணம் சிறிதும் இல்லாதவர் ஜெயலலிதா' என்பது பொதுவாக அவரைப் பற்றி வைக்கப்படும் விமர்சனம். ஜனநாயக நெறிகளுக்காக குரல் கொடுக்கும் நீங்கள் அவருடன் உடன்பாடு வைப்பது எந்தவிதத்தில் சரி?

''அ.தி.மு.க தலைமை, விசுவாசம், கட்சிப்பணி ஆகியவற்றின் அடிப்படையில் தொண்டர்களை உரிய விதத்தில் கௌரவிக்கிறது. ஆனால் தி.மு.க.வில் என்ன நடக்கிறது? ஜனநாயகம் என்பது சுலபமாகச் சந்தித்துப் பேசுவதிலும், பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதிலும் மட்டும் இல்லை. அங்கு நடப்பது குடும்ப சர்வாதிகாரம். ஆனால் ஜெயலலிதா மாறியிருக்கிறார். 'கடந்த காலத்தில் சில பிழைகள் நடந்திருக்கின்றன. காலப்போக்கில் மாற்றங்களும் நடக்கின்றன' என்று அவரே சொல்லியிருக்கிறார். மதமாற்ற தடைச் சட்டத்தை வாபஸ் பெற்றது மட்டுமல்லாமல், மதவாத சக்திகளுக்கு அ.தி.மு.க துணை போகாது என்று சிறுபான்மை மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் அ.தி.முக சொல்லியிருப்பதும், நாங்கள் கூட்டணி அமைக்க முக்கியக் காரணம்.''

'பல்லக்கு தூக்கும் வேலையில் நாங்கள் ஈடுபட வேண்டுமா?'



மீனம்பாக்கம் விமான நிலையத்தில் உங்களை பொடாவில் கைது செய்தபோது, 'அராஜக ஆட்சி' என்று ஜெயலலிதா ஆட்சியைக் கண்டித்துத்தானே கோஷம் போட்டீர்கள். இப்போது 'வாஜ்பாய்தானே அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்' என்று சொல்கிறீர்கள். நீங்கள் அப்போது சட்டத்தைக் கொண்டுவந்த வாஜ்பாய் அரசை எதிர்த்தல்லவா கோஷம் போட்டிருக்க வேண்டும்!

''வாஜ்பாய் அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதைப் பிரயோகித்தது மாநில அரசு என்ற அடிப்படையில், என் ஆவேசத்தை வெளிப்படுத்தினேன். முன்பே 'கல்கி' பேட்டியில் சொன்னதுபோல் பா.ஜ.கவுடன் கூட்டணி

அமைத்து அமைச்சரவையிலும் இருந்தது ஒரு சறுக்கல்தான். அப்படியிருந்த காரணத்தால்தான் பொடாவை ஆதரித்துப் பேசாவிட்டாலும், வோட்டுப் போட வேண்டிய சூழல் வந்தது. அந்த அனுபவத்தின் அடிப்படையில்தான் ஐக்கிய முற் போக்குக் கூட்டணி அமைச்சரவையில் சேர் வதில்லை என்று முடிவெடுத்தோம்.''



'சந்தர்ப்பவாத கூட்டணி அல்ல எங்களுடையது!'

மத்திய அரசின் மீதான உங்கள் விமர்சனம், நிலைப்பாடு என்ன?

''ஆக்கபூர்வமான விமர்சனமாக இருக்கும். ஆனால் மாநில அரசை முழுக்க முழுக்கப் புறந்தள்ளிவிட்டு, மத்திய அமைச்சர்களும் தி.மு.க தலை வரும் மத்திய அரசு விழாக்களில் பங்கு பெறுவது என்பது இந்திய ஜன நாயகத்தில் நடக்காத ஒன்று. அண்ணா உருவாக்கிய மாநில சுயாட்சி தத்து வத்துக்கு வேட்டு வைக்கும் செயல். மற்றொன்று, ஒரு துறையோடு வர்த்தக ரீதியில் தொடர்பு வைத்திருக்கும் ஒருவர், அந்தத் துறைக்கே அமைச்சராகும் அக்கிரமம் இங்குதான் நடந்திருக்கிறது. அவர் தனக்குக் கிடைத்த அதிகாரத்தில் மற்ற தொலைக்காட்சி சேனல்களை நிர்மூலமாக்குகிறார். இதுபோதாதென்று அச்சு ஊடகத்திலும் புகுந்து அதர்ம ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு தயாரிப்பை உற்பத்தி விலைக்குக் கீழே விற்று, அதே துறையில் உள்ள மற்றவர்களுடன் போட்டி போடுவது என்பது அமெரிக்காவில் சட்ட விரோதம். எதிலும் ஏக போகம் இருக்கக்கூடாது. எனது தேர்தல் பிர சாரத்தில் இதுபோன்ற விஷயங்கள் மட்டுமல்ல, மத்திய அரசில் தி.மு.க பொறுப்பு வகிப்பதால், ஒரு குடும்பத்துக்குத்தான் நன்மையே தவிர, மாநிலத் துக்கு ஏதுமில்லை என்பதையும் விரிவாகவே பேசுவேன்.''

நீங்களும், உங்கள் தாயாரும் பேசுவது போன்ற ஜோக் ஒன்று தற்போது உலகெங்கிலும் செல் போன் எஸ்.எம்.எஸ்ஸில் வலம் வருகிறதே! அதைப் பார்த்தீர்களா அல்லது கேள்விப்பட்டீர் களா?

“கேள்விப்பட்டேன். ஏற்கெனவே பல காயங் கள் பட்டு இதயம் ரணமாகி விட்டது. இப்போது என் தாயை இந்தச் சர்ச்சையில் தொடர்பு படுத்தியது மற்றுமொரு ரணம். 'உனக்கு எது தோதாக, நல்லதாகப் படுகிறதோ அதைத் தைரிய மாகச் செய்' என்றுதான் என் தாய் எப்போதும் சொல்வார்கள். தி.மு.க கூட்டணியில் நீடிக்க கடைசி வரை முயன்றது இப்போது எல்லோருக்கும் தெரியும். அந்தச் சூழலில் என்னிடம் பேசும்போது 'உனக்கு மதிப்பு குறையும் என்று கருதினால் இருக்கிற இடத்திலேயே (தி.மு.க கூட்டணி யில்) இருந்து கொள்' என்றுதான் அவர் சொன்னார். இதையேதான் ஒரு வாரப் பத்திரிகை நிருபரிடம் சொல்லி யிருக்கிறார். ஆனால் அவர்கள் அதை எழுதாமல் வேறு எதையோ எழுதி, சர்ச்சையில் சிக்க வைத்து விட்டார்கள். இப்போது தாயார் உடல்நலமில்லாமல் மருத்துவமனையில் இருக்கிறார். இப் போது எடுத்திருக்கும் முடிவு அவருக்கும் ஊர் மக்களுக் கும் பிடித்த முடிவு தான்.''

- ப்ரியன்

படம்: ஸ்ரீஹரி

"வரலாறு கடந்த காலத்தைப் பதுக்கி வைத்திருக்கும் மாயக் கண்ணாடி. புதிய தலைமுறைக்கு பாடங்கள் கற்றுத் தரும் ஆசிரியன். நாம் வாழ்ந்திருக்க முடியாத காலகட்டத்துக்குள் அழைத்துப்போய், வாழும் காலத்தில் நம்மை வரலாறு படைக்கத் தூண்டும் கிரியா ஊக்கி. வரலாற்றைக் கற்றுக்கொள்ளாத தலைமுறை, தனது அடையாளத்தைத் தவறவிட்டுவிடும்''. ஒரு தேர்ந்த வரலாற்றாசிரியரைப்போல பேசும் திவ்யாவுக்கு இருபத்து மூன்று வயது. கார்ட்டூனிஸ்ட், பத்திரிகையாளர், எழுத்தாளர், விமர்சகர் என பல்வேறு பரிமாணங்களில் முத்திரை பதித்து

"நான் ஆசிரியைகளுக்கு பிடிக்காத மாணவி!"

திவ்யா மதன்

வரும் மதனின் மூத்த மகள்.

"எனக்கும் சரி, தங்கைக்கும் சரி, டாக்டர், இன்ஜினியர், சார்ட்டட் அக்கௌண்ட் போன்ற புரொஃபஷனல் படிப்புகளில் ஆர்வமே வந்ததில்லை. சொன்னால் நம்பமாட்டீர்கள், பத்தாம் வகுப்பு முடித்துவிட்டு ப்ளஸ் ஒன்னில் நுழைந்தபோது நான் தேர்ந்துகொண்ட பாடங்கள் வரலாறு, அரசியல் அறிவியல், பொருளாதாரம், இலக்கியம் போன்றவை. ஐ லவ் ஹிஸ்டரி. குறைந்தபட்சம் நமது நாட்டின் நூறாண்டு வரலாறையாவது இளைய தலைமுறை படிக்க வேண்டும். நான் இந்திய விடுதலைப் போரை விரும்பிப் படித்தேன். அதிலிருந்து நமது சுதந்திரப் போராளிகளின் தியாகத்தைத் தெரிந்துகொண்டேன். நமது சுதந்திர வரலாற்றைப் படிக்காத இன்றைய தலைமுறை, 'தியாகிகளுக்கு ஓய்வூதியமா? அது எதற்கு?' என்று அப்பாவித்தனமாகக் கேட்கலாம். எனவே கம்ப்யூட்டரைப் படிப்பதற்கு முன்பு வரலாற்றைப் படிக்க வேண்டும். வரலாறு ஏற்கெனவே இருப்பது. கம்ப்யூட்டர் இன்றைய கண்டுபிடிப்பு. வரலாற்றை உதறிவிட்டு நாம் எதையும் சாதித்துவிட முடியாது" என்று எச்சரிக்கும் திவ்யா, இப்போது சினிமா உதவி இயக்குனர்.

''பள்ளி, கல்லூரி இரண்டிலுமே மதிப்பெண்கள் பற்றிக் கவலைப்பட்டதே இல்லை. நான் படிப்பிலும் கிரேட் ஸ்டூடண்ட் கிடையாது. வெளிப்படையாகச் சொல்வதென்றால் நான் ஆசிரியைகளுக்குப் பிடிக்காத மாணவி. இதற்குக் காரணம்கூட அப்பாதான். எங்களைச் சுற்றிலும் குவிந்து கிடக்கும் புத்தகங்களிலிருந்து வேறொரு பரந்து விரிந்த உலகத்தைப் பார்க்கப் பழகினோம். அப்பாவே ஒரு உயிருள்ள புத்தகம்.

பேங்கில் பணிபுரிந்தாலும் சரி, பெட்ரோல் பங்கில் பணிபுரிந்தாலும் சரி... அப்பாதான் எல்லோருக்கும் ஹீரோ. அம்மாதான் ஹீரோயின். அருகிருந்து கவனித்துச் சொல்கிறேன்... அப்பா ஒரு பிறவி ஓவியர். ஆனால் அவர் ஒரு நல்ல சிற்பி என்பது நிறைய பேருக்குத் தெரியாது. அதைப்போலவே பொறுப்பைத் தட்டிக்கழிக்காத குடும்பத் தலைவராகவும் கடமையாற்றுவதில் அவருக்கு நிகர் அவர்தான். சமையல் அறையில் படர்ந்திருக்கும் மெல்லிய மஞ்சள் ஒளியில் ஒரு தேவதையைப் போல் தென்படும் அம்மா, பாசத்தின் சலித்துவிடாத சுவையை

எப்போதுமே பரிமாறிக் கொண்டிருப்பார். 'இதுதான் மிளகு ரசம்' என்று அம்மா சொல்லிக் கொடுத்தால், 'இதுதான் டாவின்ஸியின் ஓவிய ரகசியம்' என்று போகிறபோக்கில் சொல்லிவிட்டுப் போவார் அப்பா. அவரிடமிருந்து அறிவுரை கேட்டுக்கொள்வதில் எங்களுக்கு அப்படியொரு விருப்பம். அவர் எல்.ஐ.சி. கட்டடத்திலிருந்து குதியென்றால் யோசிக்காமல் குதிப்போம். ஏனென்றால் கீழே ஒரு பாதுகாப்பு வலை போட்டு வைத்திருப்பார்.



எனக்கு நினைவு தெரிந்த நாள்முதல் என்னை வெகுவாகப் பாதித்த மற்றொரு விஷயம் சினிமா. வி.ஹெச்.எஸ். வீடியோ கேசட்டுகளில் அவர் சேமித்து வைத்திருந்த சினிமாக்கள். சகித்துக்கொள்ள முடியாத சராசரி படமென்றாலும் சரி, கிரேட் கிளாசிக்கல் படமாக இருந்தாலும் சரி... அப்பாவுடன் பார்த்தே தீர வேண்டிய கட்டாயம் காரணமாக மெல்ல மெல்ல சினிமா மீது ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டது. பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரியில் சேர்ந்தபோது அங்கேயும் மீடியா கல்வி. சென்னை எம்.ஓ.பி. வைணவக் கல்லூரியில் நானும் தங்கையும் விஸ்காம் படிப்பில் சேர்ந்தோம். எரிச்சலூட்டாத படிப்பை முடித்துவிட்டு வெளியே வந்தால் விளம்பரத் துறை, தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பு, பத்திரிகைத் துறையென்றால் ரிப்போர்ட்டிங், எடிட்டோரியல், பப்ளிக் ரிலேஷன் என்று எல்லாமே ஒரு குறுகிய எல்லையோடு கூடிய பணி வாய்ப்புகள். நாம் எதிர்பார்த்த ஏதோ ஒன்று இல்லையே என்கிற எண்ணம். அது என்னவாக இருக்கும் என்று யோசித்தபோது, தனது சகல ஆளுமையோடும் எனக்குள் நாற்காலி போட்டு உட்கார்ந்துவிட்ட சினிமா





"நாயர் ஒரு டீ கொடுங்க."
"ஸ்ட்ராங்கா, லைட்டா?"
"கடனா!"
– என்.எஸ்.பாலசுப்பிரமணியன்

என்பதை அறிந்து கொண்டேன்.

தங்கை அமீதாவுக்கும் சினிமா இயக்கத்தின் மீதே ஆர்வம். இதை நான் அறிந்து கொண்டபோது ஆச்சர்யப்பட வில்லை. ஏனென்றால் எங்கள் இருவருடைய தேர்வும் ஒரே மாதிரி ரசனை சார்ந்தது. ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொள்ளவே பிடிக்காது. அவள் இயக்குனர் செல்வராகவனிடம் இப்போது உதவி இயக்குனர்" எனும் திவ்யா, தம்மை கௌதமின் உதவியாளர் என்று சொல்லிக்கொள்வதில் கர்வம் கொள்கிறார்.

"கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு ஹைதராபாத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். அப்போது 'காக்க காக்க' படம் பார்த்துப் பல நாள் தூக்கத்தை இழந்து தவித்திருக்கிறேன். கௌதமிடம் உதவி இயக்குனராகச் சேர வேண்டும் என்ற ஆவல் உந்தித்தள்ள, அவரைச் சந்திக்க சென்னை புறப்பட்டு வருவதாக வீட்டுக்குச் சொன்னேன். 'அதற்கு அவசியமில்லை. 'காக்க காக்க' படத்தைத் தெலுங்கில் தயாரிப்பதற்காக கௌதம் ஹைதராபாத்தில்தான் முகாமிட்டு இருக்கிறார்' என்று அப்பா தகவல் தந்தார். அப்போதே கௌதமிடம் உதவியாளராகச் சேர்ந்துவிட்டதுபோல ஒரு சந்தோஷம். கௌதமை நேரில் சென்று சந்தித்தபோது, மதனின் மகள் என்பதற்காக சலுகை காட்டவில்லை. நான் என்ன படித்திருக்கிறேன்... சினிமாவை நேசித்து நான் வந்திருக்கிறேனா... என்பதையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகு ஓ.கே சொன்னார். தலைகால் புரியாத மகிழ்ச்சியோடு, அன்றே வேலையை ராஜினாமா செய்துவிட்டு வந்துவிட்டேன்" எனும் திவ்யா, சினிமாவில் கேமராவுக்கு முன்பு ஜெயிக்கிற பெண்களைக் காட்டிலும், கேமராவுக்குப் பின்னால் ஜெயிக்கிற பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதன் பின்னணி பற்றிப் பேசுகிறார்.

"சுபாஸ் சந்திரபோஸின் ஜான்ஸி ராணி ரெஜிமெண்டில் ஆரம்பித்து, நவீன இந்தியாவில் பெண்களின் வளர்ச்சியும் ஆளுமையும் அவர்கள் கல்வி பெறுவதை அடிப்படையாக வைத்தே படிப்படியாக உயர்ந்திருக்கிறது. வடக்கே தீபா மேத்தா, மீரா நாயர், அபர்ணாசென் போல தொடர்ந்து இயங்குகிற பெண் இயக்குனர்கள் சினிமாவை அதன் எல்லா சாத்தியங்களோடும் கையாண்டு வருகிறார்கள். தமிழ் சினிமாவிலும் பெண் இயக்குனர்கள் ஆண்களுக்கு இணையாக வந்தே தீருவார்கள். சினிமாவை ஆர்ட் ஃபிலிம், ஆஃப் பீட் படம் என்று பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அயிட்டம் நம்பர் போல குமட்டுகிற 'நான்சென்ஸ்' எதுவுமில்லாமல், வியாபார ரீதியான நல்ல படங்களை பெண் இயக்குனர்களால் எடுக்க முடியும். நானும் அந்த வகை இயக்குனராகவே என்னை வெளிப்படுத்த விரும்புகிறேன்..." என்கிறார் நாளைய இயக்குனர் திவ்யா.

தொகுப்பு : **ஆர்.சி.ஜெயந்தன்**

படம் : **ஸ்ரீஹரி**

ஆயுட்கால மாமூல்!

போலீஸ் ஜோக்குன்னதும் 'மாமூலா' எழுதி குவிச்சுட்டாங்க வாசகர்கள். சிறந்த போலீஸ் ஜோக் அனுப்பி சென்னை, சௌம்யா மேட்ரிமோனியல் சென்டர் வழங்கும் பிரஷர் குக்கர் பரிசாகப் பெறும் வாசகர், வீ.விஷ்ணுகுமார், கிருஷ்ணகிரி.

"அந்த இன்ஸ்பெக்டர் டியூட்டின்னு வந்துட்டா பந்த பாசங்களையெல்லாம் மறந்துடுவாராமே?"

"ஆமாம்! திருடினது அவரோட தம்பியாவே இருந்தாலும் மாமூல் வாங்கிடுவார்"

***

"ஆயுட்கால மாமூலா ஒரு லட்ச ரூபா கட்டிட்டா, மாசா மாசம் மாமூல் கொடுக்க வேண்டியதில்லையாம்"

- பெ. பொன்ராஜபாண்டி

பிரசுரத்துக்குத் தேர்வானவை

"இன்ஸ்பெக்டர், உங்களை கல்லுப்பட்டி ஏரியாவுக்கு ட்ரான்ஸ்ஃபர் பண்ணியிருக்கோம். அந்த ஊரைப் 'பத்தி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"எஸ் ஸார். மாசம் ரெண்டு லட்ச ரூபா மாமூல் வர்ற ஏரியா ஸார் அது."


- சி.பி. செந்தில்குமார்

"ஹலோ இன்ஸ்பெக்டர் ஸாரா... நமக்கு வந்த மெசேஜ்படி நான் தீர விசாரிச்சுப் பார்த்துட்டேன் ஸார்... எந்த ஹீரோயினையும் யாரும் கடத்தலை ஸார்...!"

"யோவ், நமக்கு வந்த மெஸேஜ் யாரோ ஹெராயினைக் கடத்தறாங்கன்னு... வைய்யா போனை!"

- ஏ.எஸ். யோகானந்தம்

"போலீஸ் நமக்கு ஏதோ சலுகை திட்டம் அறிவிச்சிருக்காமே... என்னது?"



சின்ன ஜோக் **பெரிய** பரிசு! **போட்டி முடிவு-9**

"பார்வையற்றோராக இருந்தாலும் தொழில் என்று வரும்போது ஊனம் எல்லாம் இரண்டாம்பட்சம்தான். தரமான இசைக்குழுவாக எங்களை மாற்றிக்கொள்ளா விட்டால் பரிதாப வாய்ப்புகள் எல்லாம் சிறிது நாளில் நீர்த்துப் போய்விடும் என்று எங்கள் 'ராகப்பிரியா' இசைக் குழுவிலுள்ள பதினெட்டு பேரும் கடுமையாக உழைத்தோம். மற்றவர்களை விடவும் எங்களுக்கு ஞாபக சக்தி அதிகம். தமிழில் மட்டுமில்லாது தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம் என பல்வேறு மொழிகளிலுமுள்ள ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்கள் எங்களுக்கு அத்துபடி. ஒருமுறை மனதில் அமர்த்திவிட்டால் ஆயுசுக்கும் மறக்காது. பத்து வருட உழைப்பின் பலனை இன்று அனுபவிக்கிறோம்"



"வாருங்கள் வழிகாட்டுகிறேன்!"

என்று கண்களால் சிரிக்கிறார் 'ஆட்டோகிராப்' படத்தின் 'ஒவ்வொரு பூக்களுமே' பாடல் மூலம் தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் அறிமுகமான கோமகன்.

"'ஆட்டோகிராப்' பாட்டில் நான் பாடுவதுபோல் அவமானம், படுதோல்வி எல்லாவற்றையும் சுமந்துதான் இந்நிலைமைக்கு வந்திருக்கிறேன். முகப்பேரில் முதலில் வீடு வாங்கவும், பின்னர் கார் வாங்க வங்கியில் லோன் கேட்டபோது வங்கியின் மேலாளர், 'உத்தரவாதம் இல்லாமல் யாருக்கும் கடன் கொடுப்பதில்லை. ஆனால் நான் கோமகனின் உழைப்பையும் மனசாட்சியையும் நம்பி லோன் கொடுக்கச் சம்மதிக்கிறேன்' என்றார். நான் சாப்பிடுகிறேனோ இல்லையோ, மாதா மாதம் ரூபாய் ஏழாயிரம் வங்கிக்குக் கட்டிவிட வேண்டும்" எனும் கோமகனின் லேட்டஸ்ட் அவதாரம், புதுமுகங்கள் நடிக்கும் 'முதன் முதலாக' படத்தின் இசை இயக்குநர்.

"டைரக்டர் பெஞ்சமினுக்கு என் இசையில் படம் பண்ண வேண்டும் என்பது பேராசையாம். சவாலாக ஏற்றுக் கொண்டேன். நான் முதலில், எனக்குத் தோன்றும் இசை வடிவங்களை நண்பர் சஜன் உதவியின் மூலம் கணினியில் உடனடியாக ஏற்றிக் கொள்வேன். பின்பு இசைக் கோப்புகளை என் குழுவினருக்குத் தெரியப்படுத்தி பயிற்சிகள் அளிப்பேன். இதுவரைக்கும் ஒலிப்பதிவான பாடல்களை பிரபல பாடகர்களான கார்த்திக், திப்பு, ஹரிணி, க்ரேஸ் கருணாஸ், ஹரிசரண் போன்றோர் பாடியுள்ளனர். ஒரேயொரு பாடலை மட்டும் என் குழுவைச் சேர்ந்த ஒருவர் பாடலாம்" எனும் கோமகன், ஆரம்பத்தில் வங்கிகளுக்கு கூடைச் சேர் பின்னும் தொழிலில்



• அனிதா

ஈடுபட்டிருக்கிறார். அங்கு இவரைப் போன்று இசையில் ஆர்வமுள்ள பலரையும் கண்டதில் உருவானதுதான் ராகப் பிரியா இசைக்குழு.

"கதாசிரியர் ராஜுதான் எங்களுக்கு முதல் இசை நிகழ்ச்சியை புக் பண்ணிக் கொடுத்தார். அப்பொழுது மூன்று மாதத்துக்கு ஒரு வாய்ப்புக் கிடைப்பதே பெரும் பாடாக இருக்கும். ரோட்டரி கிளப்பைச் சேர்ந்த ஸ்ரீராம், பதினாறு மணி நேர உலக சாதனை நிகழ்ச்சிக்கு உதவினார். அதன் பின் மாதத்துக்கு ஆறு நிகழ்ச்சிகள் கிடைக்க ஆரம்பித்தன. சேரன் 'ஆட்டோகிராப்'பில் ஒரு வாய்ப்பை வழங்கினார். அவ்வளவுதான்... எங்களுடைய வாழ்க்கை இசைமாறி, இப்பொழுது மாதம் பதினைந்து இசை நிகழ்ச்சிகளுக்குக் குறையாமல் செய்து வருகிறோம்" என்று அருகிலிருந்த காதல் மனைவி அனிதாவை பெருமையோடு பார்க்கிறார் கோமகன். தேசிய ஊனமுற்றோர் சங்கத்தில் பழக்கமாகி, திருமணம் செய்த இந்தத் தம்பதிக்கு இரண்டு குழந்தைகள்.

"ஊனத்தைக் குறையாக எண்ணி மின்சார ரயில்களில் பிச்சை எடுப்பவர்களைக் கண்டால் மனம் பதைக்கிறது. திறமையை முறையாகக் கையாண்டால் ஊனமுற்றவர்களை மதிக்கவும், ஆதரவளிக்கவும் சமூகம் முன்வருகிறது. ஏன் நானே திறமையுள்ளவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கத் தயாராக உள்ளேன்" என்கிறார் கோமகன்.

- ச.ந. கண்ணன்



கல்கி



2006 மார்ச் 26
பார்த்திப பங்குனி 12
மலர் : 64
இதழ் : 34

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்.*


நீதித்துறையைத் தூக்கி நிறுத்துங்கள்!


நீதித்துறையில் லஞ்ச - ஊழல் புகுந்திருப்பது பகிரங்கமாகி விட்டது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சபர்வாலே இப்பிரச்னை குறித்துப் பேசியிருப்பது போற்றுதலுக்குரியது. தாம் சார்ந்துள்ள துறையை நடுநிலையாக விமர்சித்திருக்கிறார் அவர். அத்துறை சந்தேகத்துக்கப்பாற்பட்டதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுள்ளார்; நேர்மையற்ற நீதிபதிகள் விசாரணைக்கும் தண்டனைக்கும் அப்பாற்பட்டவர்கள் அல்ல என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்.

சபர்வாலே ஒப்புக்கொண்ட பிறகு நீதித்துறையின் சமீபத்திய வீழ்ச்சி குறித்து நாம் வெளிப்படையாக விமர்சிப்பது தவறாகிவிடாது. அரசியல் அழுத்தங்கள் / அச்சுறுத்தல்கள், பணத்தாசை, பதவி ஆசை போன்ற விஷயங்களுக்காக பல நீதிபதிகள் வளைந்து கொடுக்கிறார்கள் என்பது உறுதியாகியிருக்கிறது. சிறு நீதிமன்றங்களில் மட்டுமின்றி, உயர் மன்றங்களிலும் இந்தக் கேடு புகுந்து விட்டது.

சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்கள், அதிகாரிகள் போன்ற பலரும் தரம் தாழ்ந்துவிட்டார்கள். ஆனால் நீதித்துறை இன்னமும் ஜீவனுடன் இருக்கிறது; அரசியல் அராஜகத்துக்கு எதிராக நீதிமன்றங்களில் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை சமீப காலம் வரை இருந்தது. இன்றைக்கு அந்த நம்பிக்கையையும் கைவிடவேண்டிய நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டிருப்பது மிகப் பெரிய துர்பாக்கியம்.

தேசிய நீதித்துறை கமிஷன் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்பதற்கான ஒரு மசோதா விரைவில் நாடாளுமன்றத்தில் அறிமுகமாகவுள்ளது. இதுபோன்ற ஒரு கமிஷன் நிறுவப்பட்டால்,





நீதித்துறையின் நிறை - குறைகளை ஆராய்ந்து சீர்திருத்தத்துக்கான சிபாரிசுகளை முன் வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அறிஞர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கமிஷன்கள் நிறுவப்படுவதும் அவை அளிக்கும் சிபாரிசுகள் கிடப்பில் போடப்படுவதும் நம் நாட்டில் தினந்தோறும் நடக்கும் விஷயங்கள்!

நீதித்துறையின் மேம்பாட்டுக்கும் அதன் உயரிடம் மீட்கப்படுவதற்கும், அனைவராலும் மதிக்கப்படுகிற, அப்பழுக்கற்ற, தரமான நீதிபதிகளைக் கொண்டே கமிஷன் அமையட்டும். ஆனால் கமிஷன் அறிக்கை விரைவில் கிடைக்க வேண்டும். அந்த அறிக்கை அதிவிரைவில் ஏற்கப்பட்டு நடைமுறைக்கும் வரவேண்டும்.

இரண்டு முக்கியமான விஷயங்கள் சீர்செய்யப்பட வேண்டும்.

முதலாவது : நீதிபதி சபர்வால் தமது சென்னை விஜயத்தின்போது கூறியது போல், நீதிபதிகளின் நியமனம், முழுக்க முழுக்கத் தகுதி அடிப்படையிலேயே நடைபெற வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் நீதிபதிகள், தங்கள் பதவிக்கேற்ற ஒரு வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கும் அளவுக்கு ஊதியமும் வசதிகளும் வழங்கப்படவேண்டும். எதற்கும், யாருக்கும் அஞ்சாமல் தீர்ப்பளிக்கும் அவர்களுக்கு, உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

இரண்டாவது : நமது சட்டத்தின் அணுகுமுறை மாற்றப்பட வேண்டும். குற்றத்தை சாட்சியங்களோடு நிரூபிக்கும் பொறுப்பு தற்போது வழக்கு தொடர்பவருடையதாகவே இருக்கிறது. அவ்வாறு நிரூபிக்க இயலாத வரையில் குற்றம் சுமத்தப்பட்டவரைத் தண்டிக்க முடியாது. இந்த அணுகுமுறையினால் வழக்குகளில் அனாவசிய தாமதம் ஏற்படுகிறது. விசாரணைக்கு அவகாசம் கேட்டே அரசு வழக்குரைஞர் தாமதம் செய்கிறார். அரசியல் தலையீடுக்கு ஏற்ப வழக்கின் போக்கு மாறுகிறது. வழக்கு ஜோடனையில் வேண்டுமென்றே தீவிரம் அல்லது அலட்சியம் காட்டப்படுகிறது. இப்படிப் பல பிரச்னைகள் கிளைக்கின்றன. வழக்குகள் கோடிக் கணக்கில் நீதிமன்றங்களில் தீர்வின்றிக் குவிகின்றன. நீதிபதிகளும் ஊழலுக்குள் இழுக்கப்படுகிறார்கள். குற்றம் சுமத்தப் பெற்றவர், தொடக்க நிலையிலேயே தாம் நிரபராதி என நிரூபிக்கும் உரிமை பெற்று, அதற்குப் பொறுப்புடையவராக்கப்பட்டால், நீதிபதிகள் இன்னும் சுதந்திரமாகவும் தைரியமாகவும் இயங்க முடியும். தாமதம், ஊழல், அரசியல் தலையீடு போன்றவை குறைந்தே தீரும்.

நீதித்துறை முற்றிலும் புரையோடுவதற்கு முன் அதனைக் காப்பது மிக அவசியமாகிறது.

இராமன் ஊன்றிய வில் முனையில் சிக்கிய தவளை "இராமனே தவறிழைத்தால் யாரிடம் போய் முறையிடுவேன்?" என்று கேட்டதாம். அந்த நிலை மக்களுக்கு ஏற்பட நீதித்துறை அனுமதிக்கக் கூடாது. ○

அலை இல்லாத கடலா? கிசுகிசு இல்லாத கோடம்பாக்கமா? லேட்டஸ்ட் பரபரப்பு, 'அறிந்தும் அறியாமலும்' ஆர்யாவும் சமிக்ஷாவும் காதலிக்கிறார்கள் என்பதுதான். இத்தனைக்கும் படத்தில் இருவரும் காதலர்கள் கிடையாது. கிசுகிசுவைப் பற்றி ஆர்வமாக சமிக்ஷாவிடம் விசாரித்தால், 'அப்படியா... என்னன்னு எழுதியிருக்காங்க' என்று நமக்கே கேள்வியைத் திருப்புகிறார். விடாமல் நச்சரிக்கவே,

"நானும் ஆர்யாவும் ஃப்ரெண்ட்ஸ். இதுக்குமேல சொல்றதுக்கு எதுவுமே இல்லை. ஷூட்டிங் முடிஞ்சா நேரா மும்பை பறக்கிற ஆளு நான். இதுல காதலாவது கத்திரிக்காயாவது. நான் நிச்சயம் என் பெற்றோர் பார்க்கற பையனைத்தான் கல்யாணம் பண்ணுவேன். அவங்களுக்கு நான் இந்த சந்தோஷத்தைக்கூட தராட்டி அப்புறம் என்ன இருக்கு? நான் சொல்வதெல்லாம் அக்மார்க் உண்மை. எனக்கு பொய் பேசவே தெரியாது, நம்புங்க" என்று உணர்ச்சிவசப்பட்டார். சகஜமாக்கினோம்.

"என் முதல் படத்தோட தலைப்பை ரொம்பவே ரசிச்சேன். ஏன்னா தமிழ் சினிமாவைப் பத்தி அறிந்தும் அறியாமலும்தான் நான் இருந்தேன். எனக்குத் தெரிந்த ஒரே தமிழ் இயக்குனர்னா அது மணிரத்னம்தான்" என்றவர், அடுத்த சில நிமிடங்கள் ஓயாமல் மணி புகழ்பாட ஆரம்பித்துவிட்டார்.

"எனக்கு என்ன ஆச்சர்யம்னா, பெண்களாலேயே இன்னொரு பெண்ணோட மனசைப் புரிஞ்சுக்க முடியாது. ஆனால் மணி இந்த விஷயத்துல அசத்துவாரு. அவரோட கதாநாயகிகளின் உணர்வுகளைத் துல்லியமா படத்துல கொண்டு வருவாரு."

தற்போது சமிக்ஷாவின் கைவசம் 'மனதோடு மழைக்காலம்', 'மெர்க்குரிப் பூக்கள்' என இரு படங்கள். "நான் படிச்சது பி.ஏ. ஆனா மாடலிங் மேல எப்பவும் ஒரு கண் இருந்தது. அப்படியே சினிமா வாய்ப்புகள் வந்துச்சு. ஆனால் வீட்ல விடவேயில்லை. சினிமா பத்தி அவங்களுக்கு எப்பவும் தப்பான அபிப்ராயம். கையைக் காலைப் பிடிச்சு கெஞ்சி எப்படியோ சினிமாவுல நுழைஞ்சுட்டேன். இப்போ என் படங்கள், பத்திரிகையில வர்ற என் பேட்டிகள் எல்லாம் பார்த்து அவ்ளோ பூரிச்சுப் போயிடறாங்க" என்றவர் இறுதியாக, "அறிந்தும் அறியாமலும் மாதிரி நல்லதா நாலு படங்கள் செஞ்சு தமிழ் ரசிகர்கள் மனசுல நிக்கணும். அப்புறம் மணிரத்னம் படத்துல நானும் ஹீரோயினா நடிக்கணும். இந்த இரண்டு ஆசைகள் நிறைவேறினா போதும்" என்று படபடக்கிறார்.

- ச.ந.கண்ணன்

அட்டை, படம்: அஜீத்



"சொல்வதெல்லாம் உண்மை!"

"செல்போனிலேயே அரசியல் நடத்தலாம்!"

- கராத்தே தடாலடி

சென்னை மாநகராட்சி துணைமேயர் கராத்தே தியாகராஜன் மாயமாகப் போய் ஏழு மாதங்கள் ஆகிவிட்டன. அவ்வப்போது தினசரிகளில் மட்டுமே அடிபட்டுக் கொண்டிருந்த கராத்தே பற்றி சமீபத்தில் ஒரு வதந்தி. தி.மு.கவில் சேர்ந்து, சென்னையில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடப் போகிறார் - என்பதுதான் அது! என்ன சொல்கிறார் கராத்தே?

உயர்நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர் உங்கள் மீது எந்த வழக்குமில்லை என்று சொல்லியிருக்கிறார். இது தவிர சட்ட அமைச்சரும் அதேபோல் சொல்லியிருக்கிறார். இந்த நிலையில் பகிரங்கமாக வெளிவர இன்னும் ஏன் தயக்கம்?

"அவர்கள் சொல்வதெல்லாம் அரசு நிலைப்பாடு. அதை நம்பி வெளிவர நான் விரும்பவில்லை. ஏனென்றால் தமிழ்நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடக்கவில்லை. 'இந்து' பத்திரிகையாளரையே விரட்டிப் பிடிக்க முயன்றவர்தான் ஜெயலலிதா. நான் வந்தால் என் மீது பொய் வழக்குப் போட்டுத்தள்ள முடிவு செய்திருந்தார்கள். இப்போது தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டதால், பழிவாங்கல் நடவடிக்கைகள் எடுக்க முடியாது. அப்படி யாராவது அதிகாரி செயல்பட்டால் தேர்தல் கமிஷனில் புகார் கூறி அவர் மீது வழக்குப் போடுவேன். எனவே விரைவில் வருவேன்."



நீங்கள் இப்போது எந்தக் கட்சியில் இருக்கிறீர்கள்? தேர்தலில் நிற்பீர்களா?

"காங்கிரஸில் சேர கடிதம் கொடுத்துக் காத்துக் கொண்டிருக்கிறேன். மற்றபடி எந்தக் கட்சியிலும் சேர முடியவில்லை. தேர்தலில் நிற்கும் எண்ணம் இல்லை. ஆனால் நான் சென்னை வந்த பிறகு நிலைமைகள் மாறலாம்."

எந்தக் கட்சியிலும் இல்லாத நிலையில் வரும் தேர்தலில் எப்படிச் செயல்படுவீர்கள்?

"வரும் தேர்தலில் அண்ணா தி.மு.கவை எதிர்த்துக் கடுமையான பிரசாரம் செய்வேன். மாநகராட்சியில் அதிகாரிகள் அடிக்கும் கொட்டங்களை அம்பலமாக்குவேன். மாநகராட்சியின் நிர்வாகச் சீர்கேட்டால் சென்னை நரகமாகி வருவதைச் சொல்வேன். ஒரு தொகுதியில்கூட அ.தி.மு.க வெற்றி பெற முடியாத அளவுக்கு என் பிரசாரம் இருக்கும். அ.தி.மு.க

எதிரணி மேடைகளில் என் பேச்சு ஒலிக்கும்."


உங்களுக்கும் முதல்வருக்கும் என்ன மோதல்?

"அவரைத்தான் அதைப் பற்றிக் கேட்க வேண்டும். கட்சியில் என் வளர்ச்சி பலருக்குப் பிடிக்கவில்லை. போட்டுக் கொடுத்தார்கள். உளவுத்துறையும் உடன் கைகோத்துக் கொண்டது. ஆனால் என்னைக் கூப்பிட்டு விசாரிக்காமலேயே 'தூரத்தல்' வேலைகள் துவங்கிவிட்டன."

உங்கள் மீது விளம்பரப் பலகைகள் தொடர்பாக ஊழல் புகார் கூறப்படுகிறதே?

"மாநகராட்சியில் மேயர் பொறுப்பை வகிக்கும் துணை மேயருக்கு எந்த அதிகாரமும் கிடையாது. வருடத்துக்கு இரண்டு முறை தேசியக் கொடி ஏற்றலாம். மற்றபடி பியூனை மாற்றும் அதிகாரம்கூட கிடையாது."

ஒரு காலத்தில் ஸ்டாலினை கடுமையாக எதிர்த்த நீங்கள், சமீபத்தில் அவரது நிலைப்பாட்டை ஆதரித்தீர்களே!



"ஸ்டாலின் பண்பு நிறைந்தவர்!"

"எனக்கும் அவருக்கும் தனிப்பட்ட முறையில் எந்த விரோதமும் இல்லை. கட்சித் தலைமை இட்ட கட்டளையின்படி நடந்து கொண்டேன். மற்றபடி வீட்டு வரி தொடர்பாக ஸ்டாலின் நடத்திய போராட்டத்தில் நியாயம் உண்டு. அதனால்தான் ஆதரித்தேன். மற்றபடி ஸ்டாலின் பண்பு நிறைந்தவர். ஒரு சம்பவம்... மாநகராட்சியில் காங்கிரஸ் சார்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தபோது ஸ்டாலினை கடுமையாக எதிர்த்துக் கொண்டிருந்தேன். அப்போது பத்திரிகையாளர் குடியிருப்பில் மேயர் ஸ்டாலினை ஒரு நிகழ்ச்சிக்கு அழைத்தார்கள். வட்ட கவுன்சிலரான என்னையும் கலந்து பேசி, பின்னர் அழையுங்கள் என்று ஸ்டாலின் கூறிவிட்டார். இந்தப் பண்பு எங்கே! ஆனால் என் தந்தை 2003-ல் இறந்தபோது ஒரு அனுதாபச் செய்திகூட விடுக்காத ஜெ.வின் பண்பு எங்கே! ஜெயலலிதா ஆட்சி தொடர்ந்தால், தமிழகம் ஒரு புதிய அடிமை கலாசாரத்துக்குத் தள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை."

தலைமறைவு வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சி?

"என் தாயார் இறந்துபோனதுதான். கொள்ளி போட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டேன். இந்த வடு என்றும் மாறாது. என்னை இப்படிப்பட்ட நிலைமைக்குத் தள்ளியவர்கள் இறைவனுக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும்."

நீங்கள் பிடிபடாதது காவல் துறையின் இயலாமையா அல்லது உங்கள் புத்திசாலித்தனமா?

"சரியான காரணம், காவல்துறைக்கு ஆள் காட்டி கிடைக்காததுதான்."

சென்னையில்தான் இருக்கிறீர்களா அல்லது எவ்வளவு தூரத்தில் இருக்கிறீர்கள்?

"செல்போனில் பேசும் தூரத்தில்தான் இருக்கிறேன்." *(சிரிக்கிறார்)*

தலைமறைவு வாசம் கற்றுத் தந்த பாடம்?

"செல்போனில்கூட அரசியல் நடத்த முடியும் என்பதுதான் நான் கற்ற பாடம்!"

- கௌசி


SWARNALAYA
S
Jewellery
Venakatnarayana Road, T.Nagar,
ennai 17 Ph- 42125353, -5454



* அரங்கம் திறப்பு விழாவில்... இடது புறம் சங்கர்

எம்.எஸ். - தாம் பாடிய ஒவ்வொரு பாடலையும் கலை நுணுக்கம் மிக்க இசைக் கோயிலாக நமக்கு அமைத்துத் தந்தவர். அவருக்கு, மும்பை ஓர் அழகிய நவீன அரங்கம் உருவாக்கி அஞ்சலி செலுத்தியுள்ளது. திறப்பு விழாவில், எம்.எஸ்.அவர்களின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சிகளை நினைவூட்டும் வகையில் ஓர் அரிய புகைப்படக் கண்காட்சியும் இடம் பெற்றது.

ஆண்டவன் சுவாமிகள் அருளாசி வழங்கியதோடு, "இசைவிப்பது இசை" என்று தொடங்கி அரிய பிரவசனம செய்தார். "இசை இரண்டு விதங்களில் இசைவிக்க வேண்டும். முதலில் பாடுகிறவர் இசையுடன் இரண்டறக் கலந்து, இசை வேறு, பாடகர் வேறு என்ற நிலைக்கு அப்பாற்பட்டு இசை மயமாகவே மாற வேண்டும். அப்படிப்பட்ட இசை எளிதாக கேட்பவரையும் இசைவித்து விடும். இந்த அரிய ஆற்றலை இயல்பாகவே பெற்றிருந்த எம்.எஸ்., 'பாரத ரத்னா மட்டுமல்ல உலக ரத்னா' என்றார் ஆண்டவன் சுவாமிகள்.

இசை விமர்சகர் கே.எஸ். மகாதேவன், எம்.எஸ். சதாசிவம் தம்பதியுடன் தமக்கிருந்த நீண்டகால நட்பு எப்படி தம்மைப் பண்படுத்தியது என்று சொன்னதோடு, இளம் தலைமுறைப் பாடகர்கள் எம்.எஸ்ஸின் இசையிலிருந்த எந்தெந்த அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறினார்.

'எளிமையாக இருக்கிறோம் என்ற உணர்வு கூட இல்லாத எளிமை எம்.எஸ்ஸுடையது' என்பதற்கு சில சம்பவங்களை எடுத்துக் காட்டாகத் தந்தார் கௌரி ராம்நாராயண்.

"இசை அரசிக்கு மற்றவர்கள் பேசி அஞ்சலி செலுத்தினார்கள்; நான் இசை அஞ்சலி செலுத்தி வருகிறேன்" என்ற வயலின் டி.எஸ்.கிருஷ்ணன், புதிய அரங்கத்தில் முதல் கச்சேரி செய்து மகிழ்வித்தார். ஒரு செம்மங்குடியின் சீடர் இன்னொரு செம்மங்குடி சீடருக்குச் செலுத்திய இசை அஞ்சலியாக அமைந்தது வயலின் கச்சேரி.

மும்பை, ஷண்முகானந்தா சபையும் பாரதிய இசை - கலை கழகமும் இந்நாள் வரை தனித்தனியே இயங்கி வந்தன. தற்போது இரண்டும் இணைந்து ஒரே அமைப்பாகி அது மதிப்பில் உயர்கிறது. இதனால் அங்கத்தினர்களுக்கும் வசதிகள் கூடுகின்றன. அவற்றுள் ஒன்று, புதுப்பிக்கப்பட்டு புதுப்பெயர் பெற்றுள்ள 'பாரத ரத்னா டாக்டர் எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அரங்கம்.' பேச்சு வழக்கில் சுருக்கமாக "எம்.எஸ்.அரங்கம்" என அன்புடன் அழைக்கப்படும், நிச்சயம்.

ஒன்றிணைந்த சபாவின் தலைவர்

சங்கர், பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி! வளம் கொழிக்கும் மருந்து வியாபாரத்தை விற்று காசாக்கிக் கொண்டு பொது வாழ்வுக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டு விட்டவர். அவருடைய வரவேற்புரை எம்.எஸ்.அவர்களைப் பற்றிய ஒரு சுவைமிக்க பேருரையாகவே அமைந்து விட்டது.

வெகு காலம் முன்பு தென்னிந்திய கல்விக் கழகம் என்று தொடங்கப்பட்டு அது, பம்பாயில் குடியேறிய தென்னிந்திய குடும்பங்களின் குழந்தைகளுக்கு நமது பண்பாடுடன் இணைந்த பள்ளிக் கல்வியை வழங்கி வந்தது. அந்தக் கழகம் இப்போது ஆலமரமாக வளர்ந்து, ஐந்து கல்லூரிகளை உள்ளடக்கிய ஒரு கல்வி வளாகத்தையும் தனதாக்கிக் கொண்டிருக்கிறது. இதற்குப் பொறுப்பாளராகவும் இன்று செயல்பட்டு வருகிறார் சங்கர்.

காஞ்சி மகாபெரியவாளிடம் அளப்பரிய ஈடுபாடு கொண்ட சங்கர், இந்த கல்வி வளாகத்துக்குள்ளே, உத்தர காமாட்சி கோயிலும் விசுவரூப ஆஞ்சனேயர் கோயிலும் அமைத்துள்ளார். வேத பாடசாலை, முதியோர் இல்லம் என்று நற்பணிகள் நடக்கின்றன. எல்லாவற்றுக்கும் மும்பை மக்களின் ஆதரவு குறையின்றி கிடைக்கிறது.


பரமாச்சார்யாள் பீடாரோகணம் செய்து இன்று நூறாவது ஆண்டு. இதையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளை மும்பையில் மட்டுமின்றி நாடெங்கும் நடைபெற திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறார் சங்கர். இவற்றுள் மிக முக்கியமான பணி, "தெய்வத்தின் குரல்" என்ற மகாபெரியவாளின் அருள்வாக்குகள் அடங்கிய நூலின் பல பாகங்களையும் ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கச் செய்து வெளியிட்டுள்ளதாகும்.

ஆச்சார்யாளின் அருள்வாக்குகள் நாடெங்கும் மட்டுமின்றி உலகெங்கும் பரவும் வகை செய்தலை விடச் சிறந்த பணி என்னவாக இருக்க முடியும்!

- **விஜயன்**

எம்.எஸ். அரங்கம்!





விடைபெறுகிறார் தகவல் தாத்தா!

கடந்த 53 வருஷங்களாக தமிழ்த் திரையுலக 'புள்ளி விவரப் புலி'யாய் இருந்து வந்த ஃபிலிம் நியூஸ் ஆனந்தன், தமது பணியிலிருந்து ஓய்வு பெறுவதாக அண்மையில் அறிவித்துவிட்டார். 'ஆர்வம் இருந்தாலும் உடல் ஒத்துழைக்கவில்லை' என்கிறார். அதுமட்டும்தான் காரணமா? அவரைச் சந்தித்தபோது தமது ஆதங்கங்களை கொட்டித் தீர்த்தார்.

"சினிமாக்காரர்களின் முகவரி, டெலிபோன் எண் கேட்டு, ஏராளமானவர்கள் எனக்குத் தினமும் போன் செய்வார்கள். அவர்களுக்கு உதவியாக இருக்கட்டுமே என்று முகவரிகளையும் டெலிபோன் எண்களையும் கொண்ட 'திரைக்கதைத் தொகுப்பு' என்ற புத்தகத்தை 25 ஆண்டுகளுக்கு முன் வெளியிட்டேன். கடைசியில் என் வீட்டுப் பத்திரத்தை வங்கியில் அடமானம் வைத்து, புத்தக வெளியீட்டுக்காக வாங்கிய கடனை அடைத்தேன்.

தமிழ்த் திரையுலக வரலாறு பற்றி என் புத்தகத்தை தமிழ்த் திரையுலகைச் சேர்ந்தவர்களே வாங்கவில்லை. நேரில் பார்க்கிறபோது, ஒவ்வொருவரும் பாராட்டுகிற நடிப்பு இருக்கிறதே! வார்த்தையில் விவரிக்க முடியாது. இதுவரை வெறும் அறுபது பிரதிகளே விற்பனையாகி இருக்கிறது.

சமீபத்தில் ஒரு பிரபல ஹீரோவை விழா ஒன்றில் சந்தித்தபோது, 'உங்களைச் சந்தித்து, புத்தகப் பிரதியொன்றை அளிக்க உங்கள் பி.ஆர்.ஓக்கள் மூலமாகப் பல மாதங்களாக முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். பலனில்லை'' என்று வருத்தப்பட்டுச் சொன்னபோது, தன் பி.ஆர்.ஓவை அழைத்து சத்தம் போட்டுவிட்டு, 'இரண்டே நாளில் உங்களுக்கு அப்பாயிண்ட்மெண்ட் தருகிறேன்' என்றார். இன்றுவரை தரவில்லை.

திரையுலக புள்ளி விவரங்களைச் சேகரிக்க ஆத்மார்த்தமான கடமை உணர்வோடு நான் உழைத்தாலும், தேவைப்பட்டவர்களுக்கெல்லாம் தகவல்களைத் தாமதமில்லாமல் கொடுத்தாலும், திரை உலகத்தினர் குறிப்பாக பி.ஆர்.ஓக்கள் எனக்கு தகவல்களைக் கொடுத்து பூரண ஒத்துழைப்பு அளிப்பதில்லை. அவர்கள் தரும் தகவல்களை வைத்து நான் பெரும் புகழும் பணமும் சம்பாதித்துக் கொள்வதாக நினைத்துக்கொண்டு, பல தருணங்களில் அலைக் கழித்திருக்கிறார்கள்'' என்று நொந்துபோய்ச் சொல்கிறார் ஆனந்தன்.

- கௌதம்ராம்

அந்நியன்

எழில்வரதன்

“அதெப்படி ஆத்தா, பொண்டாட்டி பெக்காம புருஷனுக்குப் புள்ளை வரும்?'' என்று குழப்பத்தோடு பரமன் கேட்டதும்,

''அது அப்படித்தாண்டா. உன் பொண்டாட்டியோட சக்களத்தி வழியா உனக்கு ஒரு சந்ததி பொறக்குமுடா'' என்று உறுமிய பூசாரி, விசாலாச்சி பக்கம் திரும்பி, “நீ கவலைப்படாதே எம் மகளே... உன் சக்களத்தி மூலமா உனக்கொரு பையனை நான் வரமா தரேன்" என்று சொல்லி உடுக்கையைச் சத்தமாக அடிக்க ஆரம்பித்தான்.

நொந்துபோன விசாலாச்சிக்கு அடிவயிறு வறண்டுபோனது. வெகுநேரம் பேய் பிடித்தவள் போல மிரண்டு விழித்தபடி உட்கார்ந்திருந்தாள். பிறகு சரி நம் விதி அவ்வளவுதான் என்று முடிவுக்கு வந்தவளாக ''சரி ஆத்தா, சக்களத்தி வழியாத்தான் எனக்கு ஒரு புள்ளை கெடைக்குமுன்னா அப்படியே ஆவட்டும். நீயே சக்களத்தி யாருங்கிறதையும், அவ இருக்கிற திசையையும் சொல்லு" என்றாள்.

சத்தமாய் உடுக்கை அடித்து ஒரு பாட்டைப் பாடிவிட்டு பூசாரி சொன்னான்: "வடக்கால பொண்ணு கேட்டுப் போ. அங்க ஒரு வடிவழகான சக்களத்தி உனக்குக் கிடைப்பா. அவ அழகான புள்ளை ஆறேழு பெத்துத் தருவா" என்று சொல்லி மலையேறிக் கொண்டான்.

பரமனுக்கு ரெண்டாம் கல்யாணத்தில் விருப்பம் இல்லாததால் சும்மாயிருந்தான். விசாலாச்சிதான் "அப்படியே ஆகட்டும் ஆத்தா" என்றாள்.

மறுநாள் காலையிலேயே குறுகுறுவென்று பேசிய அம்மாக்கண்ணு கிழவியும் விசாலாச்சியும் வடிவழகியை வடக்கில் தேடிப் போனவர்கள் சூரியன் மறைந்த பிறகும் வீட்டுக்கு வரவில்லை. வேலை முடித்துவிட்டு பரமன் காத்திருந்தான்.

வெளியே அம்மாக்கண்ணும் விசாலாச்சியும் பேசியபடி வரும் சத்தம் கேட்டதும் ஓடி வந்து எட்டிப் பார்த்தான். அங்கே அம்மாக்கண்ணு ஒரு கறுப்பு எருமையையும் விசாலாச்சி ஒரு கிடாரிக் கன்றையும் பிடித்துக்கொண்டு நின்றிருந்தார்கள். இதுவா பூசாரி சொன்ன வடிவழகான சக்களத்தி என்று குழம்பிய பரமன், “என்ன ஆத்தா இது? ஒரு எருமைக்கு என்னைக் கல்யாணம் பண்ணி வெக்கப் பாக்கிறியே..." என்று சொல்லி தலை சொறிந்தான்.

“பொண்ணு பாத்துட்டு திரும்பற வழியில எதிர்ப்பட்ட தரகன், எருமை வேணும்னு கேட்டியே புடிச்சிட்டுப் போன்னு ஓட்டிவிட்டான். வேலை கம்மி, கொடமா கறக்கும்னு சொன்னதால நாங்களும் புடிச்சிட்டு வந்தோம்'' என்று சொல்லிவிட்டு வயிறைப் பிடித்துக்கொண்டு சிரித்தாள் அம்மாக்கண்ணு. விசாலாச்சியும் சிரிக்கத்தான் நினைத்தாள். அதற்குள்ளாக மயக்கம்போட்டு தொப்பென்று கீழே விழுந்தாள்.

விசாலாச்சி மயக்கம் போட்டு விழுந்ததும் பதறிப்போன பரமன், முகத்தில் தண்ணி தெளித்துப் பார்த்தான். விசாலாச்சிக்கு மயக்கம் தெளியவில்லை. பயந்து ஓடிப்போய் மருத்துவச்சியைக் கூட்டிவந்து காட்டினான். மருத்துவச்சி மருந்து கொடுத்து அவளை எழுப்பி கைப் பிடித்துப் பார்த்து, “எத்தனை மாசம்டி ஆச்சி?'' என்றாள்.

புரிந்த விசாலாச்சி, “தெரியலையே, போன மாசமோ அதுக்கு முந்தின மாசமோ தலைக்குக் குளிச்சேன்" என்றாள்.

''அப்ப மூணு மாசம். இது தெரியாம எதுக்குடி குறி கேக்கப் போனே...? பொண்ணு பாக்க வந்தே...? எம் மருமகனுக்கு வடக்கத்தி சக்களத்தி நீதாண்டி ஆத்தா..." என்று கோபமும் சந்தோஷமுமாய்க் கத்தினாள் அம்மாக்கண்ணு.

"எத்தினி வாட்டி இப்பிடித் தள்ளி போயிருக்கு. எனக்கென்ன தெரியும் இது தங்கியிருக்குன்னு" என்று வயிற்றில் இடித்துச் சொன்னாள் விசாலாட்சி. முக்கால் கிழவனாகி அப்பாவான பரமனுக்கு வாயெல்லாம் பல். பெண் பார்த்து வந்த வடக்கத்தி வடிவழகியை வேண்டாம் என்று ஆள் வைத்துச் சொல்லிவிட்டார்கள்.

அதன் பிறகு விசாலாட்சிக்கு அந்த எருமை என்றால் கொள்ளைப் பிரியமானது. அதுவந்த நேரம்தான் வயிற்றில் ஒரு பிள்ளை தங்கியது என்று அதற்குத் தீவனம் வைத்துத் தண்ணீர் காட்டி, கழுவி, துடைத்து, வாரமானால் பொட்டு வைத்து, கற்பூரம் காட்டி சாமியாகவே கும்பிட்டாள் அந்த எருமையை. அழகான பையன் பிறந்ததும் மாரியப்பன் என்று பெயர் வைத்து எருமையிடம் கொண்டு போய் காட்டி "பாருடியம்மா உம் பிள்ளையை" என்றாள். அவளுக்கு, சுகம் துக்கம் எது வந்தாலும் எருமையிடம் மணிக்கணக்காகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஒன்பதாம் மாதத்தில் 'அம்மா' என்று சொல்லி, ஒரு வருஷத்திலேயே ஆம்பிளை போல நடக்க ஆரம்பித்தான் மாரியப்பன்.

ரெண்டு வயசில் சின்ன மரம் ஏறுவதும், மூணாம் வருஷம் சிலேட்டு வாங்கி எழுதுவதுமாய் இருந்தான். அவன் வயசுப் பிள்ளைகள் அம்மா இடுப்பை விட்டு இறங்கமாட்டேன் என்று கத்தியபோது நாலாம் வயசிலேயே பள்ளிக்கூடத்துக்குப் போக ஆரம்பித்தான் மாரியப்பன். ஏழாம் வருசத்தில் எழுத்துக் கூட்டி படிக்கவும் முத்து முத்தாய் எழுதவும் ஆரம்பித்துவிட்ட தன் மகனைப் பார்த்து விசாலாட்சி ஆச்சரியப்பட்டாள்.



ஒரு நாள் தண்ணி எடுக்கப் போகும்போது 'நானும் வரேன்' என்று சொல்லிக் கொண்டு கூடவே வந்தான் மாரியப்பன்.

கிணற்றுமேட்டில் பையனை உட்கார வைத்துவிட்டுக் கிணற்றுக்குள் இறங்கினாள். குடத்தில் தண்ணீரை முகரும்போது, குடம் கைதவறி தலைகுப்புற நடுக்கிணற்றுக்குப் படகுபோல் போய் விட்டது. நீச்சல் தெரியாத விசாலாட்சி திகைத்து நிற்க, மேலே இருந்து எட்டிப் பார்த்த மாரியப்பன் "என்னம்மா ஆச்சு! கொடத்தை நான் எடுத்துத் தரட்டுமா?" என்று கேட்டுக்கொண்டே குதித்து விட்டான்.

தண்ணிக்குள் இருந்து காற்று முட்டைகள் குபுகுபுவென வருவதைப்

பார்த்தும் தன் பையன் மூச்சு நின்று கொண்டிருப்பதை அறிந்து பெருஞ்சத்தத்துடன் கத்தி அழுதாள் விசாலாச்சி. யாரும் வரவில்லை.

பையன் செத்தபிறகு நாம எதுக்கு உசுரோட இருக்கணும் என்று உள்ளே அவளும் விழப் பார்த்தாள். அப்பொழுது குபுக்கென்று வெளியே வந்த மாரியப்பன் "எங்கம்மா கொடம்?" என்று கேட்டான்.

கண்ணில் கண்ணீரோடு சிரித்த விசாலாச்சி "என்ன காரியம் செஞ்சடா துக்கிரிப் பயலே... எனக்கு உசுரே போச்சு... நீ எப்ப கண்ணு நீச்சல் கத்துகிட்ட? சீக்கிரம் மேல வந்துடு" என்று பதறினாள்.

கிணற்றில் பிள்ளை விழுந்த அந்தக் கணத்திலேயே "மாரியாத்தா, எம் புள்ளைய காப்பாத்து. பையன் உசுரோட வரட்டும். கிணத்தில விழுந்த பிள்ளை உன்னோட பிள்ளை, உசுரோட வர்ற பிள்ளை என்னோட பிள்ளை. நான் அதை ரெண்டாம் பிள்ளையா நெனைச்சு வளத்துக்கறேன்'' என்று வேண்டிக்கொண்டாள். பையன் உயிரோடு வந்ததால் அதை ரெண்டாம் பிள்ளை என்றே அவள் சொல்லி வந்தாள். மற்றபடி அவளுக்குப் பொறந்ததே ஒரே ஒரு ஒற்றைப் பிள்ளைதான்.

இப்படித் தப்பிப் பிழைத்த தவமிருந்த பிள்ளை "நான் படிக்க பக்கத்து ஊருக்குப் போறேன்" என்று சொன்னதும் மகனின் திறமைக்காக சந்தோஷப்படுவது தப்பு என்று நினைத்துக்கொண்டாள் விசாலாச்சி.

இந்த ஊரில் யாரும் படிக்கவே ஆசைப்பட்டதில்லை. ரெண்டாம் பிள்ளை ஐந்தாவது வரை படித்துவிட்டான். இதற்கு மேல் எதற்கு ஏழு மைல் நடந்துபோய் பக்கத்து ஊரில் படிக்க வேண்டும். புள்ள கல் மேல முள்மேல நடந்துபோய் படிக்கிறதில் இஷ்டமில்லை விசாலாச்சிக்கு.

ரெண்டாம் பிள்ளை படிக்கப் போவேன் என்று தினம் அடம் பிடித்து அழுதான். பொறுக்க முடியாத விசாலாச்சி, நேராக பக்கத்துத் தெருவில் இருக்கும் வெங்கட்டன் வாத்தியாரைப் போய்ப் பார்த்து கண்ட மேனிக்குத் திட்ட ஆரம்பித்தாள். "எம் புள்ளைய என்னமா கெடுத்து வெச்சிருக்கே. மேல படின்னு நீதான் சொன்னியாம். தவமிருந்து பெத்த புள்ளைய ஊருவிட்டு ஊர் அனுப்ப எனக்குக் கிறுக்குப் பிடிச்சிருக்கா. அது மனச கெடுத்து வெச்சிருக்கியே... உம் புள்ளையும் இப்படித்தான் உன்னைய விட்டு ஓடிப்போகும்" என்று பொண்ணு ஒண்ணு பெத்திருக்கும் வெங்கட்டன் வாத்தியாருக்குச் சாபம் விட்டாள்.

இத்தனையும் கேட்டு சிரித்த வெங்கட்டன் வாத்தியார், "கோபப்படாத விசாலாச்சி. உனக்குப் பொறந்தது ஒரு அறிவாளிப் புள்ளை. அது படிச்சா கலெக்டர் ஆகும். ஒரு டாக்டர் ஆகும். அத உன் புருஷனாட்டம் வெத்தலை கிள்ள அனுப்ப நினைக்காதே. நானே சைக்கிள்ல கொண்டு போயி விட்டுக் கூட்டியாந்து விடறேன், என் பேச்சை நம்பு" என்று சமாதானம் செய்தார்.

பெரிய உத்தியோகம் என்றதும் மனசு மாறிய விசாலாச்சி, பிள்ளையை வெங்கட்டன் வாத்தியார் சைக்கிள் முன் பக்கம் உட்கார வைத்து பள்ளிக்கு அனுப்பினாள். பின்னால் வாத்தியாரின் பெண் உட்கார்ந்துகொண்டு படிக்கப் போனாள்.

பக்கத்து ஊரில் படிக்கிற வரையில் காசு கஷ்டம்தான் வேறு கஷ்டமில்லை. அதன்பிறகு "நான் பெரிய படிப்பு படிக்க டவுனுக்குப் போகணும்" என்று ரெண்டாம் பிள்ளை சொன்னதும்தான் மனசு

"தலைவரே! நமக்கு எத்தனை தொகுதிகள் ஒதுக்குவாங்க?"

"போற போக்கைப் பார்த்தால், நம்மையே ஒதுக்கிடுவாங்க போலத் தான் தோணுது!"

– ஞா. ஞானமுத்து

கஷ்டம் வந்தது.

'படவனுக்குப் படிக்க அனுப்பினால் தான் சாப்பிடுவேன்' என்று பட்டினி கிடந்தான் ரெண்டாம் பிள்ளை. இம்முறையும் வெங்கட்டன் வாத்தியார்தான் அவனுக்குப் பரிந்து பேச வந்தார். இம்முறையும் அவருக்கு விசாலாச்சியிடம் வசவு தான்.



வீடே ரெண்டுபட்டு நிற்பதைப் பார்த்த ரெண்டாம்பிள்ளை "என்ன படிக்க அனுப்பாட்டி கிணத்தில விழுந்து செத்துப் போவேன்" என்றான்.

பையன் சொன்ன சொல்லின் வலியில் பைத்தியம் பிடித்துவிடும்போல இருந்த விசாலாச்சி என்ன பேசுகிறோம் என்று தெரியாமல், "விழுந்து சாவு போ. ஆனா நீச்சல் தெரிஞ்ச நீ கெணத்தில விழுந்து சாவேன்றியே புத்தி கெட்டவனே..." என்றாள்.

பரமன் வாத்தியாரைப் பார்த்து, "பாத்தியா வாத்தியாரே... படிச்சா அறிவு வரும்னியே! உன்ன மாதிரி அவனும் கூறுகெட்டவனாயிட்டான். புத்தி எப்படிப் போகுது பாத்தியா?" என்று கத்தினாள்.

"நான் தெரியாம தப்பு பண்ணிட்டேன் வரேன்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார் வாத்தியார்.

வாத்தியார் கிளம்புவதைப் பார்த்ததும் விசாலாச்சிக்குப் பதைப்பு வந்துவிட்டது. ரெண்டாம் பிள்ளை, வாத்தியார் சொன்னால்தானே கேட்கிறான். ரெண்டுநா சாப்பிடாமல் இருப்பவனைச் சாப்பிட வைக்க இந்த வாத்தியாரால் தான் முடியும். கோபத்தை அடக்கிக்கொண்டு, "வந்தது வந்த, ஒரு வாய் சாப்பிட்டு வந்த விஷயத்தைச் சொல்லிட்டுப் போ வாத்தியாரே..." என்றாள் விசாலாச்சி.

வாத்தியாருக்குப் பயமாக இருந்தது. 'உம் புள்ளை ஸ்கூல்லயே மொத மார்க் எடுத்திருக்கான். சர்க்கார்ல உபகாரச் சம்பளம் தருவாங்க, மேல படிக்க வை'ன்னு சொல்லத்தான் வந்தார். ஆனால் இவர்கள் போட்ட போடில் தனக்கு உபகாரச் சம்பளம் கிடைத்ததாய் நினைத்துக்கொண்டு "போட்ட சாப்பாடு போதும் விசாலாச்சி" என்றார்.

"சும்மா பயப்படாம வந்த விஷயத்தைச் சொல்லு வாத்தியாரே" என்று தைரியம் கொடுத்தான் பரமன். சொன்னால் மட்டும் விசாலாச்சி கேட்டுவிடவா போகிறாள் என்று அலுத்துக் கொண்ட வெங்கட்டன் வாத்தியார், ஆனமட்டும் ஆகட்டும்... போன மானம் போகட்டுமென்று வந்த விஷயத்தைச் சொன்னார். விசாலாச்சிக்குப் பத்திக்கொண்டு வந்தது. பையன் சாப்பிட வேண்டுமே என்று "அத அப்புறம் பேசிக்கிடலாம். ஒரு வாய் சாப்பிடு" என்றாள்.

வாத்தியாரும் பையனும் சாப்பிட்டார்கள். ரெண்டுநாள் பட்டினி கிடந்த ரெண்டாம் பிள்ளை சாப்பிட்ட சந்தோஷத்தில் என்ன சொல்கிறோம் என்று தெரியாமல் "சரி, படிக்கப் போகட்டும் விடு" என்றாள் விசாலாச்சி.

இப்படி பையனைப் படிக்க அனுப்பியதால் வீட்டு மகாலெட்சுமி எருமையை விற்க வேண்டி வந்ததும், அதனால் அதன் கன்று செத்துப்போனதும் ஒரு சோகக் கதை.

(தொடரும்)

மதுரை திருமங்கலம். சபாநாயகர் காளிமுத்துவின் தொகுதி. திருமங்கலம் நகராட்சி, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், திரப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் பதினாறு கிராம பஞ்சாயத்துகள் ஆகியவை இதில் அடக்கம். ஒரு லட்சத்து எழுபத்தோராயிரம் வாக்காளர்கள். கடந்த சட்டமன்ற தேர்தலில், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ.இ.மூ.மு.க. (டாக்டர் சேதுராமன் கட்சி!) வின் தி.மு.க. ஆதரவு வேட்பாளர் ஒச்சாதேவரை பதினாறாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார் காளிமுத்து. இங்கு காங்கிரஸ் நான்கு முறையும், அ.தி.மு.க. மூன்று முறையும், தி.மு.க. இரண்டு முறையும் வென்றிருக்கின்றன. தி.மு.க., அ.தி.மு.க. இரண்டு திராவிடக் கட்சிகளும், காங்கிரஸுடன் கூட்டணி வைத்திருந்த தேர்தல்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளன.

தமிழக முதல்வராக ஜெ. பொறுப்பேற்றவுடன் முதல் கையொப்பமிட்ட சேடப்பட்டி - ஆண்டிப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம், அருகாமைத் தொகுதியான திருமங்கலத்துக்கும் சற்றே கனிவு காட்டியுள்ளது. இதனால் கடந்த இரண்டாண்டுகளாக கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தின் பெரும்பான்மை கிராமங்களுக்கும் நல்ல சுவையான குடிநீர் தொடர்ந்து கிடைத்து வருகிறது.

''என்னோட பாட்டய்யா காலத்துலேருந்து எங்களுக்கு இதுதான் பூர்வீகம். எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்லேருந்து சப்பத் தண்ணிதான் குடிச்சி வந்திருக்கேன். இப்ப ஒரு ரெண்டு வருஷமாத்தான் எங்க ஊருக்கும் நல்ல குடி தண்ணி பைப்பு வந்திருக்கு!'' என்று குறிப்பிடுகிறார் பு.புதுப்பட்டி கிராம விவசாயி வெங்கிடசாமி.

''மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் எங்களைப் போல கிராமத்துப் பொம்பளைங்க வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் வந்திருக்கு'' என்று எஸ். கோபாலபுரம் கிராம ரோஜா மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர் சியாமளா கூற,

''என் பையன் பத்தாவது படிக்கிறான். அடுத்த வருஷம் ப்ளஸ் ஒன் போய்டுவான். 'ஜெயலலிதா கூட்டணிக்குத்தாம்மா நீ வோட்டுப் போடணும். அப்பத்தான் அந்தம்மா அடுத்த வருஷம் எனக்கு ஸ்கூல்ல புது சைக்கிள் தரும்'ங்கறான். அதனால காளிமுத்து நின்னா அவருக்குத்தான் என் வோட்டு'' என்கிறார் நாகலெட்சுமி.

சாத்தாங்குடி கிராமம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்டது. கடந்த தேர்தலில் காளிமுத்து இங்கு வோட்டுக் கேட்டு வந்தபோது, அவர்களின் பல்லாண்டு கோரிக்கையான சாத்தாங்குடி பாலத்தை (காட்டாறு இடையே) கட்டித் தருவதாக வாக்குறுதியளித்திருக்கிறார். மாநில அரசு சார்பில் அதற்கென முயற்சிகள் எதுவும் இல்லாது போகவே, அவரை எதிர்த்து நின்று தோல்வியுற்ற வேட்பாளர் ஒச்சாதேவர் கோரிக்கையின் பேரில், காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் நிதி மூலம் ஆறு மாதங்களுக்கு முன்பே அந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

''ஜெயிச்சுப் போனவர்தாங்க. சபாநாயகராகி ஜம்முனு சென்னையிலேயே உக்காந்துக்கிட்டாரு. நன்றி சொல்லவோ, வேறெதுக்கோ எங்க ஊருப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கலை காளிமுத்து. என்.எஸ்.வி.சித்தன் தந்த தொகுதி நிதியில்தான் இந்தப் பாலத்தைக்கூட கட்டினாங்க'' என்று கோரஸாகக் கூறினர் சாத்தாங்குடி கிராம இளைஞர்களான சித்தன், கோட்டையன், சந்திரசேகர் மூவரும்.

கடந்த தேர்தலின்போது திருமங்கலம் அரசு மருத்துவமனையின் காலரா கொட்டகையினை மாற்றி கட்டடமாக எழுப்பித் தருவதாகக் கூறியிருந்

திருக்கிறார் காளிமுத்து. தற்போது நாம் நேரில் சென்று பார்த்தபோது, அந்தக் காலரா கொட்டகைக்கே காலரா வந்தது போல அத்தனை பலவீனப் பட்டுப் போயிருந்தது. "எப்ப வேணாலும் பொத்துக்கிட்டு விழலாம்னு இருக்குது இந்தக் கூரை. வாந்தி பேதி ஆவுறவங்களை இங்கே கொண்டாந்துதான் போடுறாங்க. காளிமுத்து கட்டித் தரலேன்னா என்னா... இப்ப அடுத்து வர்ற தேர்தல்ல எங்க வேட்பாளர் ஒச்சாதேவர் ஜெயிச்சு வந்தா... அவரு கட்டித் தந்துடுவாரு!" என்று நம்பிக்கையுடன் பேசுகிறார் திருமங்கலவாசியான ஏ.சி. ஆனந்தன்.

அ.தி.மு.க. கூட்டணியின் புதிய சேர்க்கையான ம.தி.மு.க, தொகுதிப் பங்கீட்டில் திருமங்கலம் தொகுதியினைக் குறி வைத்திருக்கிறது. 2001 தேர்தலில் இங்கு தனித்துப் போட்டியிட்ட ம.தி.மு.க வேட்பாளர் வக்கீல் கே.ஆர். சுவாமிநாதன், பத்தாயிரம் வாக்குகள் பெற்றிருக்கிறார். ''கிராமப்புறங்களில் அ.தி.மு.க. செல்வாக்கு அதிகம். அதனால், அம்மா அறிவிக்கும் வேட்பாளர் இங்கு எளிதாக வெற்றி பெறுவார். அது அ.தி.மு.க. வேட்பாளராக இருந்தாலும் சரி, ம.தி.மு.க. வேட்பாளராக இருந்தாலும் சரி...



கரை சேருவாரா காளிமுத்து?


• அழகு ராமன்



• ஒச்சாதேவர்



• பாண்டியன்



• நாகராஜன்



• வெங்கிடசாமி




மதுரை திருமங்கலம்

அவர் அடையாளம் காட்டும் நபர் வெற்றி பெறுவது உறுதி!'' என்று கூறுகிறார் திருமங்கலம் அ.தி.மு.க. ஒன்றிய கழகச் செயலாளர் பாண்டியன்.

விஜயகாந்தின் தே.மு.தி.க. சார்பாக அதன் தலைமையகத்தில் தேர்தல் டிக்கெட் கேட்டு பத்துப் பேர் பணம் கட்டியிருக்கிறார்கள். விஜயகாந்தின் குலதெய்வக் கோயில் திருமங்கலம் சட்டமன்ற தொகுதிக்குள் இருக்கிறது. தே.மு.தி.கவுக்குப் பெரிய அளவில் ஆதரவு இல்லையென்றாலும் கணிசமான வோட்டு கிடைக்குமென்றே தெரிகிறது.



• நாகலட்சுமி



• 'பொடா' நாகராஜன்



• சியாமளா

"தேர்தலின்போது கிராமப்புற இளைஞர்களும், பெண்களும் எங்கள் கட்சி வேட்பாளருக்கு அமோக ஆதரவு தருவார்கள் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது!'' என்று தைரியமாகக் கூறினார். திருமங்கலம் தே.மு.தி.க. நகர துணைச் செயலாளர் அழுக்கு ராமன்.

"திருமங்கலம் தொகுதியில் காங்கிரஸுக்கென்று நிரந்தர வாக்கு வங்கி அப்படியே இருக்கிறது. அதனால் தான் காங்கிரஸ் ஆதரவு பெற்ற வேட்பாளரே ஒவ்வொரு முறையும் இங்கு வெற்றி பெற்று வருகிறார்!'' என்கிறார் காங்கிரஸின் திருமங்கலம் முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர் துரை. மகராஜன்.

சென்ற முறை தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட மூவேந்தர் முன்னேற்றக் கழக வேட்பாளர் ஒச்சாதேவருக்கே இந்த முறையும் சீட் கிடைக்க வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. "தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணி ஆதரவு வேட்பாளர் வெற்றி பெறவே இயலும். ஏனெனில் காளிமுத்து அந்தளவுக்கு தொகுதி மக்களின் வெறுப்பினைச் சம்பாதித்து வைத்துள்ளார்!'' என்று வெடிக்கிறார் திருமங்கலம் நகர தி.மு.க. அவைத் தலைவர் நாகராஜன்.

தொகுதிப் பங்கீட்டில் அ.தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க., 'பொடா' நாகராஜன் என்பவருக்கு திருமங்கலத்தைக் கேட்டிருக்கிறது. "இந்தக் கூட்டணி மூலமாக அ.தி.மு.க. - ம.தி.மு.க. தொண்டர்கள் இடையே புதிய எழுச்சி உருவாகியிருக்கிறது. அதனால் நாங்கள் வெற்றி பெறுவது உறுதி!'' என்கிறார் 'பொடா' நாகராஜன்.

'விஜயகாந்த் கட்சிக்கு இங்கு கணிசமான ஆதரவு இருக்கிறது!'

"தி.மு.க. கூட்டணியில் எங்கள் டாக்டர் சேதுராமன் அவர்களின் கட்சிக்கே திருமங்கலம் சீட் கிடைக்கும் என நம்புகிறோம். சென்ற தேர்தலில் பெற்ற அனுபவங்கள் இந்த முறை எங்களை வெற்றிக் கோட்டைத் தாண்ட வைத்துவிடும்!'' என்று நம்பிக்கையுடன் பேசுகிறார் ஒச்சாதேவர்.


ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, திருமங்கலம் தொகுதியில் மீண்டும் நிற்கும் பட்சத்தில் காளிமுத்து கரைசேர போராட வேண்டியிருக்கும்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ஸர்ச் இன்ஜின்



'தேடல் அப்படிங்கிற ஒரே ஒரு விஷயத்தை வைச்சு ஆரம்பிச்ச கூகுள், என்னா போடு போடுது! புதுசு புதுசா ஏதாவது கொண்டு வந்து ஐ.டி உலக ஜாம்பவானான என்னையே அடிக்கடி தண்ணி குடிக்க வைச்சிருதே!' - இப்படி அடிக்கடி புலம்பிக்கிட்டிருந்த மைக்ரோசாஃப்ட், 'நாங்களும் தேடித் தரப்போறோம். எங்களோட ஸர்ச் இன்ஜின் அட்ரஸ் live.com. உலக மக்களே... இனிமே இணையத்துல தேடணும்னா நீங்க தேடி வர வேண்டிய இடம் லைவ்.காம்' என கூகுளுக்கு குளிர் காய்ச்சலைக் கொடுத்துள்ளது. கூகுள் மட்டும் சளைத்ததா என்ன! 'என் இனிய இணைய மக்களே, கணினி சார்ந்த கண்மணிகளே! இதோ உங்கள் பாசத்துக்குரிய கூகுள் தற்போது புதிய ஆன்லைன் வேர்ட் வெப் ப்ராஸசரை அறிமுகப்படுத்துகிறது. இதன் பெயர் Google Writely. இனிமேல் டாக்குமெண்ட் வேலைகள் என்றால் உங்கள் நினைவுக்கு வர வேண்டியது Writely-தான்' என ஆபீஸ் விஷயங்களிலும் களமிறங்கி மைக்ரோசாஃப்டுக்கு கடுக்காய் கொடுத்துள்ளது. நமக்கென்ன, எது பெஸ்ட்டோ அதை எடுத்து டெஸ்க் டாப்புல போட்டு போய்க்கிட்டே இருப்போம். சரியா!



வந்தாச்சு ஆப்பிள்!

சர்வதேச அளவில் ஆப்பிள் நிறுவனத்தின் பொருள்கள் விற்பனை அதிகரித்துக் கொண்டே இருக்கு. குறிப்பாக இந்தியாவில் அதன் விற்பனை குறிப்பிட்ட சதவிகிதம் உயர்ந்திருக்கு. சரி, விற்பனை அதிகமாக அதிகமாக வாடிக்கையாளர்களின் சேவையையும் அதிகரிக்க வேண்டுமே!

'ஆமா... ஆமா... அதுதானே நியாயம்' என களத்தில் குதித்துள்ளது ஆப்பிள். அதன்படி விரைவில் நமது பெங்களூரில் தனது முதல் கால்சென்டரைத் திறக்கப் போகிறது. டெல் நிறுவனம் இதுவரை இந்தியாவில் மூன்று கால் சென்டர்களைத் திறந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 'வாய்' உள்ள பிள்ளைகளுக்கு 'ஆப்பிள்' கிடைக்கும். கரெக்டா!

- முகில்



தடை

பார்க்க வேண்டுமென
ஆசையே எழாதா?
தொலைபேசியின் மறுமுனையில்
பொங்கிப் பாய்கிறது உன்குரல்

முன்பெல்லாம்
கதைசொல்லி சிரிக்க வைத்ததுண்டு
காரணங்களை அடுக்கியதும் ஒருகாலம்
மன்னிப்பை யாசித்ததும்
புன்னகையால் மழுப்பியதும்
கேலி செய்து தப்பித்ததும்
வேறுவேறு காலங்கள்
இன்று உன் கேள்விக்கு
விடைசொல்ல மொழியின்றி
தொலைபேசியைத் துண்டிக்கிறேன்

உன் வேதனையையும்
விருப்பத்தையும்
அறியாத கல்லல்ல நான்
எனக்குத் தெரியும்

எதிர்பார்த்து எதிர்பார்த்து
வேட்கையுடன் உன் குரலில் வெடிப்பது
அடக்க முடியாத ஆவல்

ஒவ்வொரு முறையும்
புறப்பட்டு வரவே திட்டமிடுகிறேன்
அரும்பும் ஒவ்வொரு கனவின்
தளிரையும்
நசுக்கி விடுகின்றன நெருக்கடிகள்

ஒரு ஏற்பாட்டைச்
செய்து முடிப்பதற்குள்
ஒரு திட்டத்தை வகுத்து
புறப்படும்முன்
ஒரு கனவுக்குத் தகுந்தவனாக
மாறும்முன்
எங்கிருந்தோ உருண்டுவந்து விழுகிறது
ஒரு தடை

பாவண்ணன்

நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

19.3.2006 முதல் 25.3.2006 வரை



படம்: ஸ்ரீஹரி

மேஷம்: திடீர் தனயோகம் கிட்டும். அனாமத்து சொத்துகள் கிடைக்கும். வாக்கு, தனம், கல்வி மேலோங்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். பணக் கஷ்டம் இருக்காது. ஆடை ஆபரண வஸ்துகள் சேரும். வீடு வாசல் வாங்க உகந்த நேரம். மாணவ, மாணவியர் படிப்பில் முன்னேற்றம் அடைவார்கள். கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். குழந்தைப்பேறு கிட்டும். மனச்சலனம் தீரும். வழக்கு, வியாபாரம் வெற்றி பெறும். தூரதேச பிரயாணம் வந்து சேரும். உத்தியோகத்தில் வேலை மாற்றம் ஏற்படும். நண்பர், உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பிக்கும். ஆஞ்சநேயரை வழிபட்டு வரவும்.

ரிஷபம்: செல்வாக்கு பெற்ற வாரம். எதிரிகள் தொல்லை குறையும். முயற்சிக்கும் காரியத்தில் வெற்றி ஏற்படும். அறிமுகம் இல்லாத நபர்கள் உதவுவார்கள். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஏற்படும். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். மனச்சலனம் தீரும். திருமண காரியம் கைகூடும். உத்தியோகத்தில் மாற்றம் ஏற்படும். நோய்நொடி பாதிக்காது. வியாபாரத்தில் கணிசமான பலன் கிடைக்கும். குடும்ப வாழ்வு நற்பலனை அளிக்கும். கணவன்-மனைவி உறவு நன்றாக இருக்கும். மாணவ, மாணவியர் படிப்பில் அக்கறை செலுத்தவும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். குரு/கேது/ராகு வழிபாடு நற்பலனைத் தரும்.

மிதுனம்: சந்தோஷமான வாரம். ஊதிய உயர்வு, பணி உயர்வு கிடைக்கும். திருமணக் காரியம் நடக்கும். பணக் கஷ்டம் வராது. வாக்கு வன்மை, பெயர், புகழ் வந்து சேரும். தொழில் ஸ்தானத்தில் வேலை பளு குறைய நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். எதிர்பாராத தனம் கிட்டும். குழந்தைகள் வழியில் நல்ல காரியம் கைகூடும். மாணவ-மாணவியர் படிப்பில் முன்னேற்றம் காண்பார்கள். கணவன்- மனைவி உறவு நன்றாக இருக்கும். உத்தியோக விஷயமாக சிலர் வெளிநாடு செல்ல வாய்ப்பு வந்து சேரும். வீடு வாங்க நல்ல தருணம். வழக்கு, வெற்றி அளிக்கும். உடல்நிலை நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல நிலையை அடைவீர்கள். ராகு/கேது வணங்கி வருதல் நலம்.

கடகம்: மேன்மையான வாரம். நற்பலன்கள் நிறைய நடக்கும். தெய்வ தரிசனம் கிட்டும். நல்ல விஷயங்கள் காதுக்கு வரும். மனக்கவலை தீரும். பொருளாதார கஷ்டம் விலகும். பணவரவு காத்திருக்கிறது. நீண்டநாள் பிரச்னை முடிவுக்கு வரும். நண்பர்களின் ஆதாயம் கிட்டும். படிப்பில் வெற்றி வாகை சூடுவர். திருமணக் காரியம் கைகூடும். உடல்நிலை பாதிக்காது. புண்ணிய ஸ்தலங்கள் செல்வீர்கள். உத்தியோக வேலையில் நல்ல மாறுதல்

● எனது சிநேகிதியின் மகனுக்கு குழந்தைப்பேறு அமையவில்லை. தம்பதியின் ஜாதகங்களைப் பார்த்து குழந்தைப்பேறு எப்போது எனச் சொல்ல முடியுமா?

- காமேஸ்வரி விஸ்வநாதன், திருச்சி - 14

உங்கள் சிநேகிதியின் மகனுக்கு 2006-ல் குழந்தைப்பேறு ஏற்படும். பரணி, பூராடம், பூரம், நட்சத்திரத்தில் ஆண் குழந்தை பிறக்கும். பரிகாரம் வேண்டாம்.

● என் மகனின் வேலை, திருமணம் பற்றிக் கூறவும்...?

- எம். ராஜேஸ்வரி, சென்னை - 28

உங்கள் பையனுக்கு வெளிநாட்டில் பணி நிரந்தரமாக அமையக்கூடிய வாய்ப்புள்ளது. முயற்சி செய்யவும். 26 வயதுக்

தெரியும். வியாபாரத்தில் நல்ல லாபம் ஏற்படும். மகான் சந்திப்பு ஏற்படும். வேலையில் பிரச்னை ஏற்படாது. குரு/சனி வழிபாடு சிறந்தது.

சிம்மம்: பல போராட்டத்துக்குப் பிறகு சாதனை படைக்கும் வாரம். மறைமுக எதிர்ப்புகள் மறைந்து போகும். எதிரிகள் நண்பர்களாக வரும் காலம். லட்சியங்கள் ஈடேறும். மூன்றாவது மனிதர்களால் அனுகூலம் ஏற்படும். உடல்நிலையில் அக்கறை செலுத்துவது நல்லது. வண்டி, வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. குடும்ப வழியில் விட்டுக் கொடுத்துப் போவது நன்மை அளிக்கும்.

கன்னி: சுபமான வாரம். லட்சியங்கள் நிறைவேறும். பணவரவு ஏற்படும். குடும்ப வழியில் அனுசரித்துப் போவது கணவன்-மனைவி உறவு நற்பலனை அளிக்கும். வீடு வாசல் வாங்க நல்ல தருணம். குழந்தைகள் வழியில் சுபநிகழ்ச்சி கைகூடும். வழக்கு வெற்றி அளிக்கும். புதியவர்களால் ஆதாயம் கிட்டும். உடல்நிலை பாதிக்காது. மனைவி வழியில் உடல் நலிவுகள் ஏற்பட்டு விலகும். வியாபாரத்தில் நல்ல லாபம் ஈட்டும். உத்தியோகத்தில் பணி உயர்வு ஏற்படும். படிப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு/கேது வழிபாடு சிறந்தது.

துலாம்: வழக்கு வெற்றி பெறும். நோய் நொடிகள் விலகும். சுய கௌரவம் காப்பாற்றப்படும். வாக்கு, தனம், கல்வி மேலோங்கும். எதிர்பாராத தனயோகம் கிட்டும். கொடுக்கல், வாங்கல் நற்பலனை அளிக்கும். வீடு வாசல் வாங்க நல்ல தருணம். திருமணக் காரியம் கைகூடும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் கிட்டும். விரோதிகள் ஒழிவார்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கணவன்- மனைவி உறவு நற்பலனைத் தரும். மகப்பேறு பாக்கியம் ஏற்படும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். புதிய தொழில் துவங்க நல்ல காலம். செலவுகள் சுபமானதாக இருக்கும். கல்வியில் வளர்ச்சி காண்பார்கள். சனி/குரு வழிபாடு சாலச் சிறந்தது.

விருச்சிகம்: செல்வாக்கு மிகுந்த வாரம். பணக் கஷ்டம் இருக்காது. உடல்நிலை பாதிக்காது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். கணவன்- மனைவி உறவு நன்றாக இருக்கும். எதிர்பாராத பிரயாணம் செல்ல நேரிடும். புதிய ஆடை, ஆபரண, அலங்காரப் பொருட்கள் சேரும். வீடு/வாகனம் வாங்க நல்ல காலம். குழந்தைகளைப் பற்றிய மனக்கவலை தீரும். நெருங்கிய கூட்டாளிகளைப் பிரிய நேரிடும். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். சுயசொத்து சேரும். எதிரிகளால் தொல்லை இருக்காது. ராகு/கேது வழிபடுவது சிறந்தது.

தனுசு: திடீர் அதிர்ஷ்டங்கள் கிட்டும். அறிமுகம் இல்லாத நபர் ஒருவர் உதவி செய்வார். பணக் கஷ்டம் விலகும். சுபச் செலவுகள் ஏற்படும். தனம், கல்வி, வாக்கு மேலோங்கும். நீண்ட கால எண்ணங்கள் பலன் அளிக்கும். தொழில் ஸ்தானத்தில் நல்ல மாற்றம் ஏற்படும். உடல்நிலை பாதிக்காது. கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். நண்பர்களை விட்டு விலகும் வாய்ப்பு வரும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். தொலைதூர பிரயாணம் வந்து சேரும். வியாபாரத்தில் புதிய திருப்பம் ஏற்படும். ஆஞ்சநேயர்/ ராகு/கேது வழிபட்டு வரவும்.

பரத்வாஜ் பதில்கள்

குள் நல்ல நிலைக்கு வரக்கூடிய ஜாதகர். அசலில் திருமணம் நடக்கும். படித்த, பண்புள்ள நல்ல வேலையிலுள்ள பெண் அமையும்.

● **என் மகன் திருமணம் எப்போது?**

- எஸ்.பி. சாரதி, சென்னை - 54

தங்கள் மகனுக்கு 39 வயது வரை ராகுதசை நடக்கும். அதுவரை திருமணம் நடக்க வாய்ப்பு இல்லை. 40 வயதில் திருமணம் முடியும். நல்ல இடத்து சம்பந்தம் அமையும். ராகு தசை கஷ்டதசையாக உள்ளதால் ராகு ப்ரீதி செய்து வரவும். குருதசை 16 வருடம் நன்றாக இருக்கும்.

● **என் மகனுடைய திருமண பந்தம் முறிந்துவிட்டது. மறுமணம் செய்யலாமா? எப்போது அமையும்?**

- வி.கோபால், மேட்டூர்

உங்கள் பையனுக்கு 30 வயது வரை திருமணம் செய்யக்கூடாது என்பது விதி. அதனால்தான் திருமணம் முறிந்துவிட்டது. கவலையை விடுங்கள். 2006-ல் திருமணம் நடக்கும். சுத்த ஜாதகமாகச் சேர்க்கவும்.

● **என் மகளின் திருமணம் எப்போது நடக்கும்? சொந்தத்தில் அமையுமா?**

- வி. ராஜலிங்கம், நாமக்கல்

உங்கள் மகளுக்கு உறவில் திருமணம் நடைபெறாது. உடன்பிறப்பு இருவர் உள்ள இடத்தில் பையன் அமைவான். 2007-ல் திருமணம் நடக்கும். ○

மகரம்: புகழ்வாய்ந்த செல்வாக்கை பெறும் வாரம். தெய்வ அனுகூலம் ஏற்படும். புண்ணிய ஸ்தலங்கள் செல்வீர்கள். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும். மகான்களுடன் சந்திப்பு கிட்டும். பணக் கஷ்டம் வராது. தொழில் ஸ்தானத்தில் பதவி மாற்றம் ரெடி. வெளிநாடு சென்று பணியாற்ற நேரிடும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குடும்பத்தில் சுப காரிய பேச்சுவார்த்தை நடக்கும். திருமணம் கைகூடும். உடல்நிலையில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். குரு வழிபாடு செய்யவும்.

கும்பம்: சிகரத்தின் உச்சியை அடையும் வாரம். பண வரவு காத்திருக்கிறது. சுப நிகழ்ச்சிகள் கைகூடும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. நீண்ட கால எண்ணங்கள் ஈடேறும். உடல் நிலையில் கவனம் முக்கியம். உணவுக் கட்டுப்பாடு அவசியம். அனாவசியமான பேச்சுகளைக் குறைக்கவும். குடும்ப வழியில் அனுசரித்துப் போவது நற்பலனைத் தரும். வேலைப் பளு அதிகரிக்கும். புதிய வீடு வாங்க நல்ல சமயம். தூர தேசப் பிரயாணம் வந்து சேரும். அறிமுகம் இல்லாத நபர் ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முயல்வார். திடீர் தனயோகம் கிட்டும். திருமணக் காரியம் கைகூடும். வண்டி வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. கல்வியில் கவனம் தேவை. ராகு/கேது வழிபாடு சிறந்தது.

மீனம்: வேலையில் உயர்வு, மாற்றம் ரெடி. பொருளாதாரச் சிரமம் குறையும். மனத்தில் புத்துணர்ச்சி ஏற்படும். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். அனாமத்து சொத்து சுகம் சேரும். நீண்ட கால கனவுகள் நிறைவேறும். பத்திரிகைகளில் பெயர் வரும். சொசைட்டியில் நல்ல மதிப்பைப் பெறுவீர்கள். குடும்ப உறவில் அனுசரணை தேவை. உடல்நிலை பாதிக்காது. எதிரிகள் தொல்லை குறையும். மனச்சலனம் தீரும். படிப்பில் மேன்மை பெறுவீர்கள். வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி காண்பிக்கும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் ஏற்படும். டென்ஷன் குறையும். ராகு/கேது/குரு வழிபட்டு வரவும்.

“ஏங்க!...”

பத்திரிகையில் ஆழ்ந்து போயிருந்தவனுக்கு இவள் கூப்பிட்டது கேட்கவில்லை.

“ஏ...னு...ங்...கோ!” கன்னட வாடையுடன் குரல் இன்னும் உயர, திடுக்கிட்டுத் திரும்பினான். “என்னடி தொணதொணன்னு...”

“இத பாருங்க் 'டீ' போடாதீங்கன்னு எத்தினிவாட்டி சொல்லியிருக்கேன். அப்புறம் நான் 'டா' போடுவேன்!”

“சரிதாண்டா... போடுடா...”

“சரி டீ, போடறேண்டி!”

இருவரும் சிரித்தார்கள்.

“ஏங்க... உங்களுக்கு எந்தப் பூ பிடிக்கும்?”

“நீதான்... உன்னைத்தான்...!”

“அது இல்லீங்க, நெஜமான பூ...!”

“ஒன்னைவிட ஒரு பூ நெஜமா இருக்கா, எனக்குப் புடிச்ச மாதிரி?” கண்ணடித்தான். அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

எனக்குப் பிடிச்ச பூ!

என்ன கற்பனை சிறகு விரிகிறதா? மேலே நீங்கள் படித்தது வெறும் கற்பனைதான்... நிஜமல்ல. தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருக்கிற ஒரு கணவன் எனக்கு. எனக்குக் கிடைத்த வாழ்க்கை இப்படி. அழுவதெல்லாம் எனக்குப் பிடிப்பதில்லை. சிரிக்கவும் முடியவில்லை. இப்போதைய என் வியாதி இதுதான்.

நான் வாழ்ந்தாக வேண்டும். இளமைக் கனவுகளைச் சுமக்கும் எல்லோரையும் போலத்தான் நானும் கேட்கிறேன். நானும் அந்தக் கனவுகள் நிஜமாகி வாழ்ந்தாக வேண்டும். இது அவருக்குப் புரியவில்லையா, தெரியவில்லையா? ஜடங்கள் இருக்கலாம். இப்படியுமா?

'ஜடம்' என்பதுகூட அவ்வளவு சரியல்ல. படிக்கப் பிடிக்கிறது, தனிமை பிடிக்கிறது, நாளுக்கு ஏழெட்டு முறை டீ பிடிக்கிறது, விட்டுவிட்டு சிகரெட் பிடிக்கிறது, ருசி ருசியான சமையல் பிடிக்கிறது - ஒரு 'ஜடம்' இப்படியெல்லாம் இருக்காதே!

வெளியே அழுவதுதான் பிடிக்காதே தவிர, உள்ளுக்குள் அது என்னை மீறிய பலத்துடன் இயங்குவதை என்னால் தடுக்கவே முடிந்ததில்லை. வெளியே யாரிடமும், நெருங்கிய தோழிகளிடம் கூட, அம்மாவிடம் கூட இதை நான் பேசியதில்லையே தவிர, உள்ளே எனக்குள் நான் பேசுவதை என்னாலும் நிறுத்த முடியவில்லை.

எல்லாம் நேற்று மாலை வரைதான். ஆபீசிலிருந்து என்னவர் வழக்கம்போல தனியாக வரவில்லை. கூட இன்னொருவர். இவர் வயதிருக்கும். உள்ளே நுழையும்போதே அதிசயம், என்னவர் பேசினார் “இவன் என்னோட படிச்சவன், என் ஆபீசுக்கே மாத்தலாகி வந்திருக்கான்.”

அவர் வணக்கம் சொன்னபோது, அது தற்செயலாகத்தான் நடந்தது - என் கண்கள் என்னவரின் பார்வையை நேர்கொண்டபோது - ஏதோ ஒரு புது அனுபவம், சின்ன 'ஷாக்.' நான் மீள்வதற்குச் சில நொடிகளாயின.

மறுபடியும் அதிசயம்... “ரொம்பப் படிச்சவன்; நிறைய பேசிக்கிட்டே இருப்பான்... தமாஷ் பேர்வழி!”

பேசுவது என்பதே எனக்கும் தமாஷாகி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டனவே! டீ எடுத்து வந்தபோது இருவரும் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். என்னவர் நீளநீளமாக அவருடன்

விவாதித்தது எனக்குப் புதுமையாக இருந்தது. அவர் மரியாதையுடன் என் வருகையை ஆமோதித்துவிட்டு இவருடன் பேச்சைத் தொடர்ந்தார்.

நான் நிற்பதா, அங்கே உட்காருவதா? கொஞ்சம் குழம்பி உள்ளே போய்விடத் திரும்பியபோது அவர் சொன்னார் – "டீ ரொம்ப சூப்பர்ங்க, தாங்ஸ்..." எங்கோ ரோஜாப்பூ மணத்தது.

-ஹேமலதா பாலசுப்ரமணியம்

ஓர் அசட்டுச் சிரிப்புடன் உள்ளே போகத் திரும்பினேன். அவரே மறுபடியும்... "உக்காருங்களேன் மேடம், உங்களுக்கு வேற அவசர வேலை இல்லைன்னா...."

எனக்குத் தயக்கமாக இருந்தது. என்னவர் என்ன நினைப்பாரோ... அவர் பக்கம் திரும்பியபோது லேசாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தார். ரோஜா மொக்கு... இன்னொரு நாற்காலியை என்னவரே தன்னருகே இழுத்துப் போட, என்ன வந்துவிட்டது எனக்கு? உட்கார்ந்து ஏன் நெளிய வேண்டும்?

அரசியல், இலக்கியம், புத்தகங்கள், டீ.வி. தொடர், பிச்சைக்காரர்கள், மனித நேயம்... இருவரும் பேசிக்கொண்டே இருக்க... நான் மாறி மாறி இருவரையும்





கேட்டுக் கொண்டே...

"ஏன் மேடம், நீங்க பேசவே மாட்டீங்களா?"

''ஏய்... அவ எம்.ஏ. லிட்ரேச்சர்... ஜர்னலிசம் படிச்சவ...''

நண்பர் இலேசாகத் திகைத்தது தெரிந்தது - "சாரி மேடம்... நான் ரொம்ப உளறி இருந்தா மன்னிச்சுக்குங்க... இது என்னோட வியாதி!"

என்னால் இப்போது சிரிக்க முடிந்தது. எழுந்து கொண்டேன்... "மன்னிச்சுருங்க... உள்ளே வேலை இருக்கு..."

இப்பொழுதெல்லாம் மாலை நேரங்களில் இருவரும்தான் வருகிறார்கள். டீ சூப்பராக இருக்கிறது. அங்கே மூன்று நாற்காலிகளுக்கும் இடம் இருக்கிறது. இந்த மாலை நேர மாறுதலை இப்போதெல்லாம் நான் அதிக ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். இது எனக்கு வேண்டியிருக்கிறது.

"மேடம், நீங்க எப்பவாச்சும் தான், அதுவும் ஒண்ணு ரெண்டு வார்த்தை தான் பேசறீங்க..."

இத்தனை நாட்களாக நான் கேட்காததை இன்று கேட்கிற துணிவு இப்போது - "ஏன் சார், நீங்க ஒரு தடவை கூட உங்க மிசஸை அழைச்சுக்கிட்டே வரலியே... கூட்டி வாங்களேன்..."

நண்பரின் முகம் லேசாக வெளிறியதை என்னவர் கவனிக்கவில்லை. "அதானே... ஏண்டா, ஒரு தடவை கூட நீ என்னை உன் வீட்டுக்கு அழைச்சுக்கிட்டே போனதில்லையே... நானும் உன் மிஸஸைப் பாக்கணும்... நாளைக்குக் கூட்டிவா..."

நண்பர் திடீரென்று எழுந்து கொண்டார். "நல்லவேளை, ஞாபகம் வந்துடுச்சு... ஒரு அவசர மீட்டிங்... மறந்தே போனேன்... அப்புறம் பாக்கலாம்."

எங்கள் பதிலுக்குக் காத்திராத ஓட்ட நடை.

அடுத்த நாள் மாலை என்னவர் மட்டும் தனியாக வந்தபோது நானும் ஏதும் கேட்கவில்லை. உடை மாற்றி, டீ குடித்து படிக்க உட்கார்ந்தவர்தான். பழைய நிலை. மறுபடி வேதாளம்! முருங்கை வளர்த்தால் முசுக்கட்டை வரும். வந்து கொண்டிருக்கிறது...

மனசு அரிக்கிறது. ஆனால் நா எழ மறுக்கிறது. இடையில் தளர்ந்த மனத்தில் இப்போது பழைய இறுக்கம்.

வழக்கமான சாப்பாட்டு மௌனம். ஒரு அசட்டுத் துணிச்சல் என் நாவைத் தூண்டிவிடுகிறது...

"ஏன் உங்க நண்பர் வரலே...?"

எதிர்பார்க்கவில்லை போல... திரும்பி வேறு பக்கம் வெறித்தவர் என்னைப் பாராமலேயே - ''ஆபீசுக்கே வரலே... ஏன்னு தெரியலே...''

எனக்குத் தெரிந்தது - அன்று மதியமே... வாசற்கதவு தட்டப்பட்டபோது, 'இந்த நேரம் யார்?' திகைப்புடன் கதவைத் திறந்தேன்.

அழகான சுடிதாரில் அவள். வயதில் என்னைவிட சின்னவளாகத் தெரிந்தாள். இன்னொரு தடவை பார்க்க அழைக்கும் தோற்றம். "நான் மிஸஸ்... நீங்கதானே....?"

"ஓ, வாங்க, வாங்க!"

உட்கார்ந்தவள் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"வேற யாரும் இல்லியா?

"இல்ல... உங்களை அழைச்சுக்கிட்டு வரச் சொன்னேன்... நேத்தே எதிர்பார்த்தேன்"

"அப்படியா?"

"சொல்லலையா?"

"இல்லியே... சொல்ல மாட்டார்!"

"என் வீட்டுக்காரர் பத்தி, இங்கே தினம் வந்ததைப் பத்தி எதுவுமே சொல்லலியா?"

"இல்லே... ஆனா எனக்குத் தெரியும்..."

எனக்குக் குழப்பம். நான் வியப்புடன் அவளை ஏறிட்டதைப் புரிந்துகொண்டவளாகப் பேசினாள்...

"நான் கொஞ்ச நாள் சிரமமெடுத்து அலைஞ்சு இவர் எங்கே வர்றார்னு தெரிஞ்சுக்கிட்டேன். உங்களைப் பாத்துப் பேசணும் போல இருந்துச்சு... இன்னைக்குத்தான் லீவ் கெடச்சுது... நீங்க ஃப்ரீயா தானே இருக்கீங்க?"

திடீரென்று மனசில் என்னவோ சுமை குறைந்து இலேசான உணர்வு... ஒரு ஆறுதலுடன் கூடிய தோழமை எண்ணம்...

"உங்களவர் ரொம்ப அழகாகப் பேசறார்... பல விஷயங்கள் தெரிஞ்சிருக்கு..."

"கேள்விப்பட்டிருக்கேன்..."

மறுபடி திகைப்பாக இருந்தது எனக்கு.

"எவ்வளவோ முயற்சி செய்தும் என் பையனுக்குத் திருமணம் கைகூட மாட்டேங்குது ஜோசியரே!"

"கவலையேபடாதீங்க... இது ரொம்ப அதிர்ஷ்டமான ஜாதகம்!"

- ஞா. ஞானமுத்து

திடீரென்று அவள் கேட்டாள்: "உங்களுக்கு என்ன பூ பிடிக்கும்?" என் மனசில் திடீரென பூ மணம்...

"எனக்கு ரோஜா பிடிக்கும், மல்லிகை பிடிக்கும்... ரெண்டும் ரொம்ப கிராக்கி - கெடைக்கிறதே இல்லே..."

அவள் எங்கள் திருமண போட்டோவையே பார்த்துக் கொண்டிருக்க, நான் கேட்டேன் -

"உங்களுக்கு?"

பதில் சொல்லாமல் அவள் எழுந்து நின்றாள்...

"உக்காருங்க, டீ சாப்பிட்டுட்டுப் போகலாம்."

டீ கோப்பையுடன் வந்தபோதும் அவள் அந்தப் புகைப்படத்தையே வெறித்துக் கொண்டிருந்தது என்னவோ போலிருந்தது எனக்கு... துவக்கத்தில் என் மனசிலிருந்த லேசான தன்மை இப்போது ஏனோ மாறிவிட்டது...

சுவைத்துக் குடித்தவள், "சூப்பரா இருக்கு... ம்... என்னமோ கேட்டீங்களே...?"

ஏதோ கேட்க வேண்டுமே என்ற மனநிலை இப்போது எனக்கு...! 'ஏன் அந்தப் படத்தையே அவ்வளவு நேரம் வெறித்தாய்?' எனக் கேட்கலாமா...

"ஆங்... ஞாபகம் வந்துருச்சு... எனக்கு புடிச்ச பூ பத்தி கேட்டீங்க!"

சுரத்தில்லாமல் "சொல்லுங்க" என்றேன்.

"வாழைப்பூ!"

எனக்குச் சிரிப்பு வந்தது. "சமைக்கிறதுக்குக் கேக்கலே..."

"நானும் அதைச் சொல்லலே... புடிக்கிறது எதுவா இருந்தா என்ன? கெடைக்கிறது அது இல்லியே... கெடைக்கிறதையே புடிக்கிறதாக்கிக்கிறதுதான் நல்லது, இல்லியா! எனக்குக் கிடைக்கிறது வாழைப்பூதான்!"

"ஏன், வாழைப்பூவும் நல்லதுதானே - உடம்புக்கு ரொம்ப நல்லதும்பாங்க!"

"கவனிச்சிருக்கீங்களா... கீழே மட்டும்தான் விரிஞ்சிருக்கும்... மேலே முகம் பக்கம் கூம்பி குறுகி இருக்கும்... மத்த பூ மாதிரி அதுக்குச் சிரிக்கவே தெரியாது!"

நான் சிரித்தேன்... உரக்க... இன்னும் உரக்க... மனம் இலேசாக... "எனக்கும் தான்!"

o

''கலாபம்னா ஆண் மயில். ஆண் மயில்போல் அழகான காதலனைத்தான் கலாபக் காதலன்னு சொல்வோம்'' - மிக அழகாக தன் படத் தலைப்புக்கு விளக்கம் சொல்கிறார் அக்ஷயா. 'கலாபக் காதலன்' படத்தின் மிரட்டல் வில்லி. தமிழ் நடிகைகளுக்குச் சரியான அங்கீகாரம் கிடைப்பதில்லை என்பதில் இவருக்கு அதீத கோபம்.

''தமிழ் சினிமாவுல எத்தனையோ நடிகர்கள் இருந்தும் ஏன் விஜயை மட்டும் நம்ம வீட்டுப் பையனா ரசிகர்கள் பார்க்குறாங்க! அவரோட அந்தத் தமிழ் முகம். அதுதான் அவரோட வெற்றி ரகசியம். இந்தத் தத்துவத்தைப் புரிஞ்சுக்காம வெளுப்பான முகத்தைத் தேடி மும்பைக்கும் பெங்களூருக்கும் ஏறி இறங்கிறதைப் பார்த்தா எனக்குக் கோபம் கோபமா வருது. அந்த நடிகைகள்கிட்ட தமிழ்ப் படத்துக்கேத்த நேட்டிவிட்டி இருக்காது. படத்தோட ஒட்டவே மாட்டாங்க. 'கலாபக் காதலன்' படத்துக்குக்கூட இயக்குனர் இகோர் முதல்ல மும்பை நடிகைகளைத்தான் தேடியிருக்கிறாரு. ஆனா கடைசியா அவர் கண்ணுக்குக் கண்மணியா தெரிஞ்சது நான் மட்டும்தான். இனி நூறு படங்கள்ல நடிச்சாலும் கண்மணியையும் அதை எனக்குப் பரிசளித்த இயக்குனர் இகோரையும் மறக்க முடியாது'' எனும் அக்ஷயா, ஏற்கெனவே 'கோவில்பட்டி வீர லட்சுமி' படத்தில் சிம்ரனின் தங்கையாக நடித்தவர். இவரது பாட்டி சாயாதேவி தெலுங்கில் இருநூறு படங்களுக்கும் மேல் கோலோச்சியவர்.



அக்கா கணவர் மீது ஆசைப் படும் கதாபாத்திரத்தில் நடிக்க ஏதும் தயக்கம் இருந்ததா?

“கண்மணி கதாபாத்திரத்தின் செய்கைகளில் எனக்கு உடன் பாடில்லைதான். ஆணும் பெண் ணும் ஒழுக்கத்தைக் கடைப் பிடிப்பதுதானே முறை. ஆர்யா ஏற்றிருந்த அகிலன் கதாபாத் திரம்போல ஒழுக்கசீலரா, குறிப்பா பெண்ணை ஏமாற்று பவரா இல்லாத துணையைத்தான் எனக்குப் பிடிக்கும். ஆனா சினி மான்னு பார்த்தா அக்ஷயாவுக்கு



“விஜயின் வெற்றி ரகசியம்!”

இது மாதிரியான பாத்திரங்கள்தாங்க அட்சயப் பாத்திரம்” என் கிறார்.

“பெரிய ஹீரோவுடனோ, பெரிய பேனரிலோ மட்டும் நடிக்கறது என் விருப்பமில்லை. ஹீரோவையும் மரத்தையும் சுத்தி டூயட் பாடி நடிக்கத்தான் எவ்வளவோ பேர் இருக்காங் களே. ஏற்கும் கதாபாத்திரம் முக்கியம். ஒரு நல்ல நடிகையா மட்டும் நான் நீடிச்சா போதும். சாந்தி தியேட்டர்ல டிக்கெட் கிழிக்கறவர் ஒவ்வொரு ஷோவுலயும் நான் நடிச்ச காட்சிகள் வரும்போது தவறாம பார்த்துடுவாராம். ‘என்னமா நடிக்கிறே. உன் கண்கள்லேயே வசனங்களைப் பேசுறியேம்மா’ன்னு என்கிட்ட வந்து பரவசப்பட் டாரு. படம் பார்த்துட்டு இயக்குனர்கள் பலரும் பாராட்டுறாங்க. இந்தப் பாராட்டும் மதிப்பும்தாங்க ஒரு கலைஞனுக்கு உணவு, உறக்கம் எல்லாம்”

- சநகன்

படம்: ஆன்டனி ஸ்ரீதர்

நான் குழந்தையாயிருந்த காலத்திலேயே புஸ்தகங்கள் என்றால், எனக்கு அசாத்தியப் பிரேமையாம். என்னுடைய தாயார், தகப்பனார் சொல்லித்தான் இதை நான் தெரிந்து கொண்டேன். கண்ணுக்கு எட்டிய தூரத்தில் எங்கே புஸ்தகத்தைக் கண்டாலும், உடனே தாவிச் சென்று அதை எடுத்துக் கொள்வேனாம். பிறகு அதைப் பக்கம் பக்கமாகக் கடித்து மென்று தின்றாலொழிய எனக்குத் திருப்தி உண்டாகாதாம்! நடுவில் புஸ்கத்தை யாராவது வாங்கிக்கொள்ள முயன்றால், அழுகை பிடித்து விடுவேனாம்.

கொஞ்சம் வயதான பிறகு, புஸ்தகத்தைக் கடித்துச் சுவைப்பதற்குப் பதிலாக, படித்து ருசிப்பதற்கு ஆரம்பித்தேன். கதைப் புஸ்தகம் என்று எது கிடைத்தாலும் சரி, ஒரே மூச்சில் அதைப் படிக்காமல் விடுவதில்லை. விக்ரமாதித்யன் கதை முதல், கமலாம்பாள் சரித்திரம் வரையில் தமிழில் வெளியாகியிருந்த கதைப் புஸ்தகங்கள் பலவற்றை, பெரும்பாலும் இரவல் வாங்கியே படித்து விட்டேன். பண்டித நடேச சாஸ்திரிகளின் 'திக்கற்ற இரு குழந்தைகள்' என்னும் புஸ்தகத்தை, ஒரு நாள் மத்தியானம் சாப்பிடாமல் படித்து முடித்தது எனக்கு ஞாபகமிருக்கிறது. ஸ்ரீரெங்கராஜுவின் 'இராஜாம்பாள்' என்னும் துப்பறியும் நாவலை, மண்ணெண்ணெய் விளக்கில் ராத்திரி ஒரு மணி வரையில் படித்துக் கொண்டிருந்ததும் நினைவுக்கு வருகிறது. தமிழில் படிப்பதற்கு இன்னும் ஏராளமான கதைப் புஸ்தகங்கள் இல்லையே என்று நான் வருந்தியதும் உண்டு.

பிறகு, கோண எழுத்து பாஷை (ஆங்கில மொழியைப் பாமர வழக்கில் இப்படிக் குறிப்பிட்டது உண்டு) கொஞ்சம் தெரிந்ததோ இல்லையோ, இங்கிலீஷில் கதைப் புஸ்தகங்கள் படிக்கத் தொடங்கினேன். அப்புறம், புஸ்தகத்துக்குப் பஞ்சமே கிடையாது. அம்மா! அலெக்ஸாண்டர் டூமாஸின் 'மாண்டி கிறிஸ்டோ' முதலிய நாவல்களைப் படிக்கும்போது, எவ்வளவு பரபரப்பு! எவ்வளவு ஆவேசம்! எத்தனை நாள் ராத்திரி கண் விழிப்பு! அப்புறம் கொஞ்ச நாளில், எப்படியோ நாவல் படிப்பதில் ருசி குறைந்தது; நாளாக ஆக, நீளமான நாவல் எதையுமே படிக்க முடியாமல் போய்விட்டது. தப்பித் தவறிப் படித்தாலும் ஒரே மூச்சில் படிப்பதென்பது அசாத்யமாயிற்று.

கதைகள், நாவல்கள் படிப்பதில் பொதுவாக அசிரத்தை ஏற்பட்டதென்றால், வேறொரு வகை புஸ்தகங்களின்மேல் அளவில்லாத கோபம் எனக்கு உண்டாவது வழக்கம். அதாவது, இந்தியர்கள் இங்கிலீஷில் கதைப் புஸ்தகம் எழுதினார்கள் என்றால், அந்தச் செய்தியே எனக்கு ஆத்திரம் உண்டாக்கும், "இங்கிலீஷில் கதைப் புஸ்தகங்களே இல்லையல்லவா? இவர்கள் எழுதித்தான் அந்தக் குறையை நிவர்த்தி செய்யப் போகிறார்களாக்கும்?" என்று கருதுவேன்.



இத்தகைய மனோபாவத்

தில் நான் இருக்கும் சமயத்தில்தான், Swami and Friends என்னும் இங்கிலீஷ் புஸ்தகம் என் கைக்கு வந்தது. ஆசிரியர் ஆர்.கே. நாராயணன் என்றும், பிரசுரித்தவர்கள், லண்டனிலுள்ள ஹாமிஷ் ஹாமில்டன் என்னும் கம்பெனியார் என்றும் போட்டிருந்தது. அதைக் கொடுத்த நண்பர், "புஸ்தகம் வெகு நன்றாயிருக்கிறது. நீங்கள் அவசியம் படிக்க வேண்டும். விகடனிலும் மொழிபெயர்த்துப் போட்டால்

புத்தக ருசி!



நல்லது'' என்ற சிபாரிசுடன் கொடுத்தார். புஸ்தகத்தை வாங்கிக் கொண்ட நான், கொஞ்சநாள் வரையில் அதைப் பிரித்துப் பார்க்கவேயில்லை. அப்புறம் இரண்டு மூன்று தடவை ஞாபகப்படுத்தப்பட்ட பிறகு, "சரி, வாசித்துத்தான் தீர வேண்டும் போலிருக்கிறது!'' என்று எண்ணி, படிக்கத் தொடங்கினேன். முதல் பத்துப் பக்கம் படித்தேனோ இல்லையோ, புஸ்தகத்தில் ஆழ்ந்து போய்விட்டேன். பிறகு, புஸ்தகத்தை முடித்துக் கிழே வைத்த பிறகுதான், இத்தனை நேரமும் புஸ்தகம் வாசித்துக் கொண்டிருந்தோம் என்பது ஞாபகம் வந்தது. வாசிக்கும்போது, நானே மறுபடியும் பள்ளிக்கூடத்துச் சிறுவனாக மாறிவிட்டேன். கதாபாத்திரங்கள் எல்லாரும் என்னுடைய ஆத்மார்த்த சிநேகிதர்களானார்கள். சம்பவங்கள் எல்லாம் நானே நேரில் பார்த்து அனுபவித்த சம்பவங்களாயிருந்தன. ஸ்வாமிநாதனுக்கும் அவனுடைய சிநேகிதர்களுக்கும் ஏற்பட்ட சுகதுக்கங்களெல்லாம் எனக்கு ஏற்பட்டவையாகவே தோன்றின.

- படித்தேன்... ரசித்தேன்...' நூலிலிருந்து
வானதி பதிப்பகம்



படம்: ஸ்ரீஹரி

நானோ டெக்னாலஜியின் நுட்ப அளவை அறிந்துகொள்ள முதலில் மைக்ரோ டெக்னாலஜியை நீங்கள் கவனிக்க வேண்டும். இன்றைய தினங்களில் எல்லா கம்ப்யூட்டர்களிலும் செல்போன்களிலும் ஏன் வாஷிங்மெஷின், டி.வி, ஃப்ரிட்ஜ், விலை உயர்ந்த விளையாட்டுப் பொம்மைகள் போன்ற எல்லா சாதனங்களிலும் சிலிக்கான் மைக்ரோ கண்ட்ரோலர் சில்லு இருந்தே தீரும். இந்த சில்லுகள் எப்படித் தயாரிக்கப் படுகின்றன? மிக மிக சுத்தப்படுத்தப் பட்ட சிலிக்கான் என்னும் கனிமத்தின் மேல் அதிநுட்பமான கோடுகள் வரைந்து ஜன்னல்கள் பிரித்து கட்டுப்படுத்தப்பட்ட அளவு ஆர்ஸனிக், பாஸ்பரஸ் போன்ற தனிமங்களை ஆவியடிக்கிறார்கள். இதை மாஸ் தொழில்நுட்பம் என்பார்கள். மெட்டல், ஆக்ஸைடு, செமி கண்டக்டர் என்று மூன்று தளங்களில் மிகச் சிக்கலாக வடிவமைக்கப்பட்ட சர்க்யூட் இணைப்புகளைப் பதித்து உற்பத்தி செய்கிறார்கள். இந்தத் தொழில்நுட்பத்தில் ஒரு மைக்ரான்வரை வந்திருக்கிறார்கள். அதற்குக் குறைவான சப்-மைக்ரான் அளவையும் எட்டியிருக்கிறார்கள். மைக்ரான் என்பது ஒரு மீட்டரில் பத்து லட்சம் பாகம். நம் தலையில் நூறு மைக்ரான் தூசு துகள், நாற்பது மைக்ரான்-கண்ணால் பார்க்கக் கூடிய நுட்பம், முப்பது மைக்ரான்... இதெல்லாம் மைக்ரோ டெக்னாலஜி.

நாம் பார்க்கப்போவது 'நானோ'. 'நானோ' என்பது மைக்ரோவில் ஆயிரம் பாகம்! ஒரு நானோ மீட்டர் என்பது ஒரு மீட்டரின் நூறு கோடி பாகம். இந்த அளவு நுட்பத்தை இன்னும் அவர்கள் எட்டவில்லை. ஒரு நானோ மீட்டர் வரை உள்ளே போகவில்லை. எனவே சுமார் நூறு நானோ மீட்டரிலிருந்து நானோ

சுஜாதா

டெக்னாலஜி ஆரம்பிக்கிறது. படிப் படியாக அளவு குறைந்துகொண்டே போய் ஒரு தனிப்பட்ட எலக்ட்ரானை நம் இஷ்டப்படி நடத்துவதுதான் இந்த இயலின் இறுதிக் குறிக்கோள். அந்த அளவுக்கு இன்னும் அவர்கள் வெற்றி யடையவில்லை. எனினும் ஆராய்ச்சி முயற்சிகள் சில, 'இது சாத்தியம்' என்கிற நம்பிக்கை தருகின்றன. நாம் வெற்றி பெறாவிட்டாலும் இயற்கை வெற்றி பெற்றிருக்கிறது. ஒரு பாக்டீரியாவின் இயக்கம்தான் சிறந்த நானோ டெக்னா லஜி இயந்திரம். இப்போது இந்த இயலின் மைல்கற்களைப் பார்க்கலாம்.

முதல் மைல்கல் 3500 கோடி ஆண்டுகளுக்கு முன் முதல் உயிரணு தோன்றியது. ஆதார செல் உயிரணு. அதை ஒரு பையோமெஷின் என்பார்கள். தன்னிச்சையாக இரட்டிப்பாகவும் சக்தி தரவும் வல்ல இயந்திரம் இது தான். முதல் நானோ டெக் சாதனம்.

எலக்ட்ரானை அடிமை கொள்ள...



கி.மு.400... கிரேக்க தத்துவ ஞானி டெமாக்கிரிட்டஸ், 'ஆட்டம்' (atom) - பிரிக்க முடி யாதது - என்கிற பொருளில் முதன்முதலாக அணுவியலை அறிமுகப்படுத்தினார். 1905ல், ஐன்ஸ்டைன் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றில் சர்க்கரையின் மாலிக்யூல் கூட்டணுவின் அளவு ஒரு நானோமீட்டர் என்று கண்டுபிடித்துச் சொன்னார். முதன் முதலாக நானோ மீட்டர் என்னும் சொல் பயன்பட்டது.

1931ல் மாக்ஸ் நால் என்பவரும் எர்னஸ்ட் ருஸ்கா என்பவரும் எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப்பைக் கண்டுபிடித்தனர். இக்கருவியின் மூலம் நானோ மீட்டர் அளவுள்ள வஸ்துகளைக் கவனிக்க முடியும்.

1959ல் ரிச்சர்டு ஃபேய்ன்மன்னின் பிரசித்தி பெற்ற சொற்பொழிவு... 'அங்கே நிறைய இடம் இருக்கிறது' என்ற தலைப் பில். இந்தச் சொற்பொழிவைத்தான் நானோடெக்கின் முக்கியமான தூண்டு கோல் என்று சொல்கிறார்கள்.

1968-ல் ஆல்ஃப்ரெட் சோ என்பவரும் ஜான் ஆர்தர் என்பவரும் தங்கள்

சகாக்களுடன் சேர்ந்து பெல் லபாரட்டரி ஆராய்ச்சி சாலையில் மாலிக்யூலர் பீம் எபிடாக்ஸி (Molecular beam Epitaxy) என்ற தொழில்முறையைக் கண்டுபிடித்தார்கள். இதன்மூலம் ஒரு மாலிக்யூல் கூட்டணி பரிமாணமுள்ள தளத்தை, ஒரு பொருள் மேல் இடமுடியும்.

1974ல் நோரியோ தனிகுச்சி என்கிற ஜப்பானியர், ஒரு மைக்ரானுக்குக் குறைவான நுட்பமுள்ள விஷயங்களை உற்பத்தி செய்வதை நானோ டெக்னாலஜி என்று பெயரிட்டார்.

1981ல் ஸ்கானிங் டன்னலிங் மைக்ராஸ்கோப் (Scanning Tunneling Microscope) என்ற சாதனம் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் ஒரு தனிப்பட்ட அணுவை கிட்டத்தில் பார்க்க முடிந்தது.

'இந்திய அரசும் நானோ டெக்னாலஜியின் சாத்தியங்களை உணரத் தொடங்கியிருக்கிறது'

1986ல் கே எரிக் டெக்ஸலர் எழுதிய 'என்ஜின்ஸ் ஆஃப் க்ரியேஷன்' (Engines of creation) என்னும் புத்தகம் உலகின் கவனத்தை நானோ டெக்னாலஜியின் பால் ஈர்த்தது.

1989ல் ஐ.பி.எம் கம்பெனியின் டோனால்டு ஐக்ளர் ஜினான் அணுக்களை வைத்து ஐ.பி.எம் என்று எழுதிக் காட்டினார்.

1991ல் ஜப்பானிய என்.இ.சி. கம்பெனியின் இஜிமா என்பவர், நானோ டெக்னாலஜியில் பயன்படக் கூடிய 'கரிக் குழல்கள்' கார்பன் ட்யூப்ஸை கண்டுபிடித்தார். இது என்ன என்பது பிறகு விளக்கப்படும்.

1998ல் இந்த நுண்ணிய கார்பன் குழலைப் பயன்படுத்தி, ஒரு ட்ரான்சிஸ்டர் செய்யப்பட்டது ஐரோப்பிய நெதர்லாந்து தேசத்தில்.



1999ல் யேல் பல்கலைக்கழகத்தில் கூட்டணுவை அணைத்து ஏற்றக்கூடிய ஒரு ஸ்விட்சாக மாற்ற முடியும் என்று நிரூபித்தார்கள்.

2000ல் அமெரிக்க ஜனாதிபதி க்ளின்டன், நானோ டெக்னாலஜியின் எதிர்கால சாத்தியங்களை உணர்ந்து அதற்காக அரசாங்க நிதி ஒதுக்கினார்.

இந்தப் பிரயாணத்தை நீங்கள் கவனிக்கும்போது, இந்த ஆராய்ச்சி தனியார் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மூலம் உலகெங்கும் தொடரப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகும்.

இந்த ஆண்டு, இந்திய அரசும் நானோ டெக்னாலஜியின் சாத்தியங்களை உணர்ந்து கொண்டதற்கு அடையாளமாக அப்துல் கலாம் அதை தமது குடியரசு தின உரையில் குறிப்பிட்டது, இந்தியா நானோ டெக் ஆராய்ச்சி முயற்சிகளை முடுக்கிவிடும் என எதிர்பார்க்கலாம்.

நானோ டெக்னாலஜி டெக்ஸ்லர் தம் புத்தகத்தில் சொல்லும் குறிக்கோள்களை எட்ட இருபது ஆண்டுகள் ஆகும் என்கிறார்கள். இது வரை, எதுவரை வந்திருக்கிறார்கள் என்பதை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

(விந்தை தொடரும்)

அருள்வாக்கு

குப்புற விழுகிறது, முதுகு காட்டுகிறது - 'புற முதுகு காட்டுவது' என்கிறது - இதெல்லாம் அவமானம். ஆனால் மானம் என்பது 'நான்' என்கிற அஹம்பாவம் இருக்கிறபோதுதானே முக்கியம்? மனுஷ்ய வாழ்க்கையிலே 'நான்' - பாவமும் மானமும், அதோடேயே அவமானமும் - அபிமானமுந்தான்! - இந்த எல்லாமும் இல்லாமலிருக்க முடியாதுதான். (இவை) இல்லாமல் மட்டுமிருந்தால் நாமே ராஜாதான். என்ன ராஜா? ஆத்மாவை ஜயித்த ராஜா. ஜீவன் முக்தன் என்னும் ராஜா. அப்போது நமஸ்காரமே இல்லை. ஆனால் நம் மாதிரி நிலையிலே வாழ்க்கை நடத்துகிறதற்கு மானாவமானங்களை அவச்யமான இடங்களில் வைத்துக் கொண்டே இருப்போம். ரொம்பவும் அதைக் கொண்டாடிக் கொண்டில்லாமல் கொஞ்சம் அடக்கி வைத்துக் கொண்டிருப்போம். ஆனால் அதை வைத்துக் கொள்ளாமலே இருக்கிற இடங்களும் உண்டு என்று அறிவு பெற்று அங்கே மட்டும் தூக்கிப் போடுவோம். அந்த இடங்கள் என்ன? ஈச்வர ஸந்நிதானம்,



புறமுதுகு காட்டு!

மஹான்கள், பெரியவர்களின் ஸந்நிதானம்தான். அங்கே மானமே வேண்டாம்! குப்புற விழுவோம்! புறமுதுகு காட்டுவோம்! ஆத்ம ஜயம் என்று சொன்னேனே, அந்த வெற்றிக்கு ஏற்றுகிற முதல் சின்னப் படியாக இங்கே இப்படிப் புறமுதுகு காட்டுவோம். பிற இடங்களிலும் ரொம்பவும் மானாவமானம் கொண்டாடிக் கொண்டில்லாமல் கொஞ்சமாவது அடங்குவதற்கு இதுவே ஸஹாயம் செய்யும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

வானவில் வயசு - 11



தன் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டி கோயிலுக்குப் போய் கடவுளிடம் கோரிக்கை மனு கொடுத்துவிட்டு, வீட்டுக்குள் நுழைந்தார் அவர். பூங்கொத்துக்கு ஃபிராக் போட்டுவிட்டதுபோல் ஓடி வந்தாள் அவரது ஐந்து வயது அழகு மகள். கன்ன ரோஜாக்களில் பன்னீராய்க் கண்ணீர்த் துளிகள். சின்ன இதழ்கள் பிதுங்கப் பிதுங்க விசும்பிக்கொண்டே வந்த குழந்தையின் கைகளில் ஓர் உடைந்த பொம்மை. "அப்பா! என் டீனா டால் உடைஞ்சு போச்சு". "கவலைப்படாதே பப்லு! அப்பா உடனே சரி பண்ணிடறேன்". செருப்பைக் கூடக் கழற்றாமல் பொம்மையும் கையுமாய் உட்கார்ந்து சரிசெய்யத் தொடங்கினார். பார்த்துக்கொண்டிருந்த மகளுக்குப் பதற்றம். "ஐயோ அப்பா! அப்படிப் பண்ணக்கூடாது. இந்தப் பக்கமா மாட்டுங்க!" என்று நச்சரித்தபடியிருந்தாள். இரண்டே நிமிடங்கள்தான். "என்கிட்டே கொடுத்துடுங்க! நானே சரி பண்ணிக்குவேன்" பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டாள்.

அடுத்த விநாடியே அவருக்குப் பொறி தட்டியது. "என்னிடம் பொம்மையை ஒப்படைத்த குழந்தைக்கு என் மேல் நம்பிக்கையில்லை. நான் சரி செய்து தருவேன் என்கிற பொறுமையில்லை. நான் கூட அப்படித்தான். பிரச்னைகளை கடவுளிடம் ஒப்படைக்கிறேனே தவிர, முழு நம்பிக்கையில்லை. காத்திருக்கும் பொறுமையில்லை". மறுபடி கோயிலுக்குக் கிளம்பினார். மனு போடுவதற்கு அல்ல... மன்னிப்புக் கேட்க!

ஒன்பதாம் அத்தியாயத்தில் தலைமுறை இடைவெளி பற்றி நான் எழுதியிருந்ததைப் படித்துவிட்டு, தலைமுறை இடைவெளியையே பெற்றோர்கள்தான் ஏற்படுத்துகிறார்கள் என்று சில இளைஞர்கள் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். தலைமுறை இடைவெளிக்குக் காரணமென்று பெற்றோர்களையோ, இளைஞர்களையோ தனித்தனியாய் குற்றம் சாட்ட முடியாது. பரஸ்பரம் நம்பிக்கை இன்மையும், பொறுமை இன்மையும்தான் காரணம்.

டீனேஜ் வயதில் பெற்றோரிடமிருந்து விலகி நின்று இளைஞர்கள் வளர்கிறார்கள் என்றால், குழந்தைப் பருவத்தில் மனசில் ஏற்பட்ட காயங்கள் கூடக் காரணமாக இருக்கலாம். அளவு கடந்த அலட்சியம், அதிக பட்ச அக்கறை இரண்டுமே இளைஞர்களுக்குப் பிடிப்பதில்லை என்பதுதான் விஷயம்.

கொஞ்சம் யோசித்தால், நிறைய நேசித்தால், தலைமுறை

இடைவெளியைப் பாலம் கட்டி இணைத்து விடலாம். இது ஒருபுறம். ஆனால் இதற்கு நிறைய இளைஞர்கள் தேடுகிற மாற்றுவழி கொஞ்சம் கவலை தருகிறது.

பல கிராமங்களில் இளைஞர்கள் மரத்தடி மேடைகளிலும் டீக்கடை வாசல்களிலும் வெட்டி அரட்டை அடிப்பதாய் நகர இளைஞர்கள் மத்தியில் ஒரு விமர்சனம் உண்டு. இருக்கலாம். அதற்கும், இணையத்தில் நகர இளைஞர்கள் மணிக்கணக்கில் நடத்தும் 'சாட்டிங்' என்கிற ஈ-அரட்டைக்கும் பெரிய வித்தியாசமில்லை.

'சாட்டிங்'கில் நீண்ட நேரம் செலவழிக்கும் இளைஞர்களில் கணிசமானவர்கள் பெற்றோரின்



மௌன விபரீதங்கள்!

பிரியத்தைத் தொலைத்தவர்கள். முகம் தெரியாத மனிதர்களுடன் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கி, வாய்ஸ் சாட் அசரீரிகளுக்காக ஏங்கி, இருந்தும் இல்லாத அந்த உறவுகளை நம்பி, இருக்கும் உறவுகளை இன்னும் ஆழமாய் வெறுக்கத் தொடங்கும் விபரீதம் நித்தம் நித்தம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

வயது வித்தியாசமின்றி வரம்பு மீறிய விஷயங்களையும் விரிவாக விவாதிக்கும் சாட்டிங் முறை, ஆபாச இணைய தளங்களை விடவும் ஆபத்தானவை. இதில், முகம் தெரியாத அவனோ, அவளோ, "சாப்பிட்டாயா? தூங்கினாயா?" என்று செல்ல விசாரிப்புகளைத் தரத் தொடங்கியதும் உருகிப் போய் விடுபவர்கள் ஏராளம்.

அந்த அடிப்படை கவனிப்புகூட வீட்டில் இல்லையென்கிற வருத்தமான விஷயம்தான் இதற்கு விதைவிதைக்கிறது.

பக்கத்தில் இருக்கும் உறவுகளைப் பகைத்துக் கொண்டு வளரும்போது, ஆரம்பத்தில் 'சாட்டிங்' ஒரு புகலிடம் போலத் தோன்றும். அதே நேரம், கண்ணுக்குத் தெரியாத அந்த உறவுகள் வெற்றிடத்தை நிரப்புவதில்லை. மாறாக, வெறுமை உணர்வை அதிகரிக்கச் செய்கின்றன. அதனால்தான் 'சைன்-ஆஃப்' செய்ததுமே நிறைய இளைஞர்கள் ஆஃப்



மரபின்மைந்தன்
முத்தையா



"மீசை துடிக்கிறது தளபதி!"

"போர் முரசு கொட்டவா மன்னா!"

"வேண்டாம்... வைத்தியரை அழைத்து வாரும், பிரஷர் பார்த்துடலாம்!"

- ஞா.ஞானமுத்து

ஆகி விடுகிறார்கள்.

சில பேருக்கு சாட்டிங் வழியே ஆரோக்கியமான நட்பும், ஆதாயம் தரும் தொடர்புகளும் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால் அது எல்லோருக்கும் ஏற்படுவதில்லை.

பெற்றோருக்கும் இளைஞர்களுக்கும் நடுவே பரஸ்பர நம்பிக்கை புதுப்பிக்கப் படுகிறபோது இந்தத் தடுமாற்றங் களைத் தவிர்த்துவிட முடியும்.

சாட்டிங் முறையைச் சாடுவது என் நோக்கமல்ல. அது பெரும்பாலும் 'டேட்டிங்'கில் போய் முடிவதாய்க் கவலை தரும் செய்திகள் காதுக்கு வருகின்றன. இளைஞர்களின் சிந்தனைகளைச் சிதறவிடும் சில்லறை விஷயங்கள் இந்தக் கட்டுப்பாடில்லாத வலைக்குள்ளே கொட்டிக் கிடக்கின்றன.

அது பற்றிச் சொல்லப்படுகிற விஷயங்கள் சொல்லிக்கொள்ளும்படி இல்லை என்பதால்தான் மெல்லிய நினைவூட்டலாய் இதை எழுதுகிறேன்.

கதவுகள் இல்லாத அறையின் காகித அடுக்குகளைக் காற்று கலைப்பது மாதிரி, கண்காணிப்பு இல்லையென்கிற எண்ணமே நம் கனவுகளையும் உணர்வுகளையும் கலைத்துவிடக் கூடும். கண்காணிப்பும் கட்டுப்பாடும் குறிப்பிட்ட அளவுக்கு வேண்டியிருக்கிறது.

குழந்தைகளுக்காக பஃபே விருந்து ஒன்று ஏற்பாடாகியிருந்தது. குழந்தைகளுக்கு அந்த விருந்தின் வழியாகவே ஒழுக்கத்தையும், எதையும் வீண் செய்யக்கூடாது என்ற விழிப்புணர்வையும் ஏற்படுத்தும்விதமாக ஓர் அறிவிப்புப் பலகையை அந்த விருந்தில் வைத்தார்கள். 'ஒன்றை மட்டும் எடுங்கள். கடவுள் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்.' ஆனால் அந்தப் பலகை ஆப்பிள் கூடைக்கு அருகே இருந்தது. கொஞ்சம் தள்ளியிருந்த ஐஸ்க்ரீம் கோப்பைகள் அருகே ஒரு குறும்புச் சிறுவன் எழுதி வைத்தான். 'எத்தனை வேண்டுமானாலும் எடுங்கள். கடவுள் ஆப்பிள்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்' என்று.

ஒருபுறம் அதிகக் கண்காணிப்பை சில இளைஞர்கள் விரும்புவதில்லை. மறுபுறம் சில வீடுகளில் பெற்றோரின் அலட்சியத்தையும் இளைஞர்களால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. இதனால் ஏற்படும் விபரீத விளைவுகளை முதலில் பெற்றோர் உணர வேண்டும். முடிந்தவரை தங்கள் உணர்வுகளைப் பெற்றோருக்கு இளைஞர்களும் புரிய வைக்க வேண்டும்.

'விட்டுப் பிடிக்கலாம்' என்று பெற்றோர் நினைக்க, 'விட்டு விட்டார்கள்' என்று இளைஞர்கள் நினைக்க, இந்த விசித்திரமான மௌனம், விபரீதங்களை விளைவிக்கும் முன்னே நாம் விழித்துக்கொள்வது அவசியம். பிரச்னைகளைப் பேசித் தீருங்கள். மௌனம் போதும்... பேசியே தீருங்கள்!

(தொடரும்)

மாடல் படம்: **சண்முகசுந்தரம்**

‘உங்க நிஜப் பேரே அம்முவா... நம்ப முடியலியே...’ என்றால், அழாத குறையாக அலறுகிறார் இந்த சன் மற்றும் கே.டீவி தொகுப்பாளினி. ‘‘அம்மு, அம்மு, அம்மு... சும்மா இல்ல... என் அம்மா வெச்ச அன்புப் பேரு இது...’’ என்றவரிடம் ‘நீங்களே பேசிடுங்க... கேள்வி கேட்டு வாய் வலிக்குது’ என்றதுதான் தாமதம்... நான்- ஸ்டாப் கொண்டாட்டம்தான்!



நான் STOP கொண்டாட்டம்!

அறிமுகம்!

+2 முடிச்ச பிறகு ஒருவித ஃப்ரனுக்ல தான் மீடியாவுக்கே வந்தேன். முதல்ல பாண்டிச்சேரி ‘ஸ்கைசேட்’ சேனல்ல காம்பியர் சான்ஸ். அதன் பிறகு சீரியல்ல சின்னச் சின்ன கேரக்டர்கள் கிடைச்சது. அந்த அனுபவத்துல ஜெயா, விஜய், ராஜ் டீவிக்கள்ல காம்பியர். இப்போ சன் டீவி., கே.டீவில நானே ஐந்து புரோக்ராம்களை தொகுத்து வழங்கறேன்!

கிளிசரின்!

சன் டீவியில வந்த ‘கோபுரம்’ சீரியல்தான் எனக்கு பிரேக் தந்தது. அதன் பிறகு அவர்கள், நம்பிக்கை, சூலம், அக்னி சாட்சின்னு நிறைய கிளிசரினும் போட்டாச்சு!

ஹலோ ஹலோ!

சன் மியூஸிக் ஆரம்பிச்ச புதுசுல ‘ஹலோ ஹலோ’ புரோக்ராமை நான்தான் பண்ணினேன். அந்தச் சமயத்துல நிறைய சீரியல் பண்ணிட்டு இருந்ததால அதைத் தொடர முடியல... இருந்தாலும் சீக்கிரமே சன் மியூஸிக்குக்கு வந்துடுவேன் பாருங்க!

தங்க்லீஷ்!

‘செய்தி வாசிப்பாளர்’ ஆகணும்னு ஆசை... தொடர்ந்து நல்ல பயிற்சி எடுத்துட்டு வர்றேன்... நல்லா தமிழ் பேசுவேன்... ‘தங்க்லீஷ்’ பிடிக்காது.

டிரஸ்கோட்!

பார்க்கறதுக்கு அழகா இருக்கணுமே தவிர ஆபாசமாவோ, அருவருப்பாவோ டிரஸ் போடக்கூடாதுங்கறது என் கருத்து. அதுக்காக முழுசா போர்த்திட்டுதான் வரணும்னு சொல்லல.

கனவு!

வேறென்ன... சினிமா ஹீரோயின் தான்!

- முத்து

கோடாங்கிப்பட்டி புகழேந்தி

தூரி



"இந்தாடா டேய், இந்தக் கயிறையும் தூரி ஆடியே அத்துப்போடாத. அப்பப்ப மாடு கன்னுகளையும் கட்டிவெச்சு மேயி. நம்ம காந்தப்பன் பொஞ்சாதி தூக்குப் போட்டு செத்துப் போய்ட்டாளாம். நான் ஒரெட்டுப் போயி மூஞ்சிய காட்டிட்டு வறேன்." அப்பா என்னிடம் சொல்லி விட்டு சைக்கிளெடுத்துப் போனார். எனக்குக் கடுப்பாக வந்தது. ரெண்டு மாடு, ரெண்டு எருமை, ரெண்டு ஆடு, நான்கு கன்னுக்குட்டியென இன்னைக்கு எல்லா உருப்படிகளையும் நானே மேய்க்க வேண்டும்.

இன்னும் ஒரு மாதத்துக்கு மட்டும் தான் இந்த இம்சை... அப்புறம் லீவு முடிந்து பதினோராம் வகுப்புக்கு கள்ளி மந்தயம் போய்விடலாம். "லீவுல ஒழுங்கா ஆடு மாடு மேய்த்தால்தான் பள்ளிக்கூடம் அனுப்புவேன். இல்லைனா கேரளாவுக்கு கந்துக் கடைக்கு அனுப்பி விடுவேன்" என்று அப்பா சொல்லியிருக்கிறார்.

எனக்கு படிப்புமேல் அவ்வளவு பிடிப்பெல்லாம் இல்லை. கந்துக்கடை மேல் வெறுப்பும் இல்லை. பள்ளிக்கூடம் போனால் சாயங்காலம் வந்து வேப்ப மரத்தில் கயிறுகட்டி தூரியாடலாம். கந்துக்கடைக்குப் போய்விட்டால் கருவாடு தான் தின்ன முடியும். காலையில் எழுந்தவுடனே நான் தூரிகட்டி விளையாடும் வேப்ப மரத்துக்குத்தான் போவேன். மிகப் பெரிதான அந்த மரத்தின் அடியில்தான் பாட்டி, நல்லதங்காள் கதை - அரிச்சந்திரன் கதையெல்லாம் சொல்லும். கதை சொல்லி முடித்தபிறகு, தலையைக் கோதி, "நல்லா இருந்துச்சா சாமி கத?" என்று ஆசையோடு கேட்கும். கதைக்காகவன்றி பாட்டியின் தலைகோதலுக்காகவும் பாட்டியுடனே திரிவேன். முதன்முதலில் பாட்டிதான் இந்த மரத்தில் கயிறுகட்டி தூரியாட பழக்கித் தந்தது. கயிறின் ஒரு முனையில் கெட்டியான ஒற்றைக் குச்சியைக் கட்டி, மறுமுனையினை வேப்ப மரத்தின் கிளையில் கட்டியபின் என்னைக் குச்சியில் உட்கார்த்தி வைத்து குழந்தையைத் தொட்டிலில் ஆட்டுவது போல் ஆட்டும். மயக்கம் வருகிற மாதிரி வேகத்தில் பாட்டி ஒருபோதும் தூரியாட்டியதில்லை. "கிறுகிறுனு வருது பாட்டி!" என்று பொய்சொல்லி பாட்டியின் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொள்வேன்.

நானாய் தூரிகட்டிக் கொள்ளும் அளவுக்கு வளர்ந்த சில மாதங்களின் பின் பாட்டி இறந்தாள். பாட்டிக்குப் பிறகு இந்த வேப்ப மரம்தான் எனக்குப் பாட்டி. இந்த மரத்தடி மண்தான் பாட்டிமடி. இப்பவும் தூரியாடி ஓய்ந்தபின் மரத்தடியில் அயர்ந்து படுக்கும் போது, மரம் காற்றில் அசைகையில் பாட்டி தலையை வருடிவிட்டது போலவே இருக்கும். அப்பாவுக்கு மட்டும் இந்த மரத்தைப் பிடிப்பதேயில்லை. அதற்கு அப்பா தூரியாடும் வயதைக் கடந்து விட்டிருந்தது தவிர, நான் மரத்தடியிலேயே பொழுதைக் கழிப்பது அவருக்குப் பிடிக்காததும் காரணம்.

பத்தாம் வகுப்புத் தேர்வு முடிவு வந்துவிட்டது. மார்க்ஷீட்டைப் பார்த்து எனக்கு இன்ப அதிர்ச்சியாகிவிட்டது. நான் பார்டர் மார்க்கில் பாஸாகிவிட்டேன். பதினோராம் வகுப்பில் சேர, அட்மிஷன் ஃபீஸ், புத்தகங்கள், யூனிபார்ம், ரிப்பேராகக் கிடக்கும் சைக்கிளுக்கென அப்பா கணக்குப் போட்டுப் பார்த்ததில் மூவாயிரம் ரூபாய்வரை வேணும் போலத் தெரிந்தது. கப்பல்பட்டி கந்தனை வரச்சொல்லி ரெண்டு ஆட்டையும் தலா

ஆயிரமாயிரமென இரண்டாயிரத்துக்கு விற்றார். இன்னும் ரெண்டு மாதங்கழித்து நிறை சினையில் ஆடுகளை விற்றிருந்தால் மூவாயிரத்துக்கும் மேல் போகும். அவசர கதியில் விற்பதால் ஆயிரம் ரூபாய் நஷ்டம். "இத்தனை நாளா கஷ்டப்பட்டு மேச்சதுக்கு ஒரு புண்ணியமும் இல்லாம போகுதுங்க... ஆடுகள விற்க வேணாம் பணத்துக்கு வேற எதுனாச்சும் வகைச்சல் பண்ணுங்க. ரெண்டு மாசம் கழிச்சு



வித்துக் கொடுத்துரலாம்"

என்று அம்மா மூக்கால் அழுதது.

அப்பா பீடியை இழுத்தபடியே, "நான் வித்தா வித்தது தான்" என்று சொல்லி வாயிலும் மூக்கிலும் புகையை விட்டார். அம்மாவோ நானோ, இனி என்ன சொன்னாலும் குடும்பத்தில் சண்டை தான் வரும். காட்டை விற்று கள் குடித்து ஊறுகாய் நக்கிய வம்சாவளியில் வந்திருந்த அப்பாவுக்கு, ஆடுகளை விற்று மகனைப் படிக்க வைப்பதில் குற்ற உணர்ச்சியேதும் இல்லை.

இனி மீதி ஆயிரத்துக்கு எதை விற்பார் எனச் சந்தேகம் வந்தது, எனக்கு. மாட்டையும் எருமையையும் விற்க முடியாது. பால் பணத்தில்தான் குடும்பச் செலவு, பீடிச்செலவெல்லாம் செய்கிறார் அப்பா.

அம்மாவின் நகைகள் இருந்தாலாவது அடகு வைத்துப் புரட்டலாம். அது ஏற்கெனவே கூட்டுறவு வங்கியில் அடகு வைக்கப்பட்டு, வட்டி கட்ட முடியாமல் போய், வட்டி குட்டி போட்டு குட்டியும் சூலுற்று சிதையாமல் கருவாகி அசலோடு சேர்ந்து, பின் அதற்கும் வட்டியென மொத்தத்தில் நகையே முழுகிப் போய் விட்டது. நகை போனபின் அம்மா, கல்யாணம் காதுகுத்து எழவு எட்டு என எந்த விசேஷங்களுக்கும் போவதில்லை. தோட்டமே கதியென கிடக்கிறது.

"பால்கடையில் போய் முன்பணமாக ஆயிரம் வாங்கி வருகிறேன். கொஞ்சம் கொஞ்சமா கழிச்சு விட்டுரலாம்" என்று சொல்லி தேவத்தூர் போய்விட்டு வரும் போது தள்ளாடியபடியே வந்தார்.

"பணத்துக்கு நாயாய் அலைஞ்சு பார்த்துட்டேன். எங்கேயும் கிடைக்கல... வெடியாளத்துக்கு மர ஏவாரிய வரச் சொல்விட்டு வந்தேன். வேப்பமரத்த வெட்டி வித்துரலாம்... அப்பதான் நம்ம சின்னவன் தூரியாடாம ஒழுங்கா படிப்பான்" என்றார் அம்மாவிடம். எனக்கோ பாட்டி வருடிக் கொடுத்த தலையில் ஆணியடிப்பதுபோல் இருந்தது.

காலையில் நேரத்திலேயே வந்து அப்பாவை எழுப்பினார் மர ஏவாரி. நான் தூங்குவது போல் படுத்திருந்தேன். அம்மா கொடுத்த காபியை இருவரும் குடித்தனர். ஏவாரியை மரத்தடிக்கு அழைத்துப் போனார் அப்பா. ஏவாரி மரத்தைப் பார்வையிலேயே எடைபோடும் திறன் உள்ளவராய் இருந்தார். மரத்தை மேலும் கீழும் பார்த்து அவர் ஏதோ சொன்னதற்கு அப்பா பலமாகத் தலையாட்டுவது தோட்டத்துச் சாலையில் படுத்திருந்த எனக்கு தெளிவாய்த் தெரிந்தது. விலை முடிந்திருக்க வேண்டும். தோட்டத்துச் சாலைக்குத் திரும்பி வந்து கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போனார்.

ஒரு மணி நேரம் கழித்து லாரியொன்று தோட்டம் வந்தது. அதில் முக்கால்வாசி அளவுக்கு ஒரே அளவு நீளமாக அறுக்கப்பட்ட மரக்கட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. அதன்மேல் அரிவாள், ரம்பங்களோடு ஆட்கள். இந்த மரத்தை வெட்டி அறுத்து அடுக்கினால் லோடுக்குச் சரியாக இருக்கும் என ஏவாரி கணித்திருக்க வேண்டும். விலை முடிந்த கையோடு லாரியை ஆட்களோடு அனுப்பி விட்டார். சிறிது நேரம் கழித்து பைக்கில் வந்திறங்கிய மர ஏவாரி ஆட்களை மரத்துப் பக்கமாய் அழைத்துப் போனார்.

நான் என்னுடைய பாட்டி மடியப் போவதைப் பார்க்க மனதில்லாமல் கட்டிலிலேயே படுத்திருந்தேன். காலையில் எழுந்தவுடன் இனி எங்கு போய் பாட்டியின் முகத்தைக் காண்பது? இனி யார் எனது தலையை வருடுவார் என நினைத்த கணத்திலேயே பாட்டி சொல்லிப்போன கதைகள் அனைத்தும் மறந்து போனது. சுயநினைவற்று படுக்கையில் கிடந்தவனை அப்பா வந்து எழுப்பினார். "டேய் சின்னவா... எந்திரிடா... மரஏவாரி பணம் கொடுத்து விட்டுப் போய்ட்டார். ஒட்டன்சத்திரம் போய் நோட்டு, புத்தகமெல்லாம் வாங்கிட்டு வா... நாளைக்கு வந்து உன்னைப் பள்ளிக்கூடத்துல சேர்த்து விடறேன்" என்றவரிடம், "அப்பா நான் கந்துக் கடைக்கே போறேன்" என்றேன். ○



"என்னங்க, வேலைக்காரிய பக்கத்துலே உட்காரவச்சு வாய்ப்பாடு சொல்லிக் கொடுத்திட்டு இருக்கீங்க?"

"அடி அசடே... நீதாண்டி சொன்ன, வரவர வேலைக்காரிக்கு பெருக்கவும் தெரியல, கூட்டவும் தெரியலேன்னு. அதான் டியூசன் எடுத்திட்டு இருக்கேன்."

– ஆர். லட்சுமிநாராயணன்

நீதிபதியும் குற்றவாளியும் ஒரே மேடையில்...!

கற்பு பற்றின நடிகை குஷ்புவின் விவகாரத்தில் ஆதரவாகப் பேசப் போய், எதிர்ப்பில் அமைதியாகிவிட்ட நடிகை சுஹாசினி, இப்போது சகஜமாகிவிட்டார். அண்மையில் மகளிர் தினத்தை முன்னிட்டு மெட்ராஸ் மேனேஜ்மெண்ட் அசோஸியேஷன் தனது பொன்விழாக் கொண்டாட்டமாக மாநாடு ஒன்றை நடத்த, அதில் கலந்து கொண்டு சுஹாசினி தம் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தினார்.



“நான் எதையும் மனம்விட்டுப் பகிர்ந்து கொள்பவள். ஆனால் இன்றைக்குப் பேசுவதற்காக ஐந்து பக்கங்களை எழுதிக்கொண்டு வந்திருக்கேன். என்னை நன்கு தெரிந்தவர்களுக்கு இது வியப்பாக இருக்கும். நான் மிகவும் வெளிப்படையானவளாகத்தான் இருந்தேன். ஒரு சக நடிகைக்கு ஆதரவாகப் பேசினேன். அப்போது அங்கு கூடி, என் பேச்சை ரசித்தவர்கள் வெறும் முப்பது பேர்தான். ஆனால் இதைத் தொடர்ந்து மீடியாக்களும் சில குழுக்களுமாகச் சேர்ந்து 'இந்தியாவின் மிக அதிகம் தேடப்பட்டு வரும் கிரிமினலாக' என்னை ஆக்கிவிட்டார்கள். எனக்கு எதிராக ஐம்பது கிரிமினல் வழக்குகள். நல்லவேளையாக இன்றைய தேதியில் அதில் நாற்பது வழக்குகளில் என் மீது குற்றமில்லை என்று தீர்ப்பாகிவிட்டது. மீதிப் பத்து வழக்குகள் நிலுவையில் உள்ளன.

சமீபத்தில் ஒரு விழாவில் முக்கிய நீதிபதி தலைமை தாங்க, அழைக்கப்பட்ட பேச்சாளர்களில் நானும் ஒருத்தி. என் அப்பா சாருஹாஸன் அன்று 'இதென்ன வேடிக்கை? நீதிபதியும் மிகவும் தேடப்பட்டு வரும் குற்றவாளியும் ஒரே மேடையில் உட்கார்ந்திருக்கிறீர்களே!' என்று கிண்டலடித்தார். இந்த நிலையில் இப்போது எனக்குத் தோன்றுவதைப் பேசினால் என் அப்பா என்னைக் கொன்றே விடுவார்.

சேனல் ஒன்றுக்காக தமிழகத்தின் பல நகர மற்றும் கிராமப் பெண்களைச் சந்தித்தேன். 'பெண்களுக்கு எதிரான ஒரே பத்திரிக்கை கல்யாணப் பத்திரிகை' என்றார் ஒரு பெண். 'ஆண்கள் அதிக ரிஸ்க் எடுக்கத் தயார். அதனால்தான் அவர்களால் அதிகம் முன்னேற முடிகிறது. பெண்களுக்கு அவ்வளவு மன வலிமை இல்லை' என்றார் இன்னொருவர். 'ஆண்கள் முன்னால் வழிகாட்டட்டும், பின்தொடரட்டும், இணையாக வரட்டும். ஆனால் குறுக்கே மட்டும் வந்தால் மிதித்துவிட வேண்டும்' என்று பொங்கினார் மற்றொருவர்.

சானியா மிர்ஸாவுக்கு எதிரான குரல்கள் உண்மையில் மதம் அல்லது நல்லொழுக்கத்தின் மீது அக்கறை கொண்டவை அல்ல. ஆணின் அடக்குமுறையின் வெளிப்பாடு அது. பெண்ணை சொத்தாக நினைக்கும் மனோபாவம் மாறாததையே இது காட்டுகிறது.”

- **ஜி.எஸ்.எஸ்.**

தமிழுக்கும் மேலான

சினிமா நடிகர்களைத் தொடர்ந்து சில முக்கிய எழுத்தாளர்களும் தனித்தனியே கட்சி தொடங்கிவிட்டனர். இதோ தம் உடன்பிறப்புகளுக்கு சுடச்சுட அவர்கள் எழுதிய கடிதங்கள்...



ஜெயமோகன்: காவியம், காப்பியம் இரண்டையும் (both) முடித்தாகிவிட்டது. அடுத்து என்ன என்ற கேள்வி மனப்பிறழ்ச்சியுடன் என்னை அப்பிக் கொண்டு அதிதப் புனைவோடு வினவியபோது தொ.மு.க அதாவது தொன்மங்களின் முடிவற்ற நீட்சியின் கட்சி (T.M.K) தொடங்கலாம் என்று கருதினேன். புனைவுகள் புரியாது போகும்போது நீள்வட்ட கண்ணாடியின் முகம் சதுரவட்டம் போல் ஆகிவிடுகிறது. பிரக்ஞை பிதற்றுகிறது. அது சுழன்று வரும்போது சுருமம் சித்தமாகும். இது பற்றி. சுரா. ஒரு தமிழ்க் கட்டுரையை (Tamil essay) மலையாளத்தில் எழுதியிருக்கிறார். அதுதான் எனது அரசியல் சித்தாந்தத்தின் அடித்தளக் கட்டுமானம். அங்குதான் சுழற்சி குந்திக் குந்திச் சுழலுகிறது.

தொ.மு.க. ஆட்சிக்கு வந்தால் என்ன செய்யும்? திருக்குறளை எளிமைப்படுத்தி சுருக்கி, அதன் கட்டமைப்பைக் கட்டிப் பிடித்து ஒற்றி நகலெடுத்து முங்கி முத்தெடுத்து ஒவ்வொரு குறளுக்கும் ஒத்த காப்பியம் படைப்போம். முன்பின் தெரியாத பின்நவீனத்துவத்தை பிடறியில் அடித்து விரட்டிவிட்டு நடு நவீனத்துவத்தை (importmentalism) இறக்குமதி செய்வோம். என்னோடு இணையுங்கள்.

ராஜேஷ்குமார்:

சென்ற வார க்ரைம் நாவலைப் பாராட்டி 40 பக்க நோட்டில் 80 பக்கங்கள் எழுதி அனுப்பிய கருளம்பட்டி மவராசன், அடுத்த மாத நாவல் எழுதிவிட்டு டைம் கிடைத்தால் கட்சி ஆரம்பிக்குமாறு விண்ணப்பித்திருந்தார். தம்பி அசோகனும் இது குறித்து விடிய விடியப் பேசினார். காலை எழுந்ததும் பல் தேய்த்த கையோடு கட்சி ஆரம்பித்து விட்டேன்.



விவேக், ரூபலா இருவரும் கட்சியில் சேர்ந்துவிட்டனர். என் கட்சி வெற்றி பெற்றால் இனி எனது நாவல்களில் தம்மாத்துண்டு க்ரைம்கூட இருக்காது. கதாபாத்திரத்தின் விரல் நகத்தைக்கூட வெட்ட மாட்டேன். மூட்டைப்பூச்சிக்கு கூட ஹெல்மெட் மாட்டி விடுவேன். யாரும் நசுக்க முடியாது.

ஹலோ யாரது க்ராஸ்டாக்கில்? ஓ... இருண்டகுடி இரணியனா? சொல்லுங்க. என்னது, கட்சியோட பேரை உங்ககிட்ட தான் சொல்லணுமா? சரி சரி... கேட்டுக் கோங்க. வி.மு.க... விவேக் முன்னேற்ற கட்சி. போதுமா? டொக்.

கலகல...

பாலகுமாரன்:

எதற்கு கட்சி? என்ன சாதிக்கப்போகிறேன்? தெரியாது. பதில்கள் கிடையாது. பதில்கள் எப்போது கிடைக்கும்? கேள்விகள் எழும்போது. 'உனக்குத் தெரியுமா?' என்று புத்தி ஆக்ரோஷம் கொண்டு சித்தியுடன் சிந்தனை செய்யும்போது. என் கட்சி புத்தி சார்ந்ததல்ல. யுக்தி சார்ந்தது. குயுக்த சக்தியின் யுக்தி சார்ந்தது. சாதம் குழைந்தால் தயிர் விட்டுச் சாப்பிடலாம். தயிர் குழைந்தால்? தயிருக்கும் மேலான உயிர் குழைந்தால்? குழைந்து கரைந்தால்? கரைந்து குறைந்தால்? தண்டவாளத்தின் நுனியில் முளைத்திருக்கும் புல்லுக்கு தண்டவாளம் தெரியாது. ஆனால் ரயிலுக்குத் தண்டவாளம் தெரியும். ரயில் புல்லிடம் சண்டை பிடிக்கிறது. விட்டேனா பார் என்று மூர்க்கம் கொள்கிறது. மூர்க்கம் முறியடித்து முஷ்டி உயர்த்துகிறது. விட்டேனா பார் என்று சுழட்டி அடிக்கிறது. எனக்கு அழுகை வருகிறது. ராமன் அம்பை வில்லில் பொருத்துகிறான். புல் சிரிக்கிறது. அம்பு அம்பாரத்தை அடைகிறது. ரயில் தும்முகிறது. வானத்தில் ஒளி. சேர்ந்து விடுங்கள். கர்ம சித்தி கர்ம வினை. வி.மு.கவில் (விசிறி முன்னேற்றக் கழகம்) ஒன்றிவிடுங்கள். இது பிரபஞ்சத்தின் கட்சி. இதில் புல்லும் சேரலாம். புண்ணாக்கும் சேரலாம். யாரும் வரலாம். போகலாம். வந்து போகும் ஒவ்வொருவருக்கும் ஆளுக்கொரு கமண்டலம், விசிறி, ஒரு கட்டு ரயில்வே புல்.



கிரேஸி மோகன்: பெருமாள் கலரில் கட்சிக் கொடி ரெடி. டிஸைன் செய்தது வேறு யாருமல்ல கிச்சா தான். கொடி போதாதென்று யூனிஃபார்ம் வேறு. கிளிப் பச்சை கலரில் ட்ரௌஸர். வெட்டுக்கிளி கலரில் சட்டை. அசப்பில் எச்சுமி பாட்டி வடாம் காயப் போடும் துணிபோல் இருக்கிறது. தெரு நாய் துரத்தினாலும் பரவாயில்லை என்று இதைப் போட்டுக்கொண்டு தான் சுற்றிக் கொண்டிருக்கிறான். இது தவிர முழங்கையில் தாயத்து, ரட்சை, வேப்பிலை தவிர எல்லாவற்றையும் முடிந்து வைத்திருக்கிறான். கட்சிக்கு புண்ணியாஸ்நானம் செய்ய வேண்டும். என்ன பெயர் வைக்கலாம் என்று என்னிடம் கேட்டான். கூகுளில் தேடு என்று சொல்லி அனுப்பினேன். இந்த அசமஞ்ச கிச்சா கூகுள் பெயரையே வைத்துவிட்டான். அதுதான் கூ.மு.க (கூகுள் முன்னேற்றக் கழகம்). நீங்கள் யாராவது கிச்சா கட்சியில் சேர விரும்பினால் ஆஞ்சநேயருக்கு வடை மாலை சாத்தி சேவித்துவிட்டு நேராக வந்து சேர்ந்துகொள்ளலாம். கட்சி யூனிஃபார்ம் கட்டாயம் உண்டு. மாது, சீனு, ஜானகி, மைதிலி பெயருள்ளவர்கள் வேட்பாளர்களாக நிற்கலாம். மற்றபடி பெருமாளுக்கே வெளிச்சம்.



கற்பனை : **மருதன்**

உயிர் குழைந்தால்...

ஐ.ஐ.டி. மாணவர்களின் அரசியல் கட்சி!

தன்மய் ராஜ் புரோகித், வயது 26. மும்பை ஐ.ஐ.டியில் பி.டெக். அதன்பின் அமெரிக்காவில் எம்.டெக். தொடர்ந்து நியூயார்க் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் படிப்பு. இவரைப்போல புத்திசாலிப் பிள்ளைகள் அமெரிக்காவுக்குப் போய், கிரீன்கார்டு வாங்கி, அங்கேயே வசதியாக செட்டில் ஆகவே விரும்புவார்கள். ஆனால் இந்த இளைஞர் ரொம்ப வித்தியாசமானவர். ஓர் அரசியல் கட்சி ஆரம்பித்திருக்கிறார். பெயர் 'லோக் பரித்ரான் கட்சி'

இந்தக் கட்சியின் ஆலோசகராக இருக்கிறார் சந்தானகோபாலன். நம்ம ஊர் இளைஞர்தான். இவர் நியூயார்க் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போது, தன்மய் ராஜ் புரோகித்தின் கருத்துகளால் கவரப்பட்டு, நண்பர் ஆனவர். இவரைப் போல இன்னும் நான்கு இளைஞர்கள். அத்தனை பேரும் ஐ.ஐ.டியில் படித்த புத்திசாலிகள். அண்மையில் சென்னை வந்திருந்த இவர்கள், வரவிருக்கும் தமிழக சட்டமன்ற தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தார்கள். மைலாப்பூர், சந்தான கோபாலனின் வீட்டில் ராஜ் புரோகித்தைச் சந்தித்தோம்.

உங்களுக்கு அரசியல் கட்சி ஆரம்பிக்கும் எண்ணம் எப்படி வந்தது?

"பொதுவாகவே, இன்று லஞ்ச ஊழல் மலிந்துவிட்டது. அரசியல்வாதிகளுக்கு மக்கள் மீது அக்கறை கிடையாது என்று ஒரு கருத்து நிலவுகிறது. அவர்களது விமர்சனம் சரியானதுதான் என்றாலும், சரியான மாற்று இல்லை. வெறுமனே குறை சொல்லிக்கொண்டிருப்பதைவிட, களத்தில் இறங்கி அந்த வெற்றிடத்தைப் பூர்த்தி செய்யலாமே என்று தோன்றியது. அதன் விளைவுதான், அரசியல் கட்சியை ஆரம்பித்தது" என்கிறார் ராஜ் புரோகித்.

உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் எப்படிப்பட்டது?

"எனக்கு ராஜஸ்தான் மாநிலம், உதய்பூருக்கு அருகில் சொந்த ஊர். சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன், கிராமத்து மக்களுடன் இணைந்து, சேவை செய்யத் தொடங்கினேன். மக்களுக்குச் சிறு அளவில் என்னால் உதவிட முடிந்தது. ஆனால், அதற்குள் சுயநலம்கொண்ட சிலர் 'இவர்கள் இங்கே எதற்காக வந்திருக்கிறார்கள்? இவர்கள் பின்னால் இருந்து ஆட்டி வைப்பது யார்?' என்றெல்லாம் பிரச்னை கிளப்பினார்கள். ஒருநாள் திடீரென்று நான் கைது செய்யப்பட்டேன். நான் வக்கீல் இல்லாவிட்டாலும், சட்ட அறிவு கொண்டவன். 'காரணமில்லாமல், ஒருவரைக் கைது செய்ய முடியாது' என்று சட்டத்தைச் சுட்டிக்காட்டியபோது, 'காரணம்தானே? மெதுவாகச் சொல்கிறோம்! அமைதியாக இரு!' என்று சொல்லி அடித்தார்கள். என் கல்வித் தகுதியை விட்டுத் தள்ளுங்கள். ஒரு மனிதனாகக்கூட போலீஸ் என்னை மதிக்கவில்லை."

இந்தச் சம்பவம்தான் உங்களை அரசியல் கட்சி ஆரம்பிக்கத் தூண்டியதா?

"அப்படி குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. கிராமத்தில் கல்வி அறிவு குறைவாக இருக்கிறது. சுகாதார வசதிகள் கிடையாது. இவற்றைப் பெற்றுத்தர எவ்வளவுதான் உழைத்தாலும் மீண்டும் மீண்டும் அரசியல்வாதிகளையே சந்திக்க வேண்டி இருந்தது. அவர்களது முட்டுக்கட்டைகளைத் தகர்ப்பது சுலபமாக இல்லை. எனவே, நாம் அரசியலில் இறங்கினால் ஒழிய, நமது பணிகள் மக்களுக்குச் சென்


றடைய வழி இல்லை என்பது புரிந்தது. என்னைப் போலவே எண்ணம் கொண்ட நண்பர்களுடன் பலநாள் பேசி, கடைசியாகத்தான் அரசியல் கட்சி ஆரம்பிக்க முடிவு செய்தோம்."

நாட்டில் எந்தப் பகுதியினர், பிரிவினரது ஆதரவு உங்களுக்குக் கிடைக்கும் என்று நினைக்கிறீர்கள்?

"கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை மக்கள் மொழியாலும், பழக்க வழக்கங்களாலும் வேறுபட்டிருந்தாலும் கலாசாரத்தால் ஒன்றுபட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து ஒரு அவநம்பிக்கை உள்ளது. மாற்று வேண்டும் என்கிற எண்ணம் உள்ளது. அவர்கள்தான் எங்களது குறி. இதில் வயது வித்தியாசமெல்லாம் கிடையாது.



■ ராஜ் புரோகித்



■ சந்தான கோபாலன்

கட்சி தொடங்கியதிலிருந்து எங்களது www.paritrana.org என்ற இணையதளத்தைப் பார்த்துவிட்டு சுமார் ஐயாயிரம் பேர் எங்கள் கட்சியில் உறுப்பினர்களாகி இருக்கிறார்கள்."

கட்சி ஆரம்பித்து சில மாதங்கள் தானே ஆகின்றன. அதற்குள் தேர்தலில் போட்டியிடுவது அவசியமா?

"எங்களுக்கு அரசியலே புதிய அனுபவம்தான். அதுபோலத்தான் தேர்தலும். அனுபவத்தின் மூலமாகத்தானே பல விஷயங்களையும் வாழ்க்கையில் கற்றுக் கொள்கிறோம். தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று சட்டசபைக்கோ, பாராளுமன்றத்துக்கோ உடனடியாகப் போய்விட முடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. போட்டியிடலாமே என்று நினைக்கிறோம். வெறுமனே குறை சொல்லிக் கொண்டிருக்காமல் நாங்கள் களத்தில் இருக்கிறோம்!"

அரசியல் கட்சி நடத்தவும், தேர்தலைச் சந்திக்கவும் ஏராளமான பணம் தேவைப்படுமே! உங்களின் நிதி வசதி எப்படி?

"நாங்கள் ஏராளமாகச் சம்பளம் பெறக்கூடிய வேலைவாய்ப்புகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அரசியலுக்கு வந்திருக்கிறோம். எங்களிடம் பணம் இல்லை. ஆனால் பலரும் எங்களுக்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறார்கள். ஹைதராபாத்திலிருந்து சென்னைக்கு வந்து எங்களைச் சந்தித்த ஓர் இளைஞர், தனக்குத் தெரிந்த பலரும், எங்களை ஊக்குவிக்கும் விதமாக என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்று சொன்னார். அரசியல் மூலமாகப் பணம் சம்பாதிப்பது எங்கள் நோக்கமில்லை. தேர்தலில் போட்டியிட வேண்டுமெனில், எங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு செலவு செய்வோம்"

ஐ.ஐ.டி.யிலும், அமெரிக்காவிலும் நிறைய படித்துவிட்டு, இப்படி அரசியலில் நீங்கள் ஈடுபடுவதில், உங்கள் பெற்றோருக்குச் சம்மதமா?

"இல்லை. அவர்களது மனவருத்தத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தாலும், எனது லட்சியத்தை நான் விட்டுவிடத் தயாராக இல்லை."

சந்திப்பு, படம்: **எஸ். சந்திரமௌலி**

குறையொன்றுமில்லை

இத்தனை நாளாக நல்ல உயர்ந்த போஜனம் சாப்பிட்டவன் அரசன். கை தட்டினால் கொண்டு வந்து தர பத்திரு பது பேர் காத்திருந்தார்கள். இப்போது இவன் நாதியற்றவனாக சாப்பிடுவதற்கு எதுவுமில்லாமல் இருக்கிறான். ஆனால் பசியோ வாட்டுகிறது. ராத்திரி ஆகிவிட்டது. படுத்துக்கொண்டு இழுத்துப் போர்த்திக் கொண்டான். பசி அடங்குமா? திரும்பவும் எழுந்தான். யார் வீட்டிலோ வாசலில் உடைந்து போன மண்பாண்டம் கிடந்தது. அந்த உடைந்துபோன ஓட்டாஞ்சில்லை எடுத்துக்கொண்டு பவதி பிக்ஷாம் தேஹி என்று ராப்பிச்சைக்குப் போக ஆரம்பித்துவிட்டான்!

உபநிஷத் என்ன சொல்கிறது...?

ராத்திரி வேளையிலே பிச்சை எடுக்காதே; அது மஹா பாவம்! ரொம்ப தப்பு. அவ்வாறு பிச்சை எடுக்க மாட்டேன் என்பதை விரதமாகவே வைத்துக் கொள் என்கிறது.

இதே இடத்திலே ஆசார்யர்கள் வியாக்யானம் பண்ணுகிறபோது, "ராத்திரியிலே பிச்சை கேட்பது எவ்வளவு பாவமோ அதே மாதிரி ராத்திரியிலே பிச்சை போடாமல் விட்டாலும் மஹா பாவம்" என்கிறார்கள்!

இப்படிப் 'பாவம் பாவம்' என்று எல்லாவற்றையும் சொல்வதற்குத்தான் வேதம் வந்ததா என்று நாம் சந்தேகப்படலாம். ஆனால், இதனுடைய கருத்தை நாம் நன்கு உணர வேண்டும்.

நம்மைப் போன்ற ஒரு மனிதன் இரவிலே பிச்சையெடுக்கும்படியான நிலைக்கு இந்தச் சமுதாயத்தை நீ உருவாக்காதே! 'அவன்தானே பிச்சை எடுக்கிறான்; நமக்கென்ன?' என்று நீ நினைக்காதே. அது உனக்கும் கெடுதல் தான் என்கிறது சாஸ்திரம்!

'ஏனென்றால், அவன் பிச்சை கேட்க வரவில்லை. உன்னை சிக்ஷிக்க வந்திருக்கிறான்' என்கிறது சாஸ்திரம். "போன ஜன்மத்திலே நான் பிச்சை போடாம விருந்துவிட்டேன். ஆகவே இப்போது பிச்சை எடுக்கிறேன்" என்று அவன் சொல்கிறானாம்!

"இப்போது நீ போடாவிட்டால், இதனால் உனக்கு அடுத்த ஜன்மாவிலே பிச்சை எடுக்கிற துர்பாக்கியம்தான் ஏற்படும்" என்று சொல்லிவிட்டுப் போகிறானாம் அவன்!

ஆகவே பிக்ஷதே சிக்ஷதே! இன்னொருத்தன்தானே பிச்சையெடுக்கிறான் என்று நாம் விட்டுவிட முடியாது. நம் சமுதாயத்தில் இன்னொருத்தர் பிச்சை எடுத்தால் அதை வேடிக்கை பார்க்கலாகாது. 'பிச்சை எடுக்கும்படியான அவல நிலைக்கு இச் சமுதாயத்தை உருவாக்காதே' என்பது வேதத்தின் கருத்து.

'எப்படியாவது சிரமப்பட்டு நிறைய அன்னத்தைச் சம்பாதிக்க வேண்டும். அன்னத்தை உருவாக்கி எல்லோரும் நன்கு உண்டு உயிர் வாழ வேண்டும். இல்லை என்ற அவச் சொல் உருவாகக் கூடாது...' என்று வேதமே உபநிஷத்தில் அழகாகச் சொல்கிறது.

இப்படி ராத்திரி வேளையிலே பிச்சை கேட்கக் கூடாது என்றால், அதையே செய்கிறான் இந்த ராஜா! உலகத்தையெல்லாம் பரிபாலிக்கும்படியான சக்கரவர்த்திக்கு ராப்பிச்சை கேட்கும்படியான ஓர் அவல நிலை ஏற்பட்டுப் போச்சே...


அப்போது வீதி வழியாகப் போகிறான். தன்னை ராஜா என்று கண்டுபிடித்துவிடப் போகிறார்களே என்று இழுத்து இழுத்துப் போர்த்திக் கொள்கிறான்.

அந்தந்த வீட்டிலே மீந்ததைப் போடுகிறார்கள் அவன் கலையத்தில். அதை எடுத்துக்கொண்டு, சாப்பிடுவதற்காக வேகமாகப் போகிறபோது...

'கருநாய் கவர்ந்த காலன் - சிதறிய பானையன்!' என்பதற்கேற்ப, கறுப்பாக

ஒரு நாய் படுத்திருந்தது. இருட்டில். தெரியாமல் அதன் மேல் காலை வைத்தான். அது எழுந்து இவன் காலைக் கவ்விற்று... கையிலிருந்த மண் பாண்டத்தைக் கீழே போட்டு விட்டான் ராஜா! கைக்கு எட்டியது, வாய்க்கு எட்ட வில்லை அவனுக்கு!

'கருநாய் கவர்ந்த காலன்' என்றால் கறுப்பான நாய் மட்டு மல்ல... வியாக்யானம் பண்ணும் ஆசார்



எட்டாம் பாகம் 11

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

யர்கள் என்ன சொல்கிறார்கள்? 'கருவுற்றிருந்த நாய் அது' என்கிறார்கள். அப்போதுதான் குட்டி போட்டிருக்கிறது அந்த நாய். குட்டி போட்ட நாய், பழகியவர்களையே கிட்டே விடாது. அது எவ்வளவு தீவிரமாக கோபத்தோடு கடிக்கும் என்பதை அன்று உணர்ந்தான் மன்னன்! சிற்றரசர்களெல்லாம் கப்பம் கட்ட வருகிறபோது, பட்டு - பீதாம்பரத்தினால் அவன் திருவடி மூடியிருக்கும். அந்தத் திருவடி தரிசனம் கிடைக்குமா என்று அவர்கள் குனிந்து குனிந்து, இவன் சக்கரவர்த்தியாக உட்கார்ந்திருந்த காலத்தில் பார்ப்பார்களாம்.

அப்படிப்பட்டவனின் திருவடி, இன்றைய தினம் நாற்சந்தியிலே, ஒரு குக்கிராமத்திலே, நாய் கவ்வக் கிடக்கிறதே!

''டாக்டர், உங்களைப் பார்க்கும்போது ஒரு ராஜாவையே நேர்ல பார்க்குற மாதிரி இருக்குது!''

''எந்த ஊர் ராஜா?''

''எமதர்மராஜா''

- அஜித்லால்



இதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள் - ஐச்வர்யம் சாசுவதமல்ல... அது நிலைக்க வேண்டுமானால், அவன் திருவடியைத்தான் நாம் பற்ற வேண்டும். அதே மாதிரி தாரித்ரியமும் சாசுவதமல்ல...

தாரித்ரியம் நம்மை விட்டு விலக வேண்டுமானாலும் அவன் திருவடியைத்தான் நாம் பற்ற வேண்டும்.

விதுர நீதியிலே, இதரர் மனம் புண்படும்படியாகப் பேசாத விதுரரே ஓரிடத்திலே கருக்கென்று சொல்கிறார்:

'இரண்டு பேரைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து பெரும் பாறாங்கல்லாக கழுத்திலே கட்டி, நடு சமுத்திரத்திலே இறக்கிவிடலாம்' என்கிறார் அவர்!

சின்ன கல்லாகக் கட்டினால் எழுந்து வந்துவிடப் போகிறார்களே என்று, பெரிய கல்லாகக் கட்டி நடு சமுத்திரத்திலே இறக்கிவிட வேண்டும்...

யார் அந்த இரண்டு பேர்...?

1. நிறைய பொருள் படைத்தும் பிறருக்கு தானம் பண்ணாமல் இருப்பவர்கள்.

2. பரம தாரித்ரியத்தில் இருந்து கொண்டு, 'கிருஷ்ணா - ராமா - கோவிந்தா' என்று சொல்லாமல், அதற்குப் பதிலாக "நான் கஷ்டப்படுகிறேன்; நான் கஷ்டப்படுகிறேன்" என்று அதையே புலம்பிக் கொண்டிருப்பவர்கள்.

- இப்படி பகவான் நாமாவைச் சொல்லாமல் தாரித்ரியத்தைச் சொல்லிப் புலம்புகிறவர்களையும், பொருள் படைத்தும் பிறருக்குக் கொடுக்காமல் இருப்பவர்களையும் நடுக்கடலில் தள்ளிவிடலாம் என்கிறார் விதுரர்!

ஆகையினாலே, ஐச்வர்யம் நிலைத்து நிற்க வேண்டுமானால் அவன் திருத்தாள் பணிய வேண்டும்.

பரத சக்கரவர்த்தி தனது ஐச்வர்யத்தையெல்லாம் விட்டுவிட்டு காட்டிலே வந்து வாஸம் பண்ணிக் கொண்டிருக்கிறார். அப்படி வாஸம்



வாரியார் அமுதம்

இறைவனிடம் நீ நின்று அன்பு செய்யும்போது, "ஆண்டவனே! உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் இன்புற அருள்புரிவீர்" என்று வேண்டு. அவ்வித மின்றி "என்னைக் காப்பாற்று" என்று மட்டும் வேண்டாதே. உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் காப்பாற்று என்று வேண்டுவாயானால், அந்த உயிர்களில் நீயும் ஒருவன்தானே.

என் வயலுக்கு மழை பொழிய வேண்டும் என்று வேண்டுவதைவிட உலகமெல்லாம் மழை பொழிய வேண்டும் என்று வேண்ட வேண்டும். உலகமெங் கும் மழை பொழிந்தால் உன் வயலிலும் அந்த மழை பொழியுமன்றோ?

ஒரு காரியத்தைச் செய்யும்போது நமக்குத் துணையிருப்பது நல்லது. இவன் சிறியவன்தானே என்று யாரையும் அவமதிக்காதே.

இராமர் குரங்குகளைத் துணைக்கொண்டு கடலை அணை கட்டி இராவணவதம் புரிந்தார்.

அரிசி உயர்ந்தது. உமி தாழ்ந்தது. இப்படி இருந்தாலும் அரிசியை விட்டு உமி பிரிந்துவிட்டால், அரிசியை நிலத்தில் இட்டால் முளைப்பதில்லை. உமியின் துணைக்கொண்டு தான் அரிசி முளைக்கின்றது. உமி போன்ற சிறியவர் துணையால் பெரிய காரியத்தைச் செய்யலாம்.

பண்ணிக் கொண்டிருக்கிறபோது இவருக்கு எதிர் பக்கத்திலே ஒரு பூரண கர்ப்பிணியான மானானது ஜலத்தைப் பருக வருகிறது. ஜலத்திலே வாயை வைத்து விடுகிறது... பருகிக்கொண்டே யிருக்கிறபோது, சிம்ஹ கர்ஜனை கேட்டது. அவ்வாறு கேட்டவுடனேயே அது நடுநடுங்கிப் போய்விட்டது. அந்த பயத்திலேயே அங்கேயே பிரசவித்து விட்டது அந்த மான்.

அப்படிப் பிறந்த அந்த மான் குட்டி, கரையிலே விழாமல், ஜலத்திலே விழுந்து விட்டது. தண்ணீர் அடித்துக் கொண்டே போகிறது அந்த மான் குட்டியை.

எல்லாவற்றையும் விட்டுவிட்டு சர்வசங்க பரித்யாகம் பண்ணிவிட்டு, ஐச்வர்யத்தை விட்டு வந்த அந்த ராஜா - சக்கரவர்த்தி - அந்த மான் குட்டி அடித்துக்கொண்டு போகப்படுவதைப் பார்த்தார்.

உடனே அந்த மான் குட்டியை ரக்ஷிக்க வேண்டும் என்கிற எண்ணம் அவருக்குத் தோன்றியது. எடுத்து ரக்ஷித் தார்.

எல்லாவற்றையும் விட்டுத் துறந்தவர் இப்படிப் பண்ணலாமா? என்றால்,

அதற்கு பகவான் கீதையிலே அழ காகப் பேசியிருக்கிறான்:

கர்மாவைத் தெரிந்து கொள்
அகர்மாவைத் தெரிந்துகொள்
விகர்மாவைத் தெரிந்துகொள்

- இவை மூன்றையும் தெரிந்து கொண்டு பிற்பாடு கர்மாவில் அகர்மா - விகர்மாவைப் பார்; அகர்மாவில் கர்மா - விகர்மாவைப் பார்; விகர் மாவில் கர்மா - அகர்மாவைப் பார்... எவன் இதைப் பார்க்கக் கொடுத்து வைத்தவனோ அவன்தான் ரொம்ப புத்திசாலி என்றான்!

இப்படி ஒன்றை மற்றதில் பார்ப்பது இருக்கட்டும்... இப்போ, இதிலே ஏதா வது புரிகிறதா என்றால், ஒன்றும் புரிய வில்லை. அப்புறம் எப்படி கர்மாவில் விகர்மாவை, அகர்மாவில் கர்மா விகர்மாவை, விகர்மாவில் அகர்மா கர்மாவைப் பார்ப்பது?...

(வளரும்)



அதிசய உலகம்

நார்நியா!

– கவர்ஸ்டோரி



மகேந்திர டோனி

– போஸ்டர்



யார் அந்த ஜானு?

– சுவையான கதை

1000/- ரூபாய் பரிசுப் போட்டி

மேலும் படக்கதைகள், ஜோக்ஸ், கட்டுரைகள்
இன்னும் பல...

குழந்தைகளின் குதூகலம்!

கோகுலம்

ஏப்ரல் 2006 ரூ.6/- மட்டுமே



1916-17 ஆம் ஆண்டுகளில் 'ம்யூச்சுவல்' நிறுவனத்துக்காக சார்லிசாப்ளின் 12 படங்களை இயக்கி நடித்தார். இவை அனைத்தும் பேசாத மௌனப்படங்கள். இப்படங்களுக்காக அவர் பெற்ற சம்பளம் ஒரு மில்லியன் (10 லட்சம்) டாலர்... உலக சினிமாவின் முதல் மில்லியன் டாலர் சம்பளக்காரர் சார்லிசாப்ளின் என்ற நகைச்சுவை நடிகர் தான்.

– சார்லிசாப்ளின் கதை

11



நானும் கட்டபொம்மனும்...

 கு.ஞானசம்பந்தன்

சினிமாவுக்குப் போகலாம் வாங்க!

"நம்ம ஊர்ல இல்லடா, வைகை ஆத்துக்குத் தெற்கே தென்கரைன்னு ஊர் இருக்குல்ல. அங்கதான் அவர் இருக்கார். அவர் பேரு டி.ஆர்.மகாலிங்கம். பெரிய நடிகர். பாடகர். நம்ம வள்ளி திருமண நாடகத்திலே கூட முருகனா வந்து பாடுவாரே அவர் தாண்டா..." என்றார் அம்மா.

"அவர் படத்தில் நடிச்சிருக்காரா என்ன?"

"ஆமாடா, நான் சில படங்கள் பாத்திருக்கிறேன். அப்பாவே என்னைக் கூட்டிட்டுப் போயிருக்கார். 'நாமிருவர்', 'ஸ்ரீ வள்ளி', 'மணிமேகலை' "என்று அவர் சொல்லிக் கொண்டுவர... நான் குறுக்கே பாய்ந்தேன். "என்னைய ஏன் அந்தப் படத்துக்கெல்லாம் கூட்டிட்டுப் போகலை?"

"நீ பொறக்கவே இல்லேயேடா செல்லம்" என்று அம்மா சொன்ன போது, எனக்குப் பெருத்த அவமானமாக இருந்தது.

'ச்சே... அப்பவே பிறந்திருக்கலாம்' என்று நினைத்துக் கொண்டேன்.

"பவளமல்லிய சின்னதா மாலைகட்டி பிள்ளையாருக்குப் போட்டியா?" என்று அம்மா கேட்டதை நான் கவனிக்கவில்லை.

அதற்குள் சினிமா மணி என்னைத் தேடி வந்து வாசலில் மணி அடிக்கவே, நான் அம்புப் பாய்ச்சலில் அவனை நோக்கி ஓடினேன்.

"என்ன மணி இப்பவே கிளம்பிடட்டுமா!" என்று கேட்டேன்.

"இல்லை, முதல்ல நீ என் சைக்கிள்ல ஏறு. எங்க வீட்டுக்குப் போவோம். நாம இன்னிக்குப் பாக்கப் போறமே..." என்று

அவன் இழுத்தபோது.

"தெரியுமே டி.ஆர்.மகாலிங்கம்... பாடகர், நடிகர், ஸ்ரீ வள்ளியில நடிச்சவர்"

"பரவாயில்லையே... இதுக்குத்தான் உன்னைய இப்ப எங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறேன்" என்றபடி அவன் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தினான்.

அவன் வீட்டினுள்ளே நுழைந்து பார்த்தபோது நான் சற்றே மயங்கித்தான் போனேன். கலைக் கோயிலாகக் காட்சியளித்தது அந்த வீடு.

"நீ அருள்வாக்கு சொல்றதா உன் மருமக சொன்னா! நிஜமா?"

"அட நீவேற... நான் கோபத்திலே கத்தறதை அப்படிக் கேலி பண்றா!"

- பம்மல் நாகராஜன்



சினிமா மணியின் வீட்டில் நடுக் கூடத்தில் நடராஜர் சிலை ஒன்று நாட்டியமாடியபடி இருக்க, அவருக்கு எதிரே மணியின் சகோதரிகள் இரண்டு பேரும் அபிநயம் பிடித்து ஆடிக் கொண்டிருந்தார்கள். மணியின் தாயார் பூரிக்கட்டை போல (எனக்குத் தெரிந்த உவமை) எதையோ வைத்துத் தட்டியபடி இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தார்.

நான் பேச வாயைத் திறப்பதற்கு முன் 'உஷ்' என்று உதட்டில் விரல் வைத்து சைகை காட்டிவிட்டுத் தாயாருக்குப் பின் புறம் என்னையும் இழுத்து உட்கார வைத்து ரசிக்க ஆரம்பித்தான் மணி.

எனக்கு ஆச்சரியம். இவர்கள் வீட்டில் சமைக்க மாட்டார்களா? சண்டை போட மாட்டார்களா? வகுப்பில் 'மார்க்' குறைவாக வாங்கினால் அடிக்க மாட்டார்களா?

உடனே எங்கள் பள்ளிக்கூட ஆண்டு விழாதான் என் ஞாபகத்துக்கு வந்து தொலைத்தது. 'வீரபாண்டிய கட்ட பொம்மன்' நாடகம் போடுவதாக முடிவு செய்த ஐந்தாம் வகுப்பு டீச்சர் பரிமள சுகந்தமேரி, நான் வகுப்பில் வளவளவென்று பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து வியந்து, "ஆண்டவன் மீது ஆணையாக நீதான் கட்டபொம்மனாக நடிக்க வேண்டும். வசனத்தை மனப் பாடம் செய்து கொள். உன் அம்மாவிடம் சொல்லி ஒரு பட்டுப்புடைவை கொண்டு வந்துவிடு" என்று மளமளவென்று ஆணையிட்டு வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.

எனக்கு பயத்தில் காய்ச்சலே வந்து விட்டது. கட்டபொம்மனுக்கும் பட்டுப் புடைவைக்கும் என்ன சம்பந்தம்?

நான் தயங்கித் தயங்கி வீட்டுக்குள் போய் முதலில் என் அப்பாவிடம்தான் சொல்லி அனுமதி கேட்டேன்.

"என்னடா நீ கட்டபொம்மனா?" அவர் ஜாக்சன் துரை போல பயங்கரமாய்ச் சிரித்தார். நான் அவரைப் பற்றிக் கவலைப்படாமல் அம்மாவிடம் பட்டுப் புடைவை பற்றிச் சொல்லி நாடகத்துக்கு அது வேண்டும் என்றேன். அம்மாவும் கோபிக்காமல் தன் மடிப்புக் கலையாத பட்டுப் புடைவையை எடுத்து எனக்கு இடுப்பில் சுற்றி, அப்படியே தோள் பட்டை வழியாகத் தொங்கவிட்டு இடுப்பில் பட்டு ரிப்பன் கட்டி சின்னக் கண்ணாடி முன் என்னை நிற்க வைத்து, 'என் கண்ணே பட்டுடும் போல இருக்கே, அசல் ராஜகுமாரன்தான் நீ' என்று பூரித்துப் போனார்.

அதற்குள் என் இளைய சகோதரி என்

அருகில் வந்து, "நீ அந்த நாடகத்தில் பபூனா வரப் போறீயாமே!" என்று கேட்டாள். நான் அவளைப் பற்றிக் கவலைப் படவில்லை. ஒரு வாரம் வயல், வரப்பு, தோப்பு, பிள்ளையார் கோயில் என்று எல்லா இடங்களிலும் தனியாக நின்று 'நீ வயலுக்கு வந்தாயா? நாற்று நட்டாயா, களை பறித்தாயா?' என்று கேட்டுக் கொண்டு திரிந்தேன்.

நாடகத்தன்று காலையிலிருந்தே பயம் தொடங்கி விட்டது. பட்டுச் சேலை சுற்றி, அட்டைக்கத்தி கட்டி, மீசை வரைந்து, தங்ககலர் கிரீடம் வைத்து என்னை மேடையில் நிற்க வைத்து திரையைத் தூக்கினார்கள். கூட்டத்தைப் பார்த்தவுடன் எனக்கு மூச்சே நின்றுவிடும் போல் ஆனது.

ஜாக்சன் துரையாக நடித்த டேவிட் தேவதாஸ், தடிமாடு மாதிரி நின்று என்னைப் பார்த்து முறைத்துக் கொண்டிருந்தான். நாடகம் முடியும் முன் என்னைத் தூக்கிவிட அவன் தயாராக இருப்பது போல் காணப்பட்டான். அவன்தான் கட்டபொம்மனாக நடிப்பதாக இருந்தான். ஆனால் பாவம் அவன் வீட்டில் பட்டுப் புடைவை இல்லை. அதனால் அவன் ஜாக்சன் துரையானான்.

'கட்டபொம்மா பேசு' என்று கீழே இருந்து யாரோ கத்த, நான் ஒரு அடி எடுத்து வைக்கும்முன் என் பின்னே வர வேண்டிய வெள்ளையத்தேவன் என் பட்டுச் சேலையை மிதிக்க, நான் தடுமாறி 'டமால்' என்று ஜாக்சன்துரை காலில் விழ, அவன் பெருந்தன்மையாக 'சரி நீ வரிகட்ட வேண்டாம்' என்று ஏதோ சொல்ல, நான் சடாரென்று எழுந்து 'வானம், கிஸ்தி, முந்திரி' என்று ஏதோ சொல்ல... நாடகம் ஒன்றும் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை.

'பட்டுப் புடைவையை இனிமேல் கேட்காதே' என்று அம்மா சொல்ல,

'இனிமேல நாடகம், சினிமான்னு கேட்டே... நானே உன்னையத் தூக்கில் போடுவேன்' என்று அப்பா சொல்ல, பரிமள சுகந்தமேரி டீச்சர் ஒரு மாதம் என்னிடம் பேசவே இல்லை. நான்பட்ட கஷ்டம் கட்டபொம்மன்கூடப் பட்டிருக்க மாட்டார்.

(ரீல் சுற்றும்)

ஒரு பக்கம்

கள்ளன் கடத்தும் டாலர்கள்!



பிரேசிலில் 4.7 மில்லியன் டாலர்கள் காணாமல் போய்விட்டன. யாரும் வீடு புகுந்து திருடவில்லை. பிச்சுவா காட்டி மிரட்டவில்லை. யாரும் யாரையும் கிட்நாப் செய்யவில்லை. ஆனால் பணம் மட்டும் மாயமாய் மறைந்துவிட்டது. எப்படி?

சர்வமும் ஈ-மயமாகிவிட்டதுதான் பிரச்னையே. உட்கார்ந்த இடத்திலேயே காலையாட்டிக் கொண்டு பேங்கிங் செய்வதால் வந்த வினை. 200 டாலர் கொடுத்து ஒரு டீ-ஷர்ட்டுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு நீங்கள் நகரும் அதே சமயம் உங்கள் செலவில் ஒரு ஜார்ஜோ, ரிக்கியோ, ஜிக்கியோ தன் கேர்ள் ஃப்ரெண்டோடு மியாமிக்கு முதல் வகுப்பில் பயணம் செய்துகொண்டிருப்பான். அடுத்த முறை அரை டாலர் பிட்ஸா வாங்க நீங்கள் மௌஸைத் தடவும்பொழுது 'மன்னிக்கவும் உங்கள் கணக்கில் சல்லிக் காசுகூட கிடையாது' என்று ஒரு கொண்டை போட்ட இளம்பெண் சிரித்துக்கொண்டே அறிவிப்பார்.


'அதெப்படி? என்னுடைய பாஸ்வேர்டு எனக்கு மட்டும்தானே தெரியும்' என்று கேட்கிறீர்களா? சுலபம். நீங்கள், உங்கள் வீட்டு கீபோர்டில் ஒற்றியெடுக்கும் ஒவ்வொரு எழுத்தையும் ஒரு மென்பொருள் கள்ளன் (பாஸ்வேர்டு கள்ளன் என்றும் சொல்லலாம்) ஈயடிச்சான் காப்பி அடித்துக்கொண்டிருக்கிறான். இந்தக் கள்ளன் கண்களுக்குத் தெரிய மாட்டான். ஏதாவதொரு இணையதளத்தில் ஒளிந்து கொண்டிருப்பான். பகல், இரவு எந்நேரமும் உங்கள் விரல்களைக் கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டேயிருப்பான்.

ஒரு கிலோமீட்டர் நீளத்துக்கு பாஸ்வேர்டு வைத்துக்கொண்டால்கூட சிரமப்படாமல் அதை அப்படியே பதிவுசெய்துகொண்டு உங்கள் பாஸ்வேர்டை பிரதி எடுத்து அனுப்புவான். பிறகு மியாமிதான். பிரேசிலில் 4.7 மில்லியன் டாலர்களை இந்த மென்பொருள் கள்ளன் லாகவமாகக் கடத்தியிருக்கிறான். 200 பாஸ்வேர்டுகளை பிரதியெடுத்து 6 வங்கிகளைக் கொள்ளையடித்திருக்கிறான். ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இந்தக் கள்ளனுக்குக் கிளைகள் உண்டு.

இவனைக் கண்டுபிடிப்பது சாதாரண விஷயம் கிடையாது. ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவு வைப்பதைப் போல் பிரேசிலில் பல நவீன சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்தி ஒவ்வொரு கம்ப்யூட்டரையும் கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு வேவு பார்க்கிறார்கள். 'எதிர்காலத்தில் இந்தக் கள்ளன் மேலும் பெருகுவான். எங்களுக்கு இனி தீராத தலைவலிதான்' என்று கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்திருக்கிறார் அவசர சிகிச்சைப் பிரிவு அதிகாரி பீட்டர் காசிடி. இன்றைய நிலவரப்படி மொத்தம் இந்தக் கள்ளன் 1900 இடங்களில் (அதாவது இணையதளங்களில்) பதுங்கியிருக்கிறான். ஒவ்வொரு அமாவாசைக்கும் ஒவ்வொரு வைரஸை சிருஷ்டிக்கும் புண்ணியவான்கள்தான் இந்த பாஸ்வேர்டு கள்ளனையும் சிருஷ்டிக்கிறார்கள்.

- மருதன்

ஊழ்வினை உடைக்கும் சித்தர்கள்!



• சிவவாக்கிய சித்தர்

நவக்கிரஹ தோஷங்களைப் போக்குவதற்காகவே எழுப்பபப்பட்டிருக்கும் ஆலயம்... ஆனால் அங்கே நவக்கிரஹங்களுக்கு சன்னதி கிடையாது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? தாம்பரத்திலிருந்து வேளச்சேரி செல்லும் சாலையில் இருக்கிறது ராஜ கீழ்ப் பாக்கம். அங்கிருந்து தெற்கு நோக்கிப் பிரியும் சாலையில் மூன்று கிலோமீட்டர் பயணித்தால் மாடம் பாக்கம் வந்துவிடுகிறது. அங்கு புராதனமிக்க அருள் மிகு தேனுபுரீஸ்வரர் கோயில் அருகிலேயே இயற்கை யான சூழலில் அமைந்திருக்கிறது சித்தர்கள் ஆலயம். அதுவும் ஒருவருக்கோ இருவருக்கோ அல்ல... ஒட்டு மொத்தமாய் பதினெட்டுச் சித்தர்களுக்கும் 'ப' வரிசை யில் கோயில்கள். அத்தனையும் விழல் வேய்ந்த கருவறைகள். ஏன் இத்தனை எளிமை? ஆலய ஸ்தாபகர் ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளின் சீடர், குருஜி கே.வி.எல்.என். சர்மாவிடம் கேட்டோம்.

''சித்தர்கள் எளிமையின் வடிவாய் வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு ஆடம்பரம் பிடிக்காது. முக்கியமாக பதினெட்டுச் சித்தர்களையும் ஒரே இடத்தில் கட்டி வைப்பது முடியாத காரியம். உலக நன் மைக்காகவும், மனித மனங்களில் அமைதி ஏற்படுத்துவதற்காகவும் ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளின் சூட்சும வழிகாட்டுதலின்படி ஒருமித்த மனத்தோடு இணைந்து இங்கே புனர் அவதாரம் எடுத்துக் கோயில் கொண்டிருக்கிறார்கள். விழல் கோபுரம் குளிர்ச்சியைத் தரக்கூடியது'' என்றவர், சித்தர்களைப் பற்றியும் அவர்களின் தெய்வத்தன்மை பற்றியும் சொல்ல ஆரம்பித்தார்.


''மனித வாழ்க்கை உடல், பொருள், ஆவி ஆகிய



• பாம்பாட்டி சித்தர்



• சித்தர்கள் ஸ்தலம்



* ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்

மூன்று வகையில் அடங்கி விடுகிறது. உடல் என்பது மனித சரீரம். இப்பிறவியில் என்ன செய்யப் போகிறோம் என்பதைப் பற்றியது பொருள். நமது ஆன்மாவே ஆவி. மாடம்பாக்கம் பதினெட்டுச் சித்தர் சக்தி பீடத்தைப் பொறுத்தவரை உடல், பொருள், ஆவியாக இருந்து வழிகாட்டி வருபவர் உலக மகா சூட்சும ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள் ஆவார். வழிகாட்டுதலில் இருவகை உண்டு. ஒன்று ஸ்தூலம், மற்றொன்று சூட்சுமம். ஸ்தூலம் என்பது கண் முன் தெரியும் நிலை. சூட்சுமம் என்பது கண்ணுக்குப் புலப்படாத உண்மை நிலை. ஸ்தூலமும், சூட்சுமமும் இணைந்து செயல்படும்போது உண்மையான, தெளிவான பேரறிவு நிலை உண்டாகிறது. இதுவே ஞானம்.

ஞானம் என்பதை நாம் கடை வீதியில் சென்று வாங்க முடியாது. அனுபவித்து ஆராய்ச்சி செய்து, குருவருள் பெற்றுத் தெளிவடைந்து பரிசுத்த நிலையை எட்ட வேண்டும். அப்படி எட்டிய பிறகு காமம், குரோதம், லோபம், மோகம், மதம், ஆச்சரியம் ஆகிய இந்திரிய சுகங்களுக்கு அங்கே இடமில்லை. இப்படிப்பட்ட ஆனந்த நிலையை அடைந்து, ஜீவனையே (உயிரை) சிவனாக்கி, இயங்கி வருபவர்கள்தான் உண்மையான சித்தர்கள்.

எட்டுவிதமான அற்புதங்களைச் (அஷ்டம சித்துக்கள்) செய்யக்கூடிய ஆற்றலோடு, வெட்ட வெளியிலே சூட்சும உடலுடன் அம்பிகையின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, மனித வாழ்க்கையைச் சீர்படுத்தி, பிரச்னைகளைத் தீர்த்து வைத்து, தெய்வீக ஆற்றலின் அருமை பெருமைகளை உணர வைத்தவர்கள் அவர்கள்.

‘நவக்கிரஹ தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமை பெற்றவர்கள் சித்தர்கள்!’

இந்த மகான்களை வணங்கினாலே தெய்வத்தின் கடாட்சம் மனிதருக்குக் கிட்டும், நினைத்தது சித்திக்கும் என்பது நமது மத நம்பிக்கை.

முறையாக இறைவனை அணுகுவது எப்படி, அதற்கான வழிமுறைகள் என்ன என்பதையெல்லாம் சித்தர்கள் கூறிச் சென்றுள்ளனர். அது மட்டுமல்ல, தங்கள் தவ வலிமையால் இறை சக்தி பெற்றுள்ள பதினெட்டுச் சித்தர்களும் நவக்கிரஹங்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமை பெற்றவர்கள்'' என்கிறார் சர்மா.

இங்கிருக்கும் பதினெட்டுச் சித்தர்களும் இரண்டிரண்டு பேராக ஒன்பது கிரகங்களின் கெடுபலனை மாற்றுகிறார்கள் என்பது நம்பிக்கை. அதற்கேற்றாற்போன்று சித்தர் ஆலயங்களையும் தனித்தனியாக பிரித்துக் கட்டியிருக்கிறார்கள். உதாரணத்துக்கு ராகுவை, ஸ்ரீஅழுகணி சித்தர், பாம்பாட்டிச் சித்தரும், கேதுவை ஸ்ரீசட்டை முனி சுவாமி, ஸ்ரீகுதம்பை சித்தரும் கட்டுப்படுத்தி கெடுபலனைக் குறைக்கிறார்கள்.

இந்த சித்தர் சன்னதியில் சக்தி வாய்ந்த தெய்வ சன்னதிகளும் உள்ளன. சித்தர்களை வழிபடும் முன்பு, இந்த தெய்வங்களை தரிசனம் செய்வது கோடி புண்ணியம் என்பது இங்கே வரும் பக்தர்களின் கருதது. ஆலய வளாகத்தில்

நுழையும்போது வடக்கு நோக்கிய ராஜகோபுரம் வரவேற்கிறது. அதில் உலகிலேயே மிகப்பெரிய பச்சை நிற மகாமேரு பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கிறது. வலப்புறம் சேஷாத்ரி சுவாமி களின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயம். இடப்புறம் குருவாயூர் கோயில் அமைப்பைப்போல ஸ்ரீகிருஷ்ணருக்கு ஆலயம். இந்த மூன்று பிரதான ஆலயங்களின் பின் புறம்தான் பதினெட்டுச் சித்தர்களுக்கும் 'ப' வரிசையில் அமைந் துள்ள தனித் தனி ஆலயங் கள் நம்மை அமைதியில் ஆழ்த்துகின்றன. சித்தர்களை வழிபாடு செய்வதற்கும் வழிமுறை உண்டாம்.



• கே.வி.எல்.என். சர்மா

"முதல் சித்தராகிய சிவவாக்கிய சித்தர் சுவாமி களிடம் தொடங்கி, பதி னெட்டாவது சித்தரான பாம்பாட்டி சித்தர் சுவாமி களிடம் வழிபாட்டை முடித்து, இறுதியில் திரு நாகேஸ்வரத்தில் உள்ளதுபோல் பத்தினிகளுடன் கூடிய ராகு கிரஹத்தின் அம்சமாக அருள் பாலிக்கும் ஸ்ரீநாகராஜரைத் தரிசித்து, மனக்குறைகளை இறக்கி வைத்து அன்னதான பிரசாதம் பெற்றுத் திரும்ப வேண்டும்" என் கிறார் சர்மா. நவக்கிரஹ ஸ்தலங் கள், திருவண்ணாமலை கிரிவலம், தென்னக திருத்தலங்களைத் தரிசிக்க முடியாமல் தவிக் கும் சென்னைவாசிகளுக் கும் ஊழ்வினைப் பயனை அளிக்கும் நவக்கிரஹ தோஷங்களிலிருந்து விடு தலை பெறத் துடிப்பவர் களுக்கும் மனநிம்மதியை அளிக்கிறது இந்த அற்புத சித்தர்கள் ஸ்தலம்!

- ஸ்ரீசக்கரம்

படங்கள்:

டிஜிட்டல் சண்முகம்

நீங்கள் கேட்டவை - தராசு

● ஆர்.சாலமன், ஆலங்குளம்

? ஒரு ரூபாய்க்கு நாளிதழ் - லாபமா நஷ்டமா?

! அ) இன்று நஷ்டமானாலும் நாளை விலை உயர்த்தப்படும்போது லாபமாக மாற



• எக்ஸ்ட்ரா புள்ளிகள்...!

லாம். ஆ) ஒரு வகையில் நஷ்டமானாலும் 'இன்னொரு வகையில்' லாபமாக அமைவதால் இந்த நஷ்டத்தை ஏற்கத் தயாராகலாம். இ) விற்பனை அதிகம் என்று சுட்டிக்காட்டி விளம்பர விகிதங்களை உயர்த்தி, நிறைய விளம்பரங்கள் பெற்று லாபம் ஈட்டலாம்.

ஒன்று நிச்சயம்... நஷ்டத்துக்கு யாரும் தொடர்ந்து நடத்தமாட்டார்கள்.

● த. சத்தியநாராயணன், சென்னை - 33

? ஆயிரம் விக்கெட் வீழ்த்திய முரளிதரனின் சாதனை எப்படி?

! இலங்கைத் தமிழர் என்பதால் கருணாநிதியின் பாராட்டைப் பெற்றுவிட்ட சாதனை. முரளிதரனின் பந்து வீச்சு 'ஆக்ஷன்' சோதனைக்கு உட்பட்ட போதிலும் தொடர்கிறது சந்தேக வேதனை! அது சரி, கும்ப்ளே சாதனைக்கு கலைஞர் பாராட்டு கிடையாதா?

● ஜே.வி.ஜே. கண்ணன், திருச்சி - 8

? பட்ஜெட்டில் சேவை வரியை 12 சதவிகிதமாக உயர்த்தியிருந்தாலும் இதைக் கட்ட வேண்டியது சேவை அளிப்போர் தானே தவிர, சேவை பெறுவோர் அல்ல என்று நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறியிருப்பது பற்றி?

! சேவை அளிப்போர் தான் வரி கட்டுகிறார்கள்; சந்தேகமேயில்லை. ஆனால் அதை சேவை பெறுவோரிடமிருந்து வசூலித்துக் கட்டுகிறார்கள்! ப.சி. சுற்றுவது பூவிலும் வாடிப்போன பூ!

● ஆர்.எஸ்.லக்ஷ்மி, கோவை - 41 ✱

? எப்போதோ முடித்திருக்க வேண்டிய 'கோலங்கள்' தொடரில் புதுப்புது கதாபாத்திரங்களை நுழைத்து குழப்பிக் கொண்டிருப்பது ரசிகர்களை முட்டாளாக்குவதுபோல் தோன்றுகிறதே?

! 'எக்ஸ்ட்ரா' புள்ளிகள் வைச்சுட்டா கோலத்தை

❒ ரூ.100/- பரிசு பெறுபவர்:

உமரி பொ.கணேசன்,
ஸ்ரீ நாராயணா ஸ்டோர்,
A-114, மோதிலால் நேரு நகர்,
ஆன்டாப் ஹில், மும்பை - 37

✱ ரூ.50/- பரிசு பெறுபவர்:

ஆர்.எஸ்.லக்ஷ்மி, 20(பு.எ.11),
முதல்தெரு, வி.என்.ஆர்.நகர்,
வடவள்ளி அஞ்சல்,
கோவை - 41

‘நீட்’டா முடிக்க முடியாது என்பது டி.வி தொடர் ரசிகர்களுக்குப் புரியுது; ஸ்பான்ஸர்களுக்கு இந்த ‘சிம்பிள் மேட்டர்’ தெரியலையே!

● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை

? “யாராவது விபத்தில் செத்தா அம்மா 50,000 கொடுக்கறாங்க. அதனால இன்னிக்கு யாரைப் பார்த்தாலும் நடுரோட்டில்தான் நடக்கறாங்க” என்கிறாரே எஸ்.எஸ்.சந்திரன்?

! குரூரமான, மலினமான நகைச்சுவையுணர்வின் மூலம் அம்மாவுக்குப் பெருமை சேர்ப்பதாக எண்ணிக் கொண்டு சிறுமை செய்கிறார்.

● உமரி பொ.கணேசன், மும்பை - 37 ❐

? விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள் எல்லோருமே அ.தி.மு.க. கூட்டணியில் சேர்ந்துள்ளனரே... இனி இவ்விஷயத்தில் அ.தி.மு.க. நிலைப்பாடு எப்படி இருக்கும்?

! அ.தி.மு.க. நிலையில் ஒரு மாறுபாடும் இராது. புலிவாலைப் பிடித்தவர்கள் பாடுதான் திண்டாட்டம். அம்மா ஜெயித்தாலும் கஷ்டம்; தோற்றாலும் சங்கடம்!

● வி.எம்.செய்யது புகாரி, அதிராம்பட்டினம்

? பிரபல இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் செரியன் தற்கொலை முடிவு பற்றி..?

! பலவிதமான இதயங்களை பலப்படுத்தி பிழைக்க வைத்தவர், தாமே ஒரு பலவீனமான சிந்தனைக்குப் பலியானது பெருந்துயரம்தான்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் மீதான பானர்ஜி கமிட்டி அறிக்கையின் அடிப்படையில் மோடி பதவி விலக வேண்டும் என்கிற காங்கிரஸ் முதலான கட்சிகளின் கோரிக்கை நியாயமானதுதானே?

! கோத்ராவைத் தொடர்ந்து நடந்த கோரங்களுக்குப் பிறகு, அப்போதே நியாயமாக மோடி ராஜினாமா செய்திருக்க வேண்டும். இப்போதா அவர் நியாயத்தைப் பற்றிக் கவலைப்படுவார்!



• பாவம்!



• கலைஞரின் கண்மணி!



• துறந்த நியாயம்!



• சேர்க்கும் சிறுமை!

வைகோ பேச்சு ‘புல்லரிக்க’ச் செய்கிறதே...?

● வசிகரன், தேனாம்பேட்டை

? ‘பா.ஜ.க. அரசுதான் பொடாவைக் கொண்டு வந்தது. ஜெ அதைப் பிரயோகிக்க மட்டும்தான் செய்தார்’ என்று வைகோ சொல்வது புல்லரிக்கவில்லையா?

! ‘நாங்கள் அம்பு தயாரித்திருக்கலாம்; ஆனால் அதைத் தவறான நபர் மீது எய்தவர் ஜெ. அதை அப்போதே நாங்கள் கண்டித்திருக்கிறோம்’ என்று வெங்கையா நாயுடு விளக்கியிருக்கிறார். ‘அம்பு இருக்க, எய்தவனை நோவானேன்’ என்கிறார் வைகோ. ஹய்யோ, பாவம்! ○

நல்ல மனுஷன்!

என் அண்ணனின் வீட்டிலிருந்து வெளியே வந்தேன். மழையின் காரணமாக ஆங்காங்கே கட்டிக் கிடந்த குட்டிக் குட்டிக் குளங்களைத் தாண்டியும், நடந்தும் கடந்து வந்துகொண்டிருந்தேன். எதிரே ஒரு ஆள் டிப்டாப்பாக டிரஸ் செய்துகொண்டு என் முன்னால் நின்று "ஒரு நிமிஷம்" என்றார். எப்பொழுதும் என்னிடம் நிறைய பேர் டைம் கேட்பார்கள். அதுபோல் நினைத்து அவரையும் வாட்சையும் பார்த்தேன்.

"நான் பெரம்பூரிலிருந்து வரேன். இங்க வேளச்சேரிக்கு பஸ்சுல வரும்போது என் பர்ஸை பிக்பாக்கெட் அடிச்சிட்டாங்க. இங்க உள்ள நண்பரோட அட்ரசும், அந்த பர்ஸுலதான் இருக்கு. அதனால, எனக்கு பெரம்பூர் திரும்பிப்போக பஸ் சார்ஜ் கொடுத்தீங்கன்னா ரொம்ப உதவியா இருக்கும்" என்றார்.

அவரை மேலும் கீழும் பார்த்தேன். உண்மையைச் சொல்வது போல்தான் தோன்றியது.



"எவ்வளவு பஸ் சார்ஜ்?" என்றேன். உடனே அவர், "பஸ் சார்ஜ் ஐந்து ரூபாய்தான். ஆனா நான் யார்கிட்டேயும் ரூபாய் வாங்கினா திருப்பிக் கொடுத்துருவேன். அதனாலே இருபத்தி ஐந்து ரூபாயா கொடுங்க. உங்க அட்ரசையும் கொடுங்க. நாளைக்கே உங்களுக்கு மணியார்டர் அனுப்பிடுவேன்."

அவர் இப்படிக் கேட்டது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவரின் எண்ணமும் சரி என்று தோன்றியது.

ஒரு பேப்பரில் என் தி.நகர் விலாசம் எழுதி, இருபத்தைந்து ரூபாயும் கொடுத்தேன்.

"மிகவும் நன்றி" என்று கூறிவிட்டு, அவரின் பெரம்பூர் வீட்டு விலா

- மகரபூஷணம்

ம் எழுதிய பேப்பர் ஒன்றும் கொடுத்
ார். சரி என்று அதனை வாங்கி
வத்துக்கொண்டேன்.
பின் நான் தட்டுத் தடுமாறி நடந்து
ஸ் ஸ்டாப் வந்து சேர்ந்தேன். ஒரு
ருக்குக் காலையிலேயே உதவி செய்த
ந்தோஷம் மனத்தில் நிறைந்து இருந்தது.
என் வீட்டுக்கு ஆட்டோவிலேயே
பாய்விடலாமா என்ற எண்ணத்
டன் ஒரு ஆட்டோவை அணுகி, 'எவ்
ளவு தி.நகருக்கு?' என்றேன். வழக்கம்
பால் ஆட்டோவின் விலையையும்
சர்த்துச் சொல்லாமல் 'மீட்டர் போட
றன் சார்' என்றார். ஆச்சரியம்!
ஆட்டோவில் ஏறும்போதுதான்
ாபகம் வந்தது. என் மகளுக்கு பென்
ல் வாங்க வேண்டும் என்பது. ஆட்
டாக்காரரிடம் சொல்லிவிட்டு அங்
ருந்த பேனா கடைக்குச் சென்றேன்.
கட்டேன். கொடுத்தார். பார்த்தேன்.
'டித்திருந்தது. அதனால் எழுதிப்
ார்க்க பேப்பர் கேட்டேன். கொடுத்
ார். எப்போதும் பேனா வாங்கினால்
ழுதிப் பார்க்க கிறுக்கித்தானே பார்ப்
பாம். அதேபோல் முதலில் கிறுக்
னேன். பின் ஸ்ரீராம ஜெயம் எழுத
வண்டும் என்று எண்ணிக்கொண்டே
பப்பரை உற்று நோக்கினேன். என்
கயெழுத்து மாதிரி தெரிந்தது. 'ஓ! இது
ான் அந்த ஆளுக்கு எழுதிக் கொடுத்த
லாசம் அல்லவா? இது எப்படி இவரி
டம் வந்தது?' வியந்தபடியே கடைக்
ாரரிடம் கேட்டேன்.
அவர் சொன்னார், "இப்ப ஒரு
த்தியாசமான ஆள் வந்தார் சார்.
ஸ்சுல எவனோ அவர் பர்ச பிக்பாக்
கட் அடிச்சிட்டானாம். எங்கிட்ட
ருபத்தி ஐந்து ரூபாய் வாங்கிக்
காண்டு, மணியார்டர் அனுப்ப என்
ட்ரஸையும் வாங்கிக்கொண்டு
பாயிருக்கார். அவரோட தி.நகர் அட்
ஸையும் கொடுத்துட்டுப் போனார்.
துதான் இந்த பேப்பர். இந்தக் காலத்
ல இப்படியும் ஒரு நல்ல மனுஷன்
ார்" என்றார்.
எனக்கு தலைசுற்றத் தொடங்
யது. ○

வேட்டையாடு விளையாடு- அடுத்து வெளிவரவிருக்கும் கமல் படம். ஆரம்பித்த நாள் முதலே தயாரிப்பாளர் தற்கொலை முயற்சி, கமல் - கௌதம் இடையே ஈகோ மோதல் என்று ஏராளமான பரபரப்புகள். ரோஜா கம்பைன்ஸிடமிருந்து, தயாரிப்பு ஆஸ்கார் ஃபிலிம்சுக்கு கைமாறிவிட்டது என்றார்கள். அதன்பின் செவன்த் சேனல் நாராயணன் படத்தின் தயாரிப்பாளர் ஆனார். ஒருவழியாக படம் தமிழ்ப் புத்தாண்டு அன்று ரிலீஸ் என்று தகவல் வந்தது. அதற்குள் விநியோகஸ்தர்கள் மற்றும் தயாரிப்பாளர் சங்கத் தரப்பிலிருந்து சில பிரச்னைகள். நெருக்கடியான இந்தச் சூழ்நிலையில் படத்தின் தயாரிப்பாளர் மாணிக்கம் நாராயணனைச் சந்தித்தோம். மனம் விட்டுப் பேசினார்.

"'வேட்டையாடு விளையாடு' படத் தயாரிப்பில் நான் ஒன்றும் விரும்பிப் போய் கைவைக்கவில்லை. படத்தை ஆரம்பித்த தயாரிப்பாளர் காஜா மொய்தீனுக்குப் பல பிரச்னைகள். படத்தை மேற்கொண்டு தொடர முடியாத சூழ்நிலை. சுமார் ஆறுமாத காலம் என்னைத் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டே இருந்தார். ஒரு கட்டத்தில், காஜாமொய்தீனின் பிரச்னையின் பரிமாணத்தைப் புரிந்துகொண்டு, அவருக்கு உதவுவது என்று முடிவு செய்தேன். படத் தயாரிப்பினை ஏற்றுக் கொண்டேன்.

என்னுடைய இந்த முடிவால் காஜா மொய்தீன் மட்டும் பலன் அடைந்ததாக நான் நினைக்கவில்லை. ஒட்டுமொத்த தமிழ் சினிமா உலகமும் பயன் பெற்றிருப்பதாகத்தான் நினைக்கிறேன். இந்த ஒரு படம் மட்டும் முடங்கிப் போயிருந்தால், இதில் சம்பந்தப்பட்டவர்கள், சம்பந்தப்பட்ட படங்கள் எல்லாமே பாதிக்கப்பட்டிருக்கும். இதையெல்லாம் யோசித்துப் பார்த்துவிட்டுத்தான், ஒரே நாளில் இந்தப் படத்தை நான் தயாரிக்க முன் வந்தேன்."



• மாணிக்கம் நாராயணன்

படத்தின் கதையைக் கேட்டு, பிடித்திருந்ததால் நான் படத்தை எடுத்துக்கொள்ள முன் வந்தீர்களா?

"படத்தின் கதையைக் கேட்காமல் எந்தத் தயாரிப்பாளரும் படம் எடுக்க மாட்டார்கள் என்பது வாஸ்தவம்தான். ஆனால் நான் 'வேட்டையாடு விளையாடு' படத்தின் கதை என்னவென்றே கேட்கவில்லை. அதில் எனக்கு ஆர்வமும் இல்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால், இயக்குனர் கௌதம் என்னிடம் கதை சொல்ல முன்வந்த சில தருணங்களில், நான் கதை கேட்க மறுத்துவிட்டேன். இன்றுவரை படத்தின் முழுமையான கதை என்ன என்பது எனக்குத் தெரியாது. இதற்கெல்லாம் காரணம் கௌதம் மீது நான் வைத்திருக்கும் நம்பிக்கையும், மதிப்பும்தான். கமல் + கௌதம் காம்பினேஷன் என்கிற போது, நான் ஏன் கதை கேட்க வேண்டும்?"

படத்தைத் தொடர்ந்து எடுக்க ஆரம்பித்த பின், 'இந்தப் படத்தில் கை வைத்திருக்க வேண்டாமோ' என்ற எண்ணம் எப்போதாவது ஏற்பட்டதா?"

"இல்லை. என்னால் ஒருவருக்கு உதவி செய்ய முடியும் என்றால், நிச்சயம் செய்வேன். முடியாது என்றால் 'என்னால் முடியாது' என்று சொல்லிவிடுவேன். இழுத்தடிக்க மாட்டேன். என்னால் முடியாதபோதுகூட சில சமயங்களில் என் சக்திக்கு மீறி உதவியதும் உண்டு. ஆனால், 'வேட்டையாடு விளையாடு' படத்தின் கதையே வேறு. இதில் ஏகப்பட்ட சிக்கல்கள் என்று எனக்குத் தெரியும். எனவே அவற்றை எப்படிச் சமாளிப்பது என்று திட்டமிட்டு, என்னைத் தயார்படுத்திக் கொண்டேன்.

எனக்கு வெறுமனே பிரச்னைகளைச் சொல்லிப் புலம்புகிறவர்களைக் கண்டால் பிடிக்காது. பிரச்னைகளை தைரியமாய் எதிர்கொண்டு, அவற்றுக்குத் தீர்வு காண்பது எனக்குப் பிடித்த சவால். எனவே வருந்தும்படியான சூழல் எனக்கு நேரவில்லை."

திடீர் திடீரென்று பிரச்னைகள் முளைத்துக் கொண்டிருக்கின்றனவே?

"இவை நான் எதிர்பார்க்காத பிரச்னைகள். எனக்குத் தன்னம்பிக்கை அதிகம். உண்மையைப் பேசுபவன்; நேர்மையாக இருக்க வேண்டும் என நினைப்பவன். யாரையாவது ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் நான் எப்போதும் செயல்பட்டது கிடையாது. எனவே என்னை இறைவன் இதுவரை கைவிட்டது கிடையாது."

படம் திட்டமிட்டபடி ரிலீஸ் ஆகிவிடுமல்லவா?

"கண்டிப்பாக வரும் என்று



"வேட்டையாடு விளையாடு கதையே எனக்குத் தெரியாது!"

எனக்கு நம்பிக்கை இருக்கிறது. சில பல கோடிகள் வீணாகிப்போன சூழ்நிலையில், இந்தப் படம் எடுத்து முடிக்கப்பட்டுள்ளது. திரை உலகில் இருக்கும் எல்லோருமே, திரையுலகம் வளர்ச்சியடைய வேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். அனைத்து சங்கங்களும் சினிமா உலகம் ஆரோக்கியமாய் இருப்பதற்காகத்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, 'வேட்டையாடு விளையாடு' படத்தை வெற்றிகரமாக முடித்துள்ள சூழ்நிலையில் இனியும் பிரச்னையால் படம் பாதிக்கப்பட்டால், நஷ்டம் எனக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இண்டஸ்ட்ரிக்கும்தான். இந்தப் படத்தை முடிக்காவிட்டால், அவர்கள் பிரச்னை பெரிதாகுமே தவிர, தீர்ந்துவிடாது. இதை எல்லாரும் புரிந்துகொள்ள வேண்டும். சங்கத் தலைவர்கள் பாசிடிவ் அணுகுமுறை கொண்டிருக்கிறார்கள். எனவே, பிரச்னைகள் எல்லாம் சுமுகமாய் தீர்க்கப்பட்டு, தமிழ்ப் புத்தாண்டில் வேட்டையாடி விளையாட கமலும், கௌதமும் நிச்சயம் வருவார்கள். படம் மாபெரும் வெற்றி பெற்று சாதனை படைக்கும்."

- மௌலி



* நேர்காணல்...



* ... காத்திருப்போர்



* உசேன்

வச்சிருந்தாங்களாம். பேரைச் சொல்லி கூப்பிட்ட உடனே உ.பிங்க உள்ள போறாங்க... போனவுடனே தளபதிதான் அப்ளிகேஷனைப் பாக்குறாராம். ஆன துரைமுருகனும், ஆற்காட்டாரும்தான் இன்டர்வியூவுல அதிகமா கேள்வி கே குறாங்களாம். அதிகபட்சம் ஒரு நிமிஷ துக்கு மேல் இன்டர்வியூ நடக்கறதில்ல இன்டர்வியூ முடிச்சுட்டு வெளில வந் ஒரு தொண்டரை ஓரங்கட்டினேன்.

."போனவுடனே தலைவருக்குப் தளபதிக்கும் வணக்கம் போட்டேன் மாவட்ட அளவுல எந்தப் பொறுப்பு இருந்திருக்கீங்க? எவ்ளோ செல பண்ண முடியும்? உங்களுக்கு சீட் தரலைன்னா யாருக்குத் தரலாம்?ஓ கேட்டாங்க. ரொம்ப படபடப்ப இருந்துச்சு... பார்க்கலாம்... சீட் கெடைச்சா நிப்பேன். இல்லன்னா எலக்ஷன் வேல பார்ப்பேன்"னு சொ விப்புட்டு ஜூட் விட்டாரு.

அடுத்து கலைஞர் கருவூலத்துகிட்ட உட்கார்ந்திருந்த ஒரு தொண்டர்கிட்ட பேச்சுக் கொடுத்தேன். "திருப்போரூ தொகுதியில சீட்டு கேட்டு போன தடவையும் பணம் கட்டியிருந்தேன் இந்தத் தடவையும் கட்டியிருக்கேன் இன்டர்வியூ இப்போதான் முடிஞ்சது தலைவர் எனக்கு வாய்ப்புக் கொடுத்த ரொம்ப சந்தோஷப்படுவேன். எப்பட இருந்தாலும் அங்க தி.மு.க ஜெயிக்கறது உறுதி"ன்னு ஒரே போடா போட்டுட் இஞ்சி டீ குடிக்கறதுல பிஸியா யிட்டாரு

அறிவாலயம் இப்போ ஜெகஜ் ஜோதியா இருக்குதுப்பு. நான் விசிட்டுக் குப் போன அன்னிக்கு அம்மாவோட சிறு தாவூர் பங்களா இருக்குதே... அந்த திருப் போரூர் தொகுதி இருக்குற செங்கல்பட்டு மாவட்டத் தொகுதிகளுக்குப் பணம் கட்டுன உடன்பிறப்புங்ககிட்ட இன்டர் வியூ நடந்துச்சு. வந்திருந்த கேண்டி டேட்டுகளை ஷாமியானா கட்டி, நாற் காலி போட்டு உட்கார வச்சிருந்தாங்க. கையில மைக்கோட வாசல்ல குந்திக் கிட்டு, ஒவ்வொருத்தர் பேரையும் கூவிக் கூவி அழைச்சிக்கிட்டு இருந்தாரு நம்ம ஆயிரம்விளக்கு உசேன்பாய். கேட்டுக்குப் பக்கத்துல அஞ்சு நாற்காலிங்க. அதுல அடுத்து இன்டர்வியூ பண்ணப் போறவங்களைக் குந்த வச்சிருந்தாங்க.

இன்டர்வியூ ரூமுல கலைஞரு, ஸ்டாலினு, பேராசிரியரு, ஆற்காட்டாரு, துரைமுருகன், பரிதி இளம்வழுதி, எஸ்.பி. சற்குணம் இவங்களோட சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளரையும் உட்கார

நிழல் இருக்குற பக்கமா போல

மேன்னு வாசல்ல இருக்குற பார்க்குக்குப் போனேன். அங்க தரையில போட்டிருக்குற கடைகள்ல செம கலெக்‌ஷன். கலைஞர், ஸ்டாலின் போட்டோ ஒட்டுன பாக்கெட் டைரி, ஸ்டிக்கருங்களை வாங்குறதுல உ.பிங்க ரொம்ப பிஸியா இருந்தாங்க. ஒரு தொண்டரு ஸ்டாலின் படம் போட்ட டைரியைப் பாக்கெட்டுல வச்சுக்கிட்டு, “டேய்... படம் வெளில தெரியுதா... தலைவர், தளபதி கண்ணுல படுமா... நல்லா பார்த்துச் சொல்லு”ன்னு செக் பண்ணிக்கிட்டே உள்ளே போனாரு. பணம் கட்டுன ஒரு லேடி இன்டர்வியூ ரூமுக்குள்ள கணவரோடதான் போவேன்னு அடம்பிடிக்க, “அட என்னம்மா நீ... ஜெயிச்ச பின்னால அசெம்பிளிக்குத் தனியாத்தாம்மா போவணும். அதே மாதிரி நெனச்சுக்க”ன்னு சொல்லி, உள்ளே அனுப்பினாங்க.

ஒருத்தரு வெளில வரும்போதே சீட்டு கெடைச்சுட்ட மாதிரி சந்தோஷமா வந்தாரு. என்ன... ஏதுன்னு விசாரிச்சேன். “தம்பி... எனக்கு எலக்‌ஷன்ல நின்னு செலவு பண்ற அளவுக்குப் பெருசா வசதி கெடையாது. ஆனா ஐயாயிரம் கட்டுனா, எங்க தலைவர கிட்டக்க தரிசனம் பண்ணலாம். அவரே நம்மகிட்ட நேர்ல பேசுவாரு. அதுக்காகத்தான் வந்தேன்”னு சொன்னப்போ, அந்தத் தொண்டரோட முகத்தைப் பார்க்கணுமே..ஹூம்... இந்த மாதிரி தொண்டருங்கதானே கட்சியோட சொத்துன்னு நெனச்சுக்கிட்டே கலைஞர் அரங்கம் பக்கம் போனேன். அங்க குந்திக்கிட்டு ரெண்டு பேரு பேசிக்கிட்டு இருந்தாங்க “ஏண்ணே... இங்கதான் சன் டீவி இருக்குதாம்ல... அதுக்கு எப்டி போறதாம்”னு ஒருத்தரு கேட்க, அதுக்கு இன்னொருத்தரு, “அதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிஞ்சு அறிவாலயந்தான் சன் டீ.வி. சன் டீவிதான் அறிவாலயம்”னாரு.

அடேயப்பா... எம்புட்டுத் தெளிவா இருக்காங்கப்பு உடன்பிறப்புங்க!

படங்கள்: **ராஜன்**

ஒற்றன்

தலைவர் தரிசனம் ரூ.5,000!



"தெருவெல்லாம் ஒரே குப்பை - கூளம்; இவ்வளவு அழகான நமது கிராமத்தை இவ்வளவு அழுக்காக நாம் வைத்துக்கொள்ளலாமா...?" - அழகும் அறிவும் நிறைந்த ஒரு பெண், ஆறேழு இளைஞர்களை நோக்கி இப்படி ஒரு கேள்வி கேட்டால் என்ன ஆகும்...?

"அத்தனை இளைஞர்களும் தெரு பெருக்கும் நீண்ட துடைப்பங்களைத் தூக்கிக்கொண்டு பிலஹரி ஸ்வரஜதியின் துள்ளல் ஸ்வரங்களுக்கு நாட்டியமாடுவார்கள்" என்று சொன்னால் நம்ப மாட்டீர்கள்! ஆனால், நயமும் நூதனமும் மிக்க இத்தகைய காட்சிகள் நிறைந்திருந்தன 'ரூரல் ஃபான்டஸி' என்ற நாடகத்தில்.

நாடகம் என்றுகூட அதைச் சொல்ல முடியாது... இயக்குனர் கௌரி ராம்நாராயணின் கனவு என்றுதான் சொல்ல வேண்டும் - அழுத்தம் திருத்தமாக நனவான கனவு! தாத்தா கல்கி கிருஷ்ணமூர்த்தியின் 'கணையாழியின் கனவு' சிறுகதையை பேத்தி கௌரி (ஆனந்தியின் மகள்), இசை - நடன - நாடகக் கோவையாகப் படைத்து வழங்கினார்.

சுதந்திரப் போராட்ட காலத்துப் பின்னணியில் ஒரு தஞ்சை குக்கிராமத்தில் நடைபெறும் வேடிக்கை நிகழ்வுகளை பாரதி பாடல்கள், பங்கிம் சந்திரரின் கீதம், சகுந்தலை திரைப்படப் பாடல்கள், ஜோரான கர்நாடக சங்கீதம், அங்கங்கே கொஞ்சம் பரதநாட்டியம், நிறையவே கலாக்ஷேத்ரா பாணி தெறிப்புகள் என்று பின்னிப் பிணைத்து வழங்கியபோது, கதையின் சுவையோடு, காலகட்டத்தின் பிரதிபலிப்பும், தஞ்சை மண்ணின் நெடு நல் வாடையும் சென்னை மியூசியம் தியேட்டர் அரங்கில் பரவி வியாப்பித்தன.

மார்ச் 10, 11, 12 மூன்று தினங்களும் நாடகக் கலைஞர்களுடன் இசைக் கலைஞர்கள் டி.எம்.கிருஷ்ணா, சங்கீதா சிவகுமார், அம்ருதா முரளி (வாய்ப்பாட்டு + வயலின்), அருண் பிரகாஷ் (மிருதங்கம்) ஆகியோர் தோள் கொடுத்து கணையாழியின் கனவையும் கௌரியின் கனவையும் தூக்கி நிறுத்தினர்.

தி மெட்ராஸ் பிளேயர்ஸ் நாடகக் குழுவைச் சேர்ந்த இயக்குனர் பாகீரதிக்காக இப்படைப்பை எழுதி உருவாக்கினாராம் கௌரி ராம்நாராயண். பாகீரதி கடந்த ஆண்டு மறைந்துவிட, தி மெட்ராஸ் பிளேயர்ஸ் கௌரியையே இயக்கச் சொல்லிக் கேட்டிருக்கிறது. 'ஜஸ்ட் யுவர்ஸ் ரெபர்டரி' என்ற மற்றொரு குழுவும் இணைந்திருக்கிறது. பாகீரதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது இந்த நாடகம். அன்னிய மொழி நாடகங்களையே பெரும்பாலும் ஆங்கிலத்தில் வழங்கி வந்த குழுவினருக்கும், தமிழில் ஊறிய ஒரு படைப்பை அரங்கேற்றும் புது அனுபவம். தஞ்சை கிராமத்துப்பக்க தமிழர்கள் பேசும் உச்சரிப்பு, பாவத்துடன் ஆங்கில உரையாடல்கள் அமைந்ததால் தமிழ் நாடகம் பார்க்கும் உணர்வே ஏற்பட்டது.

கட்டியக்காரன், குடுகுடுப்பைக்காரன், குறத்தி என்று கதை நகர்த்தும் பாத்திரங்கள் அரங்கின் பல நுழைவு வாயில்களிலிருந்தும் அவ்வப்போது தோன்றி பார்வையாளரிடையே வளைய வந்து களிப்பூட்ட, பங்கேற்ற அத்தனை கலைஞர்களும் அற்புதமாக நடித்திருந்தார்கள்.

- அலமு



கணையாழியின் கனவும் கௌரியின் கனவும்..!


You can
Win 75% Scholarship
on total course fee
SCHOLARSHIP APTITUDE TEST
13th Year
SAT 2006
PROVE YOUR INTELLIGENCE & WIN SCHOLARSHIP
SAT 2006
SCHOLARSHIP APTITUDE TEST
FOR DESERVING STUDENTS
இத்தேர்வுக்கு எவ்வித கட்டணமும் கிடையாது
உங்கள் அறிவுத்திறனை நிரூபித்து வெல்லுங்கள்!
Exam Date:
APRIL
2
SUNDAY
JAVA
ABOUT THE EXAMINATION
• No Entry fee for SAT exam.
• SAT exam question paper comprises of 25 objective type questions from General Knowledge, Science, Geography and Mathematics.
• SAT exam will be conducted in English / Tamil.
• No age bar to participate in this exam.
• Basic Qualification must be above 8th Std.
CSC
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION
SAT is conducted only once in a year - Don't miss it.
தவணைமுறை வசதியும் உண்டு
Collect FREE admit card from your nearest CSC centres

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.

பல்வேறு பற்குச்சிகளின் பல்வேறு பலன்கள்




ஆலும், வேலும் பல்லுக்கு உறுதி தருபவை. நாயுருவிக்குச்சி தைரியத்தையும், மேதையையும், அறிவையும், மென்மையான குரலையும் தரும். மாதுளங்குச்சி, வெட்பாலைக் குச்சி, மருதம்குச்சி ஆகியன அழகை தரும். ஜாதி மல்லிக்குச்சி, மந்தாரகுச்சி கெட்ட கனவுகளைப் போக்கும். எருக்கு வீரியத்தைக் கட்டும். ஆல் பசியைத் தூண்டும். புங்கு வெற்றி நோக்கை வளர்க்கும். இச்சி பொருள் சேர்க்கும். இலந்தை இனிய குரல் தரும். கருங்காலி வாய் நாற்றத்தைப் போக்கி மணம் தரும். வில்வம் செல்வத்தைப் பெருக்கும். அத்தி பேச்சு வன்மையை வளர்க்கும். மா ஆரோக்கியத்தை நிலைக்கச் செய்யும். வேம்பு, வாய் நாற்றம், பற்களில் சீழ், வேக்காளம், ஈறுகளில் வலி இவைகளைப் போக்கும். கடம்பு தைரியத்தையும், மேதையையும் அதிகப்படுத்தும். செண்பகம் வாக்குவன்மை, கேட்டது மறக்கா திருத்தல் இவைகளைத் தரும். பொன் வாகை புகழ், அழகு, ஆயுளைத் தரும்.

எங்களுடைய பல இனிப்பு வகைகளும், பல கார வகைகளும் அவற்றிற்கு தகுந்த பல்வேறு நற்பலன்களை அளிக்கக் கூடியவை.

கல்யாண வைபவங்களுக்கு

சீர்முறுக்கு, சீர் முள்ளுத்தேன்குழல், அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய், வகைகள் ஆர்டரின் பேரில் செய்துத் தரப்படும்.



தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

எண்.24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு, சென்னை-20.
போன் : 24915662, 24914213

1/1 G, பிளாக், 8வது குறுக்குத் தெரு,
7வது பிரதான சாலை, அண்ணா நகர்,
சென்னை. போன் : 52634433